மார்ச் 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org

Vol.8, Issue 10 | Annual Subscription ₹ 480
Rotary News, March 2026, Chennai



இந்தியா
ஒரு ரோட்டரி
அமைதி மையத்தைப்
பெறுகிறது.

Rotary

ADVT.

RJ GARBAGE BANK
குப்பை வங்கி

DPIIT
#startupindia
DIPP205349

EXCLUSIVE

# WORKSHOP ON WASTE MANAGEMENT

Certificate course for environmental enthusiasts, entrepreneurs working on sustainability,for students who want to create a positive impact in their community

- **Expert-Led sessions with hands-on Demo**
- **Take-home toolkit(Guidelines booklet for training)**
- **Get certified & Join the network of Eco-Leaders**

Register NOW

**28/3/26**
**10.00 AM TO 3.00 PM**

Location:
**Poornam Porkodi Hall, Virudhunagar,**
**8754204222,84388 52866**

Visit :
**www.ilovewaste.in**









# உள்ளே




12
புனே, சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தில் ரோட்டரியின் எட்டாவது அமைதி மையம்



20
RYLA மூலம் தொழில்முனைவுத் தீப்பொறி



38
இளம் அறிவியலாளர்களை வளர்க்கும் ரோட்டரி



42
தெருவோரக் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல்



52
வண்ணங்களிலிருந்து வகுப்பறை வரை



54
ரோட்டரி பாரா டேபிள் டென்னிஸ் போட்டி



60
கர்ப்பப்பை வாய் புற்றுநோயிலிருந்து பழங்குடியினப் பெண்களை பாதுகாத்தல்


Rotary

A publication of Rotary Global Media Network

நம் சுற்றுச் சூழலை பாதுகாக்க மின்பதிப்புக்கு மாறவும்


## மின்னிதழ் கட்டணம் குறைப்பு

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹324**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## ஆர்லாண்டோவில் இந்தியாவின் பெருமைமிகு தருணங்கள்

*சர்வதேச மாநாட்டில் உயர்ந்து நிற்கும் இந்தியா (பிப்ரவரி இதழ்) என்ற உங்கள் தலையங்கத்தைப் படித்தபோது நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இந்தியரான DGE ரவிசங்கர் டகோஜு, ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.500 கோடியை நன்கொடையாக வழங்கியிருப்பது குறித்து நாம் பெருமை கொள்கிறோம். இது ரோட்டரி உலகில் ஒரு முன்மாதிரியான சாதனையாகும். மேலும், ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் தலைவரான RID M முருகானந்தம், ரோட்டரியின் துணைத் தலைவராக (2026–27) உயர்த்தப்பட்டிருப்பது மிகச்சிறந்த செய்தியாகும். இந்த இரண்டு சிறந்த இந்திய ரோட்டேரியர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.*

*அருண் குமார் தாஷ், RC பாரிபடா – D 3262*




*ரோட்டரி முன்னோடிகளின் பெருமைமிக்க பாரம்பரியத்தைத் தொடர்ந்து, இந்தியா மீண்டும் இந்தத்தலைமைப் பதவியைப் பெற்றுள்ளது. இந்த நியமனம், ரோட்டரி உலகில் இந்தியாவின் வளர்ந்து வரும் அறநெறி மற்றும் சேவைத் தலைமையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இது இந்தியாவுக்கும், தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக இந்த அசாதாரணத் தலைவரை வளர்த்து உருவாக்கிய RID 3000-க்கும் ஒரு பெருமையான தருணமாகும். பண்புகளில் வேரூன்றிய தொடர்ச்சியான சேவை, உலகளாவிய நம்பிக்கையைப் பெறும் என்பதற்கு இது சான்றாகும்.*

*N செந்தில் நாதன், RC மதுரை இன்னோவேட்டர்ஸ் – D 3000*

*உங்கள் பிப்ரவரி மாத தலையங்கம் சுட்டிக்காட்டியது போல, ஆர்லாண்டோவில் நம் அனைவருக்கும் அது ஒரு பெருமைக்குரிய தருணமாக இருந்தது. RID முருகானந்தம் சர்வதேச ரோட்டரியின் துணைத் தலைவராகப் பொறுப் பேற்பது ஒரு தனிப்பட்ட மைல்கல் மட்டுமல்ல, இது ஒரு ரோட்டராக்டராகத் தொடங்கி, இன்று ரோட்டரியின் மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றை எட்டியுள்ள ஒரு வரலாற்றுப் பயணம்.*

*அவரது இந்த சாதனை, 35 ஆண்டுகால தளராத சேவை மனப்பான்மையைப் பிரதிபலிக்கிறது. இது திடீர் உயர்வல்ல, மாறாகத் தொடர்ச்சி, உறுதி, பணிவு மற்றும் ஆர்வத்துடன் கூடிய சேவையால் கட்டமைக்கப்பட்ட நிலையான உயர்வு. 71 ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்று சிறந்த இந்திய*

*பிப்ரவரி இதழில் ஆசிரியரின் குறிப்பைப் படித்த பிறகு, பணிவு மற்றும் பெருந்தன்மையின் இலக்கணமாக விளங்கும் DGE டகோஜு மற்றும் பவோலா பற்றி அறிய ஆர்வத்துடன் பக்கங்களைப் புரட்டினேன். அவர் தனது வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொண்டதையும், இப்போது சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பது தனது கடமை என்று நினைப்பதையும் கண்டு நான் வியந்தேன். நம் நாட்டில் உன்னதமான ஆன்மாக் களுக்குக் குறைவில்லை. டகோஜு மற்றும் பவோலா போன்ற மனிதர்களின் வடிவில் கடவுள் வாழ்கிறார். மாணவிகள் அதிகம் பயன்பெறும் ஒரு தொலைதூர கிராமப் பள்ளியைத் தத்தெடுத்த RC அக்கோலாவிற்குப் பாராட்டுகள். RC அக்கோலாவின் தலைமையில் இருக்கும் எண்பது வயதைக் கடந்த ரோட்டேரியர் ராதேஷியாம் மோடி அவர்களுக்கும் பாராட்டுகள்.*

*ராஜ் குமார் கபூர், RC ரூப் நகர் – D 3080*

### சபாஷ் RC பாவ்நகர்!

பாவ்நகர் ரோட்டரி சங்கத்தைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரை ரோட்டரியின் தத்துவத்தையும், இந்தியாவின் மறக்கப்பட்ட குழந்தைகளுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்பதையும் உள்ளடக்கியிருந்ததால் என்னைக் கவர்ந்தது. நேரம் என்பது கொடுக்கப்படும் கொடைகளில் மிகவும் குறைத்து மதிப்பிடப்படும் ஒன்றாகும்; ஒருமுறை கொடுத்துவிட்டால் அது எப்போதும் திரும்பக்கிடைக்காது, மற்ற ஆதாரங்களைப் போல அதை மாற்றீடு செய்யமுடியாது. அதனால்தான் அது விலைமதிப்பற்றது. நேரத்தைக் கொடுப்பது என்பது ஒரு பரிமாற்றம் அல்ல, அது நெருக்கமானது. உங்கள் வாழ்க்கையைச் சற்று நிறுத்தி மற்றவர்களின் வாழ்க்கையில் நீங்கள் நுழையும் போது, அவர்கள் உங்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை அது அவர்களுக்குச் சொல்கிறது. என்னைப் பொறுத்தவரை, இந்தக் கட்டுரை ஒரு சாதாரணக் காரணத்திற்காக உங்கள் நேரத்தைக் கொடுத்து, பின்னர் உங்கள் அர்ப்பணிப்பால் அதை உன்னதமானதாக மாற்றுவதன் சாராம்சமாகும். ஒவ்வொரு இதழுக்காகவும் நான் காத்திருக்கிறேன்.

ஜாரீர் தாதாச்சான்ஜி
RC பூனா — D 3131

பாவ்நகரின் மூன்று திட்டங்களான நம்பிக்கை ஒளி, டிஜிட்டல் நூலகம் மற்றும் மியாவாக்கி காடுகள் ஆகியவை உண்மையிலேயே ஊக்கமளிப்பவை. 70 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு இந்தியர், ரோட்டரி இயக்குநர் M முருகானந்தம் அவர்கள் சர்வதேச ரோட்டரி துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. கிராமப்புற பொறியியல் மற்றும் MBA மாணவர் களுக்கு அவர்களின் நேர்காணல் திறன்களுக்கு உதவ நான் கேரியர் ஹப் என்ற வாட்ஸ்அப் குழுவை நடத்தி வருகிறேன். முகப்புக் கட்டுரையில் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சி, எனது பணியைத் தொடர எனக்கு உத்வேகம் அளித்துள்ளது.

சிவபெருமாள் சுப்ரமணி
RC வாலாஜாபேட் — D 3231

## புன்னகையும்... கடுகடுப்பும்

*RC அக்கோலாவின் சேவை நடவடிக் கைகளை மிகச்சிறப்பாகப் பதிவு செய்ததற்காக ரஷீதா பகத் அவர்களுக்கு நன்றி. வார்த்தைகளை அழகான உரையாக மாற்றும் ஒரு தனித்திறமை அவருக்கு உண்டு. பிப்ரவரி இதழில் வாசிப்பையே சுவாரஸ்யமாக்கும் பல அழகான கட்டுரைகள் உள்ளன. அதில், கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி' என்ற கட்டுரை நம் கவனத்தை ஈர்க்கிறது.*

*மற்றொரு கட்டுரை, ஒரு கனிவான ரோட்டேரியரின் கொடைத் தன்மையைப் பேசும் ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.500 கோடி நன்கொடை. அடுத்த இதழுக்காக ஒருவரை காத்திருக்கச் செய்கிறது. நாடு முழுவதும் ரோட்டேரி யர்களால் செய்யப்படும் சிறந்த சமூகப் பணிகளைச் சிறப்பாகப் பதிவு செய்யும் ரோட்டரி நியூஸ் குழுவிற்கு வாழ்த்துகள்.*

*ராதேஷியாம் மோடி*
RC *அக்கோலா* — D 3030

*இந்திய பாதுகாப்புப் படைகள் ஏன் அச்சமற்றவை என்ற மிகச்சிறந்த கட்டுரையில் நமது ராணுவ அதிகாரி களின் தைரியம், விசுவாசம் மற்றும் தேச பக்தி ஆகியவற்றைப் பற்றி படித்தபோது நாங்கள் தலை வணங்குகிறோம். தலைமுறைகளை ராணுவத்தில் சேரத் தூண்டுவது பெயர், உப்பு மற்றும் சின்னம். நமது பெயர் பாரதம், நமது உப்பு என்பது இந்த மண், நமது சின்னம் என்பது நமது தேசியக் கொடி. இந்த முன்றிற்காக நாம் எந்த எல்லைக்கும் செல்லலாம் என்று பிரிகேடியர் பசேரா கூறுகிறார்.. இந்த ஊக்கமளிக்கும் கட்டுரைக்கு நன்றி மேடம்.*

*டாக்டர்* D *ஹரிச்சந்திர ராமா*
RC *அனந்தபூர்* — D 3160

*கடைசி பக்கத்தில் வெளியான மெதுவாக வாசித்தல், வேகமாக அருந்துதல் (பிப்ரவரி இதழ்) என்ற கட்டுரை பற்றிய கருத்து இது. ஆசிரியரின் சம்பளம் குறைவாக இருந்தபோதிலும், அவர் புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவது பற்றிப் பேசியிருப்பது துரதிர்ஷ்டவசமானது.*

*ரோட்டரி நியூஸ் என்பது பலரால் படிக்கப்படும் ஒரு இதழ். ரோட்டேரியர் களால் செய்யப்படும் சேவை குறித்த ஊக்கமளிக்கும் கட்டுரைகளைப் படித்து ரோட்டேரியர்கள், அவர்களது குடும்பத்தினர், ரோட்டராக்டர்கள் மற்றும் இளைஞர்கள் உத்வேகம் பெறுகிறார்கள். இத்தகைய கருத்துக்களுக்கு ஏன் இடம் கொடுக்க வேண்டும்? குறைந்தபட்சம், மது அருந்துவதும் புகைபிடிப்பதும் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்ற எச்சரிக்கையையாவது அளித்திருக்கலாம்.*

L *ராதாகிருஷ்ணன்*
RC *சென்னை* IT *சிட்டி* — D 3233

*ஹரிந்தர் பவேஜாவின் தே வில் ஷூட் யூ மேடம் என்ற புத்தகத்தின் விமர்சனம் நமது இதழுக்குத் தேவையற்றது என்று நான் நினைக்கிறேன். நாம் சமூகத்திற்குச் சேவை செய்யவே ரோட்டரியில் இணைந்துள்ளதால், நமது அமைப்பை வலுப்படுத்த இத்தகைய கட்டுரைகளைத் தவிர்ப்பது நல்லது.*

D *ஜோசப் அலெக்சிஸ் ரோசர்*
RC *காரமடை* — D 3203

*நான் ரோட்டரி நியூஸின் தீவிர வாசகன். சிந்தனையைத் தூண்டும் மற்றும் வாழ்க்கைக்குப் பயனுள்ள பாடங்களைக் கூறும் கட்டுரைகளில் இருந்து நான் நிறைய கற்றுக்கொண்டேன். தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களைப் பகிர்வது, மற்ற சங்கங்கள் தேவையான சமூக சேவைத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்த உதவுகிறது.* TCA *சீனிவாஸ் ராகவனின் கட்டுரை எப்போதும் இந்த அழகான இதழுக்கு ஒரு சிறந்த முடிவாக அமைகிறது. உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பு என இரண்டிலும் ஒவ்வொரு மாதமும் உலகத்தரம் வாய்ந்த இதழை எங்களுக்கு வழங்கும் ரோட்டரி நியூஸ் குழுவிற்கு வாழ்த்துகள்.*

*பிப்ரவரி இதழைப் படித்தது என்னை முன்பை விட ஒரு சிறந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியராக மாற்றியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த ரோட்டேரியர் என்பதில் என்னைப் பெருமைப்பட வைத்தது. சர்வதேச மாநாட்டில் உயர்ந்து நிற்கும் இந்தியா என்ற ஆசிரியரின் குறிப்பில் குறிப்பிட்டது போல, ஆர்லாண்டோ மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். சத்தமின்றி கட்டமைக்கப்படும் அமைதி என்ற* RID *நாகேஷின் செய்தி ஊக்கமளிக்கிறது.*

*பிரணேஷ் ஜாகிர்தார்*
RC *பிஜப்பூர் நார்த்* — D 3170

RC பாவ்நகரின் திட்டங்கள் மிகச் சிறந்தவை மற்றும் ஊக்கமளிப்பவை. குறிப்பாக, கிராமப்புற குழந்தைகளிடையே கல்வியறிவைப்பரப்பும் ப்ராஜெக்ட் எடுகேர் மனதைத் தொடுவதாக உள்ளது. சங்க உறுப்பினர்களுக்குப் பாராட்டுகள்.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

அட்டைப்பட விளக்கம்:
S கிருஷ்ணப்ரதீஷ்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லதுrotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

Have you read
**Rotary News Plus?**
This online publication is sent to the e-mail ID of every subscribing member.
Read **Rotary News Plus** on our website
*www.rotarynewsonline.org*



மோனிகா லோஜின்ஸ்கா

# சமூகச் செயல்பாட்டின் வீச்சு

நீர் நம்மையெல்லாம் இணைக்கிறது. தொலைவிலுள்ள காட்டிலிருக்கும் ஓர் ஆற்றில் தொடங்கி, நகரப்பகுதியைக் கடந்து ஓடும் ஓர் ஓடை வரையில் நன்னீர்ச் சூழமைப்புகள் மனித குலத்தை நீடிக்கச்செய்கின்றன. எனினும், இந்த நீர் நிலைகளின் மீதான அழுத்தம் கூடிக்கொண்டே போகிறது. மாசு, மிகுதியான பயன்பாடு, காலநிலை அழுத்தங்கள் ஆகியவை நன்னீரைப் பாதுகாப்பது ஒரு பன்னாட்டுச் சவால் என்று நமக்கு நினைவுபடுத்துகின்றன.

மாற்றம் சமூகங்களுக்குள் தொடங்குகிறது என்று ரோட்டரி எப்போதும் நம்பி வந்துள்ளது. இப்போது, சமூகச் செயல்பாட்டின் தாக்கம் எவ்வளவு தொலைவுக்குப் பயணம் செய்யக்கூடும் என்பதைக் காண்பதற்காக நாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். உள்ளூர்ச் சேவை இணைக்கப்பட்டு, அளவிடப்பட்டு, பகிர்ந்துகொள்ளப்படும்போது, அது புவியியல், எல்லைகளைத் தாண்டி நீளும் ஆற்றலாகிறது.

பனாமா நார்டெஸ்டெ ரோட்டரி சங்கம் வழிநடத்திய ஒரு நீர்த் திட்டம் கனோ மற்றும் சிறு படகால் மட்டும் அணுகக்கூடிய பகுதியான பனாமாவின் டரியென் மாகாணத்தில் உள்ள உள்ளூர்ச் சமூகங்களுக்குச் சேவையாற்றியது. இங்குள்ள குடும்பங்களுக்குச் சாலைகள் இல்லை, மின்சாரம் குறைவு; இவர்கள் பதப்படுத்தப்படாத ஆற்று நீரைச் சார்ந்திருக்க வேண்டி யிருந்தது. அதனால் இவர்கள் பெரிய நல ஆபத்துகளை எதிர்கொண்டார்கள்.

இந்தச் சமூகங்களை அணுகுவதற்காக ரோட்டரியன்கள் பொருட்கள், சேவைகளை வழங்கும் முறையையே மீண்டும் சிந்திக்கவேண்டியிருந்தது. அமெரிக்காவிலுள்ள ஒரு கூட்டாளர் சங்கத்துடனும், ஒரு சிறப்பு நீர் அமைப்புடனும் சேர்ந்து பணியாற்றிய இந்தச் சங்கம் சூரிய ஒளியில் இயங்கும் நீர்ப் பதப்படுத்தல் அமைப்புகளை அறிமுகப்படுத்தினார்கள். இந்த அமைப்பை இயக்கவும் பராமரிக்கவும் உள்ளூர்த் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

நன்னீருக்கான சமூகச் செயல்பாடு முன்னெடுப்பின் வழியாக ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்துடன் ரோட்டரி நடத்தும் கூட்டுப்பணியின் இதயத்திலும் இதே எண்ணம்தான் உள்ளது. உலகம் முழுவதும் ரோட்டரி, ரோட்டராக்ட் சங்கங்கள் நீர்வழிகளை மீட்டமைக்கின்றன, ஈரநிலங்களைப் பாதுகாக்கின்றன, முதன்மையான நன்னீர் வளங்களைப் பாதுகாக்கின்றன. இந்தப் பணியைப் பொருத்தவும் அளவிடவும் தேவையான தரவுகளைத் திரட்டுவதன் மூலம் நாம் அதன் தாக்கத்தை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ளலாம், உள்ளூர்ச் சேவை பன்னாட்டுத் தீர்வுகளுக்குப் பங்களிப்பது எப்படி என்று காண்பிக்கலாம்.

தரவுமட்டும் போதாது. தரவு என்பது நாம் கற்கவும், ரோட்டரியின் சேவை உண்மையான, அளக்கக் கூடிய மாற்றத்தை வழங்கும் வகையில் அதை மேம்படுத்தவும் உதவுகிற ஒரு கருவி. உள்ளிடப்படும் ஒவ்வொரு திட்டமும், மீட்டமைக்கப்படும் ஒவ்வொரு நீர்வழியும் மேற்பார்வை மற்றும் பொறுப்பின் ஒரு பகிர்ந்து கொள்ளப் பட்ட கதையைச் சேர்க்கின்றன. நீங்கள் மேலும் கற்க: *communityactionforfreshwater.org*, என்ற இணைய தளத்தை பாருங்கள்.

நாம் உள்ளூர்ச் செயல்பாட்டைப் பன்னாட்டுப் பார்வையுடன் இணைக்கும் போது, நீடித்த மாற்றத்தை உண்டாக்கும் ரோட்டரியின் திறனை வலுப்படுத்துகிறோம். ஒன்றாகச் சேர்ந்து, நம் வீச்சை நீட்டிப்பதன் மூலமும் இணைந்து பணியாற்றுவதன் மூலமும் நாம் உண்மையாக நன்மைக்காக ஒருங்கிணைகிறோம்.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேஸ்ஸோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# நம்பிக்கை அளிக்கும் புனே அமைதி மையம்

பரந்து விரிந்திருக்கும், பசுமையான பல்கலைக்கழகம் மற்றும் பள்ளி வளாகங்கள் எப்போதுமே அங்கு வருபவர்களை ஈர்க்கும் தன்மை கொண்டுள்ளன. அவை உங்களை, உங்களது மாணவர் பருவ காலத்துக்கு அழைத்துச் செல்லும். சரியாக தயாராகாத நிலையில் தேர்வுகளைச் சந்திப்பதாக இருக்கட்டும் அல்லது உங்களது கல்வி நிறுவனம் ஆண்-பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கும் இடமாக இருக்கட்டும் இதயம் படபடப்புடன் இருக்கும். நான் படித்த பள்ளியும் கல்லூரியும் அப்படியல்ல, இரண்டும் பெண்களுக்கானது. கான்வென்ட்டுடன் இணைக்கப்பட்டது. வெளியிலிருந்து படிக்க வருபவர்களுக்குக்கூட கடுமையான விதிகள் அமல்படுத்தப்பட்டிருந்தது. ஒருமுறை நாங்கள் வகுப்புகளை புறக்கணித்துவிட்டு சிறந்த நடிகர்களான ரிச்சர்டு பர்டன்/பீட்டர் ஓ'டூல் நடித்த பெக்கெட் (1964) படம் பார்க்கப்போனோம். இலக்கியம் படிக்கும் மாணவர்களாக இருந்ததால் எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கருதிச் சென்றோம். ஆனால், பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டோம்!

கடந்த மாதம் புனேயில் சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் ரோட்டரியின் எட்டாவது அமைதி மையம் திறந்துவைக்கப்பட்டபோது, எனது கல்லூரி நாட்கள் மடைதிறந்த வெள்ளம்போல் என் நினைவுக்கு வந்தன. இது இந்திய ரோட்டேரியனுக்கு பெருமையான தருணமாகும். மேலும் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா சுட்டிக்காட்டியதுபோல, புனேவில் இந்த அமைதி மையத்தை அமைப்பதில் RI மாவட்டங்கள் 3131 மற்றும் 3141 முக்கிய பங்கு வகித்தன. 22 மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டரி தலைவர்கள் இந்த கனவை நனவாக்கும் நிகழ்வில் உற்சாகத்துடன் பங்கேற்க வந்திருந்தனர். கடந்த 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆசியாவில் ஒரு அமைதி மையத்தை நிறுவ முடிவு செய்தபோது, ஆறு நாடுகளைச் சேர்ந்த 17 கல்வி நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தை தெரிவிக்க கோரப்பட்டிருந்தன. இறுதிக்கட்டத்தில் சிம்பயோசிஸ் மற்றும் தென்கொரியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்துக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முடிவில் அமைதி மையம் உருவாக புனேயில் உள்ள சிம்பயோசிஸ் பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டது.

எந்த ஒரு நாட்டில் ஒரு நிகழ்வு நடந்தாலும் அதில் RI தலைவர், TRF அறங்காவலர் தலைவர் இருவரும் ஒருசேர பங்கேற்பது மிகவும் அரிதானது. ஆனால், அமைதி மையம் திறப்பு விழாவில் தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் இருவரும் பங்கேற்றனர். இதன் மூலம் அமைதி மையங்களும், உலகில் அமைதியை மேம்படுத்துவது ரோட்டரிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர். தனது நெகிழ்ச்சியான உரையில் தலைவர் அரெஸ்ஸோ, போர் இல்லாத நிலை அமைதி என்பதல்ல, அது நம்பிக்கை, புரிதல் மற்றும் நீதியின் வெளிப்பாடு என்பதை சுட்டிக்காட்டினார். வறுமை, வெறுப்பு மற்றும் கெட்ட எண்ணங்களிலிருந்து விடுபட்டு மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான கட்டமைப்பை உருவாக்குவதே அன்றாட வேலையாகும். ஏனெனில் இவைதான் மோதலுக்கு காரணமாகி அமைதியை சீர்குலைக்கின்றன. இதில் சோகமானது என்னவென்றால் மக்கள் கூட்டமாக கூடும்போதுகூட தனிமையை உணர்கிறார்கள். அப்போது எதிர்காலத்தை பற்றிய பயமும், நிச்சயமற்ற தன்மையும் அவர்கள் மனதில் வளர்கிறது. மோதல்கள் உச்சத்துக்கு செல்லும்போது போர் உருவாகிறது. யாரைப் பார்த்தாலும் தீயவர்கள் மற்றும் ஆபத்தானவர்கள் போல் தோன்றுகிறது. இது குழந்தைகள் இருளைப் பார்த்து அல்லது இரவில் பெரும் ஒலிகளைக் கேட்டு பயப்படுவதற்கு ஒப்பானது. இதனால் ஏற்படும் அச்சத்தை நாம் துப்பாக்கி சண்டை மூலம் தீர்க்க முடியாது. ஆனால், தகவல்கள் மற்றும் அறிவுபூர்வமான முறையில் மக்களிடம் எடுத்துரைத்து அவர்களிடம் அச்சத்தை போக்க முடியும். அதுதான் ரோட்டரி அமைதி மையத்தின் முக்கிய நோக்கமாகும். "அவை பயத்தை புரிதலாக மாற்றவும், குழப்பத்தை தெளிவாக்கவும் உதவுகின்றன. முரண்பாடுகளை தவிர்த்து, ஒத்துழைப்பை ஆதரிக்கும் திறன்களை கற்றுக்கொடுக்கின்றன. மக்கள் எதையும் காதுகொடுத்து கேட்கவும், பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்கவும், வன்முறை இல்லாமல் மோதல்களுக்கு தீர்வுகாணவும் பயிற்சி அளிக்கின்றன".

இன்று நம்மை சுற்றியுள்ள உலகத்தில் மோதல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் தீர்வுகாண கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களில் அமைதியை மேம்படுத்த இதைவிட சிறந்தது எதுவும் இல்லை. வரும் ஆண்டுகளில் பல்வேறு கலாசாரம் மற்றும் கருத்துக்களுடன் இங்கு வரும் சர்வதேச அறிஞர்கள் முரண்பாடுகளும் மோதல்களும் நிறைந்த பகுதிகளில் பாரபட்சமற்ற மனங்களுடனும், கனிவான இதயங்களுடனும் பணியாற்றும் திறன்களைப் பெறுவார்கள் என்பது உறுதி. எனவே அவர்கள் வெறுப்பு, கெட்ட எண்ணங்கள் மற்றும் தவறான புரிதல்களை தூக்கி எறிந்துவிட்டு, குழப்பம் நிறைந்த உலகில் வன்முறையை தடுத்து நிறுத்தி, பிரச்னைகளுக்கு தீர்வுகாணவும் அமைதியை நிலைநாட்டவும் செயல்படுவார்கள் என எதிர்பார்க்கலாம். அவர்களுக்கு வாழ்த்துகள். அவர்களின் முயற்சிக்கு கடவுள் துணைபுரிவாராக!



ரஷீதா பகத்

ADVT.

# THE SIZZLE OF A HOT KADAI IS THE SYMPHONY OF HOME

WHERE EVERY CRACKLE PROMISES A MASTERPIECE




## IDHAYAM SESAME OIL IS THE SOUL OF YOUR KITCHEN


IDHAYAM enhances the natural spices of South Indian cuisine. From the perfect golden Crisp of a Dosa, Crunch of Murukku to the irresistible aroma of Poori, Vada, Bajji, and Bonda. It's an explosion of deliciousness.

**The "Deep-Fried" Perfection** With a high smoke point and superior stability, IDHAYAM ensures your snacks are perfectly crisp on the outside, fluffy on the inside, and never greasy.

**Heart-Healthy Tradition** Naturally rich in antioxidants and unsaturated fats, IDHAYAM helps keep your heart as strong as your heritage.

**Pure & Natural** IDHAYAM is extracted from the finest sesame seeds,it's the **time-honored tradition** that carries your grand-mother's seal of approval.

*Tradition you can taste. Memories you can share*






# IDHAYAM

PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Mar 26/NTEN

# RI இயக்குனர் செய்தி

## உறுதி மொழிகளை செய்து அவற்றை காப்பாற்றுங்கள்



*தமிழக அரசுடன் இணைந்து ரோட்டரி நிறுவனம் மேற்கொண்டு வரும் கூட்டு சமூக நலத் திட்டங்கள் குறித்து RID M முருகானந்தம், தமிழக முதல்வர் M K ஸ்டாலினுடன் கலந்துரையாடினார். RI துணைத்தலைவராக நியமிக்கப் பட்டதற்கு முதல்வர் அவரை வாழ்த்தினார்.*

“உறுதி கூறுங்கள், உறுதியைக் காப்பாற்றுங்கள்” என்பது எனக்கு மிகவும் பிடித்த பொன்மொழிகளில் ஒன்று. இந்தக் கொள்கையை நான் பின்பற்றுகிறேன், செல்லும் இடங்களிலெல்லாம் சொல்கிறேன். நீங்கள் எதையாவது உறுதியளிக்கும் போது, உங்கள் நோக்கம் வரையறுக்கப்படுகிறது. நீங்கள் அந்த உறுதியைக் காப்பாற்றும்போது, உங்கள் ஆளுமை வெளிப்படுகிறது.

உங்கள் உறுதி உயர உயர, உங்கள் நிறைவேற்ற வேண்டிய உணர்வு அந்த அளவுக்கு ஆழமாகிறது. ஜப்பானியத் தத்துவத்தில் இதை இகிகை (வாழ்வதற்கான காரணம்) என்று அழைக்கிறார்கள். பொருளுள்ள சேவைக்கு நம்முடைய உறுதிப்பாடு வலுவாக வலுவாக, நம் இகிகை இன்னும் முழுமையடைகிறது.

ரோட்டரி உறுப்பினரான நீங்கள் ஏற்கெனவே தனக்குமேல் சேவை என்று உறுதியளித்துள்ளீர்கள். முதலில், எளிய, தொட்டுணரக்கூடிய உறுதிகளுடன் தொடங்குவோம். உங்கள் சங்கக் கூட்டங்களில் தொடர்ந்து கலந்துகொள்வது என்று ஓர் உறுதியளியுங்கள். கலந்துகொள்ளுங்கள். பங்கேற்றிடுங்கள். ஈடுபடுங்கள். ரோட்டரி யோசனைகளால் மட்டும் செழிப்பதில்லை, இருப்பினாலும் செழிக்கிறது.

புதிய உறுப்பினர்களை, சேவைப் பணியைத் தொடரக்கூடிய தனி நபர்களை அழைத்துவருவேன் என்று உறுதியளியுங்கள். ஒவ்வொரு புதிய உறுப்பினரும் புதிய ஆற்றலை, புதிய வலைப்பின்னல்களை, புதிய சாத்தியங்களைக் கொண்டுவருகிறார்கள்.

நீங்கள் சங்கத்திலோ மாவட்ட அளவிலோ தலைமைப் பொறுப்பில் இருக்கிறீர்கள் என்றால், தர எதிர்பார்ப்பைத் தொடர்ந்து உயர்த்துங்கள். நாம் இந்த ரோட்டரி ஆண்டின் மூன்றாம் காலாண்டை நோக்கி நடக்கிறோம். சங்கத் தலைவர், மாவட்ட ஆளுநர், அல்லது வேறொரு பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டபோது வழங்கிய உறுதிகளின்படி நடக்கவேண்டிய, அதைப் பின்பற்றவேண்டிய நேரம் இது. அந்த உறுதிகளை உரிய காலத்துக்குள் நிறைவேற்றுங்கள்.

உறுப்பினர் எண்ணிக்கையை நேர்விதமாக உயர்த்தப் பாடுபடுங்கள். ரோட்டரி அறக்கட்டளைக்கான உங்கள் ஆதரவை வலுவாக்குங்கள். உங்கள் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துங்கள், மக்கள் ரோட்டரியை நம்பகத்தன்மை மற்றும் தாக்கத்தின் ஆற்றலாகத் தெளிவாகப் பார்க்கும்படி செய்யுங்கள். மக்கள் பலன்களைப் பார்க்கும்போது, அது உங்கள் தலைமையைப்பற்றி நிறையச் சொல்கிறது.

நான் உறுதிகளை அளிப்பது, காப்பாற்றுவதை இந்த அளவு வலுவாக வலியுறுத்துவது ஏன்? ஏனென்றால், உறுதிப்பாடு உங்களை வடிவமைக்கிறது. அது உங்கள் தகவல் தொடர்பை மேம்படுத்துகிறது, உங்கள் தீர்மானம் எடுத்தலைக் கூர்மையாக்குகிறது, உங்கள் ஒப்படைக்கும் திறன்களை வலுவாக்குகிறது. அது குழுப்பணியைக் கற்றுத்தருகிறது, மீள்திறனைக் கட்டமைக்கிறது, நோக்கத்தை அடையாளமாக மாற்றுகிறது.

தத்துவ அறிஞர் அயன் ராண்ட் சொன்னதுபோல், “ஒரு மனிதர் மற்றவர்களுக்கு வழங்கக்கூடிய மிகச் சிறந்த பரிசு, ஒரு சாதனையைச் செய்து காண்பிப்பதுதான்.” சாதனை எதேச்சையாக நடப்பதில்லை. அது மதிக்கப்படும் வாக்குறுதிகளின் பலன். ஓர் உயர்ந்த நோக்கத்துக்காக உறுதியளித்தல், மனிதத்தன்மையின் ஒரு வெளிப்பாடு. எந்தச் சவால், கவனச் சிதறல், தடை வந்தாலும் அந்த உறுதியைக் காப்பாற்றுவது உயர்ந்த ஒன்றின் வெளிப்பாடு. இந்த ஒழுக்கம் சேவையைத் தலைமையாகவும், தலைமையை மரபாகவும் உயர்த்துகிறது.

ரோட்டரி பதவிகளால்மட்டும் வளர்வதில்லை. அது காப்பாற்றப்படும் வாக்குறுதிகளால் வளர்கிறது. அதனால், தெரிந்து உறுதியளிப்போம், தொடர்ந்து உறுதியளிப்போம். அனைத்துக்கும் மேலாக, ரோட்டரிக்கு, நம் சமூகங்களுக்கு, நமக்கு நாம் வழங்கும் ஒவ்வோர் உறுதியையும் காப்பாற்றுவோம். ஏனெனில், நாம் அதைச் செய்யும்போது, நாம் திட்டங்களைமட்டும் கட்டமைப்பதில்லை. நாம் நம்பிக்கையைக் கட்டமைக்கிறோம். நாம் நம்பகத்தன்மையைக் கட்டமைக்கிறோம். நன்மைக்காக ஒன்றுகூடுவதற்கு உறுதியளிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டமைக்கிறோம்.

**M முருகானந்தம்**
RI இயக்குனர் 2025–27

TRF
தலைவரிடமிருந்து...



# அது நீரில் தொடங்குகிறது

2013 முதல், ரோட்டரி அறக்கட்டளை ஆயிரக்கணக்கான நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக $230 மில்லியனுக்கு மேல் முதலீடு செய்துள்ளது. ரோட்டரியின் நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை கவனப்பகுதியின் மேலாளரான எரிகா க்வெய்ன்ன் தன் பார்வையைப் பகிர்ந்துகொள்கிறார்:

RI பணிக்காக வடக்கு உகாண்டாவுக்குச் சென்றிருந்தபோது, கிளர்ச்சித் தலைவருடைய எதிர்ப்புப் படையில் குழந்தைப் படைவீரராக இருந்து தப்பிய ரோட்டரி உறுப்பினர் ஒருவரைச் சந்தித்தேன். முரண்பாட்டின்போது பள்ளிகளும் நலப் பராமரிப்பு வளாகங்களும் புகலிடங்களாகின என்று அவர் சொன்னார். பல ஆண்டுகளுக்குப்பிறகு, ரோட்டரியில் சேர்ந்தபின், அவர் சமூகத்துக்குத் திரும்பக் கொடுக்க விரும்பினார். அதே பள்ளிகள், வளாகங்களில் நீர் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவர் தன்னார்வலராகக் கை கொடுத்தார். இப்போது அவை மீண்டும் புகலிட மையங்களாகின, ஒட்டுமொத்தச் சமூகத்தின் நலம், பாதுகாப்பு மற்றும் உயிர்ப்புக்குப் புகலிடமளித்தன.

இந்தியாவிலுள்ள மகாராஷ்டிரத்தில், நம் பெரிய அளவுத் திட்டங்கள் நல்கை முன்னெடுப்பான "இந்தியாவில் நீர் அணுகல் மற்றும் மேம்பட்ட அறுவடைகளுக்கான கூட்டாளர்கள்" மரபு அடிப்படையில் விவசாயத்தைப் பின்பற்றிவந்த ஒரு பகுதிக்குப் பாசனத்தைக் கொண்டுவந்து பெண்களுக்கு ஒரு குரலை அளிக்கிறது. பெண்கள் நிலங்களுக்கு உரிமையாளர்களாக இயலாது என்றாலும், இந்த நீர்த் திட்டத்தின் மூலம் அவர்கள் மரம் வளர்க்கிறார்கள், காட்டுப்பகுதிகளைப் பராமரிக்கிறார்கள், வருவாய் உருவாக்கும் பிற செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் பண்ணைத் தொழில் நுட்பங்களை அறிந்துகொண்டார்கள், தங்கள் பொருளாதாரத் தீர்மானமெடுக்கும் திறனையும் கண்ணியத்தையும் பெருக்கிக்கொண்டார்கள்.

முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர்ச் சவால்கள் மிகவும் கடுமையாக இருப்பது எதேச்சையான விஷயம் இல்லை. ஹெயிட்டியில், நிலையற்ற தன்மை, வன்முறையிலிருந்து மீளுகின்ற சமூகங்களில் மீள்திறனை மீண்டும் கட்டமைப்பதற்கு இந்தத் திட்டங்கள் மையமாக இருப்பது எப்படி என்று நான் கண்டுள்ளேன். எங்கும் இதே கருப்பொருள் செயல்படுவதை நான் காண்கிறேன்: இந்தத் திட்டங்கள் தூய நீருடன் பல கூடுதல் விஷயங்களை வழங்குகின்றன. இவை ரோட்டரியின் மற்ற கவனப் பகுதிகளை மேம்படுத்துகின்றன, பாதுகாப்பு, பெருமை, நம்பிக்கையின் மூலமாக உள்ளன.

உண்மையில், நீர்த் திட்டங்கள் நலத்தை மேம்படுத்துகின்றன, பொருளாதார வாய்ப்பை வளர்க்கின்றன, கூடுதல் பள்ளி வருகையின் வழியாகக் கல்வியைப் பரப்புகின்றன, குறிப்பாக, மணிக்கணக்காக நீர் கொண்டுவரும் பணியிலிருந்து விடுபட்ட பெண்களுக்கு. அத்துடன், அவை ஏழைமைக்கு எதிராகப் போரிடுகின்றன.

நம் அறக்கட்டளைக்கும் கொடுப்பதன் மூலம், தண்ணீர்த் திட்டங்களுக்குத் தன்னார்வலராவதன் மூலம் நீங்கள் இந்த வெற்றியில் பங்கேற்கிறீர்கள். நாம் செய்கிற அனைத்தும் யாருக்கோ, எங்கோ ஒரு வாய்ப்பைத் திறக்கின்றன.

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | லியோன் J |
| RID 2982 | சிவசுந்தரம் P |
| RID 3000 | கார்த்திக் J |
| RID 3011 | ரவீந்தர் குக்னானி |
| RID 3012 | அமிதா அனில் மொஹிந்த்ரு |
| RID 3020 | கல்யாண் சக்ரவர்த்தி Y |
| RID 3030 | தியானேஷ்வர் P ஷேவாலே |
| RID 3040 | சுஷில் மல்ஹோத்ரா |
| RID 3053 | நிஷா ஷெகாவத் |
| RID 3055 | நிகம்குமார் L சௌத்ரி |
| RID 3056 | பிரக்யா மேத்தா |
| RID 3060 | அமர்தீப் சிங் புனெட் |
| RID 3070 | ரோஹித் ஓபராய் |
| RID 3080 | ரவி பிரகாஷ் |
| RID 3090 | பூபேஷ் மேத்தா |
| RID 3100 | நிதின்குமார் அகர்வால் |
| RID 3110 | ராஜன் வித்யார்த்தி |
| RID 3120 | அசுதோஷ் அகர்வால் |
| RID 3131 | சந்தோஷ் மதுகர் மராத்தே |
| RID 3132 | சுதீர் V லத்தூர் |
| RID 3141 | மணீஷ் மோத்வானி |
| RID 3142 | ஹர்ஷ் வீரேந்திர மகோல் |
| RID 3150 | ராம் பிரசாத் S V |
| RID 3160 | ரவீந்திரா M K |
| RID 3170 | அருண் டேனியல் பண்டாரே |
| RID 3181 | ராமகிருஷ்ண P கண்ணன் |
| RID 3182 | பலாக்ஷா K |
| RID 3191 | ஸ்ரீதர் B R |
| RID 3192 | எலிசபெத் செரியன் |
| RID 3203 | தனசேகர் B |
| RID 3204 | பிஜோஷ் மானுவல் |
| RID 3205 | ரமேஷ் G N |
| RID 3206 | செல்லா K ராகவேந்திரன் |
| RID 3211 | டினா ஆண்டனி குன்னும்கல் |
| RID 3212 | தினேஷ் பாபு J |
| RID 3231 | சுரேஷ் V |
| RID 3233 | தேவேந்திரன் D |
| RID 3234 | வினோத்குமார் சரோகி |
| RID 3240 | காமேஸ்வர் சிங் எலங்பம் |
| RID 3250 | நம்ரதா |
| RID 3261 | அமித் ஜெயஸ்வால் |
| RID 3262 | மனோஜ்குமார் திரிபாதி |
| RID 3291 | ரமேந்து ஹோம்சௌதுரி |



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| M முருகானந்தம்<br>RI Director &<br>Chairman, Rotary News Trust | RID 3000 |
| KP நாகேஷ்<br>RI Director | RID 3191 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF Trustee | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3234 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குலாம் A வானதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2025–26)

| | |
|---|---|
| ரோஹித் ஒபராய்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3070 |
| தியானேஷ்வர்<br>ஷேவாலே<br>துணைத்தலைவர், ஆளுநர் குழு | RID 3030 |
| M K ரவீந்திரா<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3160 |
| செல்லா<br>K ராகவேந்திரன்<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3206 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF**
**அறங்காவலர்**
**செய்தி**



# புனேயில் புதிய ரோட்டரி அமைதி மையம்

'ஆயிரம் மைல்கள் பயணம் ஒரு காலடியில்தான் தொடங்குகிறது'. ரோட்டரியின் பயணம் ஒரு காலடியிலும் பால் ஹாரிஸ் என்ற தனி நபரின் கனவிலும் தொடங்கியது. அவரிடமிருந்த எளிய திட்டம், நட்பை, ஒருவரோடொருவர் ஒத்துழைத்தலை முன்னிறுத்துதல். இவை இரண்டும் அமைதிக்கான அடிப்படை உட்பொருட்களாகும். சிம்பயாசிஸ் கல்வி நிறுவனங்கள் ஒரு தனி நபருடைய (Dr S B மஜூம்தர்) கனவுடன் தொடங்கின. அவருடைய தொலைநோக்கு வசுதைவ குடும்பகம் (உலகம் ஒரே குடும்பம்) என்பதாக இருந்தது. இது அமைதிக்கான முதன்மைக் கருத்தாகும். ஜனவரி 26, 2026 அன்று, இந்த இரு தொலைநோக்குகளும் பயணங்களும் பிசிறின்றி ஒன்றாகின. அன்றுதான் இந்தியாவில், சொல்லப் போனால் தெற்கு ஆசியாவில் முதல் ரோட்டரி அமைதி மையம் புனேவிலுள்ள சிம்பயாசிஸ் பன்னாட்டுப் பல்கலைக்கழகத்தில் (SIU) தொடங்கப்பட்டது. இந்த இரு நிறுவனங்களுக்கும் இது ஒரு முதன்மையான நிகழ்வாகும். இது சிம்பயாசிஸ், ரோட்டரியின் பகிர்ந்துகொள்ளப்பட்ட மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கிறது: நேர்மை, தரமான கல்வி, பண்பாடுகளைக் கடந்த பிணைப்பு, புரிந்துகொள்ளல், பன்னாட்டுத் திறன்களை வளர்த்தல்.

இதற்கான தேர்ந்தெடுத்தல் செயல்முறை மிகவும் சிந்தித்து உருவாக்கப்பட்டிருந்தது. ஆறு ஆசிய நாடுகளிலிருந்து 17 கல்வி நிறுவனங்கள் இதில் ஆர்வம் தெரிவித்திருந்தன. SIU தேர்ந்தெடுக்கப்பட்டது இந்திய ரோட்டரிக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தருகிற நிகழ்வாகும். தொடக்க விழாவில் 22 மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டரியன்கள் பங்கேற்றார்கள் என்பது இந்த அமைதி மையம் தொடர்பாக இந்திய ரோட்டரியும் ரோட்டரியன்களும் எந்த அளவு உறுதிப்பாட்டுடன் உள்ளார்கள் என்பதை நன்கு காண்பிக்கிறது.

2024ல் பன்னாட்டுப் பொருளாதாரத்தில் வன்முறையின் பொருளாதாரத் தாக்கம் $19.97 டிரில்லியன் அல்லது ஒரு நபருக்கு $2,455 என மதிப்பிடப்படுகிறது. இது ஒரு கொடுமையான எதார்த்தம், மிகவும் கவலை தரும் சிக்கல். ரோட்டரியில் உள்ள நாம் வன்முறைக்கு எதிர்வினையாற்றாமல், அமைதிக்கு ஏற்ற சூழல்களை உருவாக்குவதை நம்புகிறோம். ரோட்டரி அமைதி மையங்களும் அமைதி அறிஞர்கள் திட்டமும் அமைதிக்கான நம் பணியில் முதன்மையான படிநிலைகளாகும். வளரும் தலைவர்களை ஆதரித்து, முரண்பாடுகளைத் தீர்த்தல், வளங்குன்றா வளர்ச்சியில் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதன் மூலம் ரோட்டரி உள்ளூர், பன்னாட்டு அளவில் தாக்கம் உண்டாக்குகிறது.

ஆர்ச் க்ளம்ஃபின் சொற்களில் குறிப்பிடுவதென்றால்: நாம் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகளைக் கட்டினால், அவை இடிந்து வீணாகிவிடலாம். நாம் நினைவுச் சின்னங்களை எழுப்பினால், காலம் அவற்றை இடித்துவிடலாம். ஆனால், நாம் மக்களின் மனங்களுடன் பணியாற்றினால், அவர்களில் இரக்கம், நேர்மை, ஒத்துழைப்பு, சேவை எண்ணத்தை ஊக்குவித்தால், இந்த நாகரிகம் இருக்கும்வரை தொடர்கிற ஒன்றை நாம் உருவாக்குகிறோம். ரோட்டரியின் அமைதிக் கட்டமைப்பு முயற்சிகள் இந்த இலக்கோடுதான் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய அமைதி மையம் ஆர்வமுள்ள இளம் ஆண்கள், பெண்களை அமைதி அறிஞர் களாக்கும் ஒரு வாய்ப்பைக் கொண்டு வருகிறது. இந்தியாவிலும் ஆசியாவிலும் இன்னும் அமைதியான, முறையான, இரக்கம் நிறைந்த உலகை உருவாக்கும் வாய்ப்பையும் அது கொண்டுவருகிறது.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

# புனே, சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தில் ரோட்டரியின் எட்டாவது அமைதி மையம்

ரஷீதா பகத்




*TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் புனேவில் உள்ள சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தின் நிறுவனர் SB முஜும்தார் ஆகியோர் விளக்கை ஏற்றி வைக்கின்றனர், (இடமிருந்து) RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, அவரது மனைவி அன்னா, சுசான் நாக், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வித்யா யெரவ்டேகர் மற்றும் அறங்காவலர் பரத் பாண்டியா ஆகியோரும் உள்ளனர்.*

"இன்று உலகம் எதிர்கொள்ளும் பெரும்பாலான மோதல்கள் மற்றும் பயம் மற்ற தரப்பினரைப் புரிந்து கொள்ளத் தவறியதன் விளைவே ஆகும். போர் இல்லாத நிலையே அமைதி என்று பலரும் கருதுகின்றனர்; ஆனால் அமைதி என்பது அதையும் தாண்டியது. அமைதி என்பது நம்பிக்கை, புரிதல் மற்றும் நீதியின் இருப்பு ஆகும். வறுமை, வெறுப்பு மற்றும் தவறான எண்ணங்கள் இல்லாத நிலையை உருவாக்குவதும், பாலங்களை அமைப்பதும் தான் அமைதிக்கான அன்றாடப் பணியாகும்," என்று ரோட்டரி சர்வதேசத் தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ கூறினார். உலகில் எட்டாவது மற்றும் தெற்காசியாவின் முதல் ரோட்டரி அமைதி மையத்தின் தொடக்க விழாவில் அவர் பங்கேற்றார். மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழக வளாகத்தில் இந்த மையம் அமைந்துள்ளது.

சுதந்திரமும், ஒவ்வொரு மனிதனின் கண்ணியத்திற்கான மரியாதையும் இல்லாமல் அமைதி நிலவ முடியாது. "ஆனால் நாம் ஒரு விசித்திரமான காலத்தில் வாழ்கிறோம்; மக்களுக்கு முன்னெப்போதையும் விட அதிக சுதந்திரம் உள்ளது, ஆனால் பெரும்பாலும் இந்த சுதந்திரம் அவர்களின் 'ஈகோவை' மட்டுமே திருப்திப்படுத்துகிறது. மனிதநேயத்தைக் காக்கும் கடமையை நாம் மறந்துவிடுகிறோம். நாம் மற்றவர்களுக்கு மிக நெருக்கமாக வாழ்ந்தாலும், அவர்களிடமிருந்து வெகு தொலைவில் இருப்பதைப் போலவும், கூட்டத்தில் தனிமை யாகவும் உணர்கிறோம். கூட்டத்தில் தனிமையாக இருக்கும்போது பயம் வளர்கிறது. உலகின் பல பகுதிகளில், மக்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கண்டு அஞ்சுகிறார்கள். தங்கள் அடையாளத்தை இழந்துவிடுவோமோ என்றும், தீயவர்களாகச் சித்தரிக்கப் படும் அந்நியர்களைக் கண்டும் பயப்படுகிறார்கள்."

மிகவும் வருத்தமான விஷயம் என்னவென்றால், இரு தரப்பினருமே "ஒரே கதையைத்தான்" சொல்கிறார்கள் – அதாவது பயம் இரு தரப்பிலும் ஒரு ஆயுதமாக மாறிவிட்டது என்று அரேஸ்ஸோ கூறினார். ஆனால் பயத்தை ஓடி ஒளிந்தோ அல்லது ஆக்ரோஷத்தைக் காட்டியோ வெல்ல முடியாது. இருட்டைக் கண்டு அல்லது இரவில் கேட்கும் ஒலியைக் கண்டு பயப்படும் ஒரு குழந்தையை உதாரணமாகக் கூறி, அத்தகைய பயங்கள் ஆயுதம் ஏந்திய காவலர்களால் அல்ல, சரியான தகவலால் மட்டுமே தீர்க்கப்படும் என்றார். அமைதியை நோக்கிய முதல் படி அறிவு. "பயத்தை புரிந்துணர்வால் மாற்றவும், குழப்பத்தைத் தெளிவாக்கவும் உதவுவதே இந்த ரோட்டரி அமைதி மையத்தின் நோக்கம். இது மோதல்களைக் குறைக்கும் திறன்களைக் கற்பிக்கிறது, ஒத்துழைப்பை வளர்க்கிறது, மற்றவர்களுக்குச் செவிசாய்க்கவும், நம்பிக்கையை வளர்க்கவும், வன்முறையின்றித் தர்க்கங்களைத் தீர்க்கவும் பயிற்சி அளிக்கிறது."

நல்ல எண்ணங்கள் முக்கியம் என்றாலும், அவை மட்டுமே போதுமானதல்ல; அமைதி என்பது தற்செயலாக நிகழ்வது அல்ல என்று அரேஸ்ஸோ கூறினார். "அமைதியை நிலைநாட்டத் திறமை, பயிற்சி மற்றும் கடினமான சூழல்களில் அமைதியான மனதுடனும், உறுதியான இதயத்துடனும் செயல்படப் பயிற்சி பெற்றவர்கள் தேவை. இந்த அமைதி மையம் ஒரு வலுவான பிணைப்பை உருவாக்குகிறது. இங்கு பயிற்சி பெறுபவர்கள் தனித்து விடப்பட மாட்டார்கள். பல நாடுகள் மற்றும் கலாச்சாரங்களில் இதே பணியைச் செய்யும் மற்றவர்களுடன் அவர்கள் இணைந்திருப்பார்கள். அமைதி என்பது ஒருவரால் சுமக்கப்படும் போது பலவீனமாக இருக்கும், ஆனால் அது கூட்டாகச் சுமக்கப்படும்போது வலிமை பெறும்."

இதற்காகத்தான் ரோட்டரி அமைதி மையங்களில் முதலீடு செய்கிறது – இது இன்றைய காலத்திற்காக மட்டுமல்ல, நீண்ட கால எதிர் காலத்திற்காக அமைதியை உருவாக்க உதவும். "நன்மைக்காக இணைவோம்" என்ற இந்த ஆண்டிற்கான அவரது மையக்கருத்து ஒரு வெற்று முழக்கம் அல்ல. "நமக்குள்ளும், நமது சமூகத்திலும், உலகிலும் அமைதியை உருவாக்க இது ஒரு சவாலாகும். நன்மைக்காக இணைவது என்பது நாம்

## என்ன பாடங்கள் வழங்கப்படுகிறது

*புனே சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் நிறுவப் பட்டுள்ள ரோட்டரி அமைதி மையம், அதன் அறிஞர்களுக்கு அமைதி மற்றும் மேம்பாட்டு ஆய்வுகளில் முழு நிதியுதவியுடன் கூடிய ஓராண்டு முதுகலை டிப்ளமோ படிப்பை வழங்குகிறது. ரோட்டரியின் அமைதித் திட்டங்கள் குறிப்பாக அரசு மற்றும் தனியார் துறைகளில் நலவாழ்வு, மேம்பாடு, சட்டம் ஒழுங்கு, நீதித்துறை போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றும் இடைக்காலப் பணியாளர்களை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த புனே மையம், ஆசியா மற்றும் ஆசிய சமூகங்களைச் சேர்ந்த வல்லுநர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கும்.*

*இந்தப் படிப்பிற்கான விண்ணப்பங்கள் பிப்ரவரி 1 முதல் மே 15, 2026 வரை திறந்திருக்கும். ரோட்டரி அமைதி உதவித்தொகை திட்டங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை பற்றி மேலும் அறிய rotary.org/peace-fellowships என்ற இணையதளத்தைப் பார்வையிடவும். தற்போது, உலகம் முழுவதிலுமிருந்து அமைதி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் அர்ப்பணிப்புடன் செயல்படும் தலைவர்கள், உலகில் உள்ள எட்டு ரோட்டரி அமைதி மையங்களில் ஏதேனும் ஒன்றில் பயில்வதற்காக, ஆண்டுதோறும் 170 முழு நிதியுதவியுடன் கூடிய கல்வி உதவித்தொகைகளை ரோட்டரி நிறுவனம் வழங்கி வருகிறது.*

அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் என்பதோ அல்லது நமது வேறுபாடு களை அழிப்பதோ அல்ல. இது வேறுபாடுகளை எதிரிகளாகக் கருத மறுப்பதைக் குறிக்கிறது, மேலும் கடினமான சூழலிலும் ஒன்றிணைந்து செயல்படத் தேர்ந்தெடுப்பதைக் குறிக்கிறது."

ஒரு பல்கலைக்கழகம் என்பது "கற்கும் இடமாக மட்டுமல்லாமல், பிறருக்குச் செவிசாய்க்கும் இடமாகவும் இருக்க வேண்டும்" என்று ரோட்டரி தலைவர் கூறினார். இது கேள்விகள், விவாதங்கள் மற்றும் உண்மைக்கான இடமாகும்; ஏனெனில் அமைதிக்கு அத்தகைய சூழல் தேவை. "இன்று, இந்த புதிய ரோட்டரி அமைதி மையத்தைத் திறப்பதன் மூலம், அமைதியை திட்டமிட்டு உருவாக்கப்பட முடியும் என்ற நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். இது விரைவாகவோ அல்லது மிகத் துல்லியமாகவோ நடக்காமல் போகலாம், ஆனால் கற்றல், பயிற்சி மற்றும் கூட்டுமுயற்சி மூலம் இதை உருவாக்க முடியும்."

ரோட்டரி என்பது நட்பு, புரிதல் மற்றும் மற்றவர்கள் மீது அக்கறை கொள்வதன் அடிப்படையில் கட்டப்பட்ட ஒரு அமைப்பாகும். "எல்லைகளைத் தாண்டி நட்பை வளர்க்கும்போது, நாம் அமைதியை உருவாக்குகிறோம்." அமைதியை உருவாக்குவதற்கு சுயசிந்தனை அவசியம்; உலகில் அமைதி வேண்டுமென்றால், "மற்றவர்களைப் பற்றிய நமது பயத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். மற்ற நபர்கள், மற்ற கலாச்சாரங்கள், மற்ற வாழ்க்கை முறைகள் மீதான பயத்தைத் தவிர்க்க வேண்டும். நம்மைத் தனிமைப்படுத்தும் நவீன வாழ்க்கை முறையை நாம் எதிர்க்க வேண்டும்."

பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலை நோக்கி நாம் எடுக்கும் சிறிய அடிகளிலிருந்தே அமைதி பிறக்கிறது. "அமைதி என்பது அடிப்படையில் அறிவு, நமது கடமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நமது உரிமைகளையும் மற்றவர்களின் உரிமைகளையும் புத்திசாலித்தனமாகப் பாதுகாப்பதாகும். இது ஒரு நீண்ட மற்றும் கடினமான பாதையாக இருக்கலாம், ஆனால் நாம் அனைவரும் ஒன்றாக நடந்தால் அதைக் கடக்கலாம்."

தன்னுடைய எட்டாவது அமைதி மையத்தைத் திறப்பதன் மூலம், ரோட்டரி "கற்றல், கூட்டாண்மை மற்றும் சேவைக்கான ஒரு கதவைத் திறந்துள்ளது. அமைதி என்பது வெறும் விவாதப் பொருளாக மட்டும் இல்லாமல், அதைக் கற்று, பயிற்சி செய்து, உலகிற்கு எடுத்துச் செல்லும் ஒரு நிலையான இடத்தை இது உருவாக்கியுள்ளது."

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய TRF அறங்காவலர் குழுத் தலைவர் ஹோல்கர் நாக், ரோட்டரி அமைதி மையங்கள் ரோட்டரியின் பெருமை என்றும், நீதி, புரிதல் மற்றும் சிக்கலைத் தீர்ப்பதன் அடிப்படையில் எதிர்காலத்திற்கான ஒரு முதலீடு என்றும் கூறினார்.

கொடையாளர்களின் ஆதரவுடன் செயல்படும் ரோட்டரி அறக்கட்டளை, ரோட்டேரியர்களின் "கருணையைச் செயலாக மாற்ற உதவுகிறது. இந்த மையம் புனேவிலும், இங்கு பயிலும் மாணவர்களின் இதயங்களிலும் அமைதியை வளர்க்கும் புதிய இல்லமாக இருக்கும். சிறந்த கருத்துக்களைச் செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தவும் இந்த அறக்கட்டளை உதவுகிறது. சுகாதாரம், வாய்ப்புகள் மற்றும் சமூக வலுவூட்டல் ஆகியவற்றில் நாங்கள் முதலீடு செய்கிறோம். ஏனெனில் கண்ணியமும்




*அறங்காவலர் தலைவர் நாக், சுசான், RI தலைவர் அரேஸ்ஸோ, அன்னா, அறங்காவலர் பாண்டியா மற்றும் மாதவி, PDGகள் மகேஷ் கோட்பாகி மற்றும் அனிருத்தா ராய்சௌத்ரி, DG சந்தோஷ் மராத்தே, PDG மஞ்சு பாட்கே, பேராசிரியர் முஜும்தார் மற்றும் வித்யா யெரவ்டேகர் ஆகியோருடன் பல்கலைக்கழகத்தில் அமைதிக் கம்பத்தை நிறுவிய பிறகு.*



இடமிருந்து: TRF அறங்காவலர் பாண்டியா, பேராசிரியர் முஜும்தார், அறங்காவலர் தலைவர் நாக், RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் வித்யா யெரவ்டேகர்.

நம்பிக்கையும் ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும் சலுகையாக இருக்கக்கூடாது, அவை மனித வாழ்க்கையின் இயல்பான நிலைகளாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்."

அமைதி என்பது ரோட்டரியின் பணியின் ஒரு முக்கியத் தூணாக இருப்பதற்குக் காரணம் இதுதான். அதன் அமைதி மையங்கள் 1,800க்கும் மேற்பட்ட அறிஞர்களுக்கு பயிற்சி அளித்துள்ளன. அவர்கள் அரசு, கல்வி மற்றும் ஐநா போன்ற சர்வதேச அமைப்புகளில் பணியாற்றி அமைதிக்கு வித்திடுகிறார்கள். "இந்தக் கடினமான காலங்களில் இன்றைய நாள் மிகவும் முக்கியமானது. ஒரு புதிய அமைதி மையம் என்பது ஒரு புதிய அறிவு ஊற்று, பயிற்சி பெற்ற தலைவர்களின் புதிய பிணைப்பு மற்றும் ரோட்டரியின் பண்புகள் மக்களின் மனதில் வேரூன்றி, இந்த வளாகத்தைத் தாண்டி உலகிற்குச் செல்லும் ஒரு இடமாகும்."

ஒரு ரோட்டரி அமைதி மையம், அதை நடத்தும் நிறுவனத்தைப் பொறுத்தே வலுவாக இருக்கும் என்று நாக் கூறினார். "அதனால்தான் கல்வி, சேவை மற்றும் சமூகங்களிடையே புரிதலை உருவாக்குவதில் உறுதியாக இருக்கும் சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்திற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த பண்புகள் நட்பு மற்றும் சேவையின் அடிப்படையில் அமைந்த ரோட்டரியின் பண்புகளுக்கு மிகவும் நெருக்கமானவை. நாங்கள் இணைந்து ஒரு சக்திவாய்ந்த கூட்டணியாகத் திகழ்கிறோம். இதை ஒரு வெறும் ஒப்பந்தமாக நாங்கள் பார்க்கவில்லை, ஒரு நீண்டகால கூட்டாண்மையாகப் பார்க்கிறோம்."

ரோட்டரியையும் சிம்பயோசிஸையும் இணைத்ததற்கும், இத்தகைய வலுவான கூட்டாளரை அடையாளம் காண உதவியதற்கும் இந்திய அறங்காவலர் பரத் பாண்டியாவிற்கு அறங்காவலர் குழுத் தலைவர் நன்றி தெரிவித்தார். இதுபோன்ற கூட்டாண்மைகள் தற்செயலாக நிகழ்ந்துவிடாது; அதற்கு கடின உழைப்பு தேவைப்படுகிறது. மேலும், இங்கு வரப்போகும் அமைதித் அறிஞர்களுக்கு விருந்தோம்பல் அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மாவட்டங்கள் 3141 மற்றும் 3131 உறுப்பினர்களுக்கும் அவர் நன்றி கூறினார். விருந்தோம்பல் என்பது வெறும் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து சார்ந்த வசதிகள் மட்டுமல்ல; அது அவர்களை அன்புடன் வரவேற்பதும், அவர்களுக்கு ஆதரவாக இருப்பதும் ஆகும். உலகின் பல இடங்களிலிருந்தும் வருபவர்கள் தாங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைப் பெறுவதையும், இங்கு அவர்கள் வெற்றிபெற முடியும் என்பதையும் உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். உங்கள் பங்களிப்பு அவர்களது அனுபவத்தையும், இந்த அமைதி மையத்தின் எதிர்காலத்தையும் வடிவமைக்க உதவும். மேலும், இந்தப் பணியில் TRF உங்களுடன் துணையாக நிற்கும்."

ஒவ்வொரு அறிஞருக்கும் பின்னால் ஆசிரியர்கள், வழிகாட்டிகள், ரோட்டேரியர்கள் மற்றும் கொடையாளர்களின் பெரிய ஆதரவு இருக்கும் என்று அவர் உறுதியளித்தார். "ரோட்டரி இப்படித்தான் செயல்படுகிறது. உலகம் முழுவதும் சேவை செய்ய விரும்பும் மக்களுக்கான ஆதரவு அமைப்பை நாங்கள் உருவாக்குகிறோம்."

இத்தகைய அமைதி மையங்கள் உருவாகக் காரணமான TRF அமைப்பின் தாராள மனதுடைய நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவித்த நாக், அவர்களின் நன்கொடைகள் மிகுந்த கவனத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் பயன்படுத்தப்படும் என்று உறுதியளித்தார். நாங்கள் அமைதிக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறும்போது, அந்த அமைதிக்குத் தேவைப்படும் கடின உழைப்பிற்கும்

கடமைப்பட்டிருக்கிறோம் என்றே அர்த்தம். இது ஒரு தொடக்கம் மட்டுமே... உலகிற்குச் செல்லும் புதிய அமைதி அறிஞர்கள், மோதல்களைக் குறைக்கவும் நம்பிக்கையை வளர்க்கவும் தங்களைச் சிறப்பாகத் தயார்படுத்திக்கொள்ள உதவும் புதிய கற்றல் மற்றும் நட்பிற்கான ஒரு தொடக்கம் என்றார்."

நிலையான மாற்றத்தை உருவாக்குவதே ரோட்டரியின் நோக்கம் என்றும், அமைதி அதன் மையமாக இருப்பதாகவும் நாக் கூறினார். "இந்த புதிய ரோட்டரி அமைதி மையம், ஒவ்வொரு அறிஞர், ஒவ்வொரு சமூகம் மற்றும் ஒவ்வொரு கூட்டாண்மை வழியாக மக்களின் வாழ்க்கையை மாற்ற உதவும்," என்றார்.

சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும் வேந்தருமான பேராசிரியர் SB முஜும்தார் பேசுகையில், ஒரு சிறந்த பல்கலைக்கழகத்தை உருவாக்கியதற்காகத் தான் எப்போதும் பாராட்டப்படுவதாகக் கூறினார். அவர் மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். "அங்கு விளக்குகள், தொலைபேசி, தொலைக்காட்சி அல்லது வானொலி என எதுவுமே இல்லை. நான் எனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை இரண்டு சிறிய அரசுப் பள்ளிகளில் முடித்தேன். அந்தப் பள்ளிகளின் அழகு என்னவென்றால், ஏழை மற்றும் பணக்காரக் குழந்தைகள், பல்வேறு சாதி மற்றும் மதங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் குழந்தைகள் என அனைவரும் ஒன்றாகவே அமர்ந்து பயின்றார்கள்."



கல்வியை முடித்த பிறகு, 1963-ல் புனே ஃபெர்குசன் கல்லூரியில் சேர்ந்து பின்னர் சிம்பயோசிஸ் நிறுவனத்தைத் தொடங்கினார். அந்தப் பயணத்தில் அவர் பல சவால்களையும், மிகவும் சோகமான மற்றும் கசப்பான அனுபவங்களையும் எதிர்கொண்டார். ஒருமுறை, அவர் கானா நாட்டைச் சேர்ந்த ஒரு மாணவரிடம், உன் வாழ்க்கையில் நீ என்ன செய்ய விரும்புகிறாய்? என்று கேட்டார். அதற்கு அந்த மாணவர், உங்கள் நகரத்தை விட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஓடிவிட விரும்புகிறேன் என்றார்.

அவர் ஏன்? என்று கேட்டதற்கு, அந்த மாணவர் இவ்வாறு பதிலளித்தார்: அதிகாலையில் நான் கழிவறைக்குச் செல்லும்போது, உங்கள் இந்திய மாணவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள் அல்லது தலையைத் திருப்பிக் கொள்கிறார்கள். ஏனெனில், அதிகாலையில் கருப்பாக எதைப் பார்த்தாலும் அது ஒரு கெட்ட சகுனம் என்று அவர்கள் நம்புகிறார்கள். நான் உள்ளூர் பேருந்தில் பயணம் செய்யும் போது, இந்தியப் பெண்கள் என் அருகில் அமருவதை விட நின்றுகொண்டே வர விரும்புகிறார்கள்."

கென்யா, உகாண்டா, தான்சானியா, வியட்நாம், தாய்லாந்து, இலங்கை எனப் பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து இதுபோன்ற அனுபவங்களைக் கேட்டறிந்த அவர், மிகுந்த மனவேதனையும் ஏமாற்றமும் அடைந்தார். இந்த மாணவர்கள் புனே, இந்தியா மற்றும் நமது கலாச்சாரத்தைப் பற்றியும் என்ன மாதிரியான எண்ணங்களோடு தங்கள் நாடுகளுக்குத் திரும்புவார்கள் என்று அவர் கவலையடைந்தார். எனவே, அவர் 10x12 அளவிலான ஒரு சிறிய அறையில் ஒரு மையத்தைத் தொடங்கினார். அவர் ஒரு தாவரவியல் பேராசிரியராக இருந்ததால், சிம்பயோசிஸ் (கூட்டுயிர் வாழ்க்கை) என்ற சொல் அவருக்கு இயல்பாகவே தோன்றியது. அவர்களின் நிறமும் கலாச்சாரமும் வேறாக இருந்தாலும், அவர்களது இரத்தமும் நம்மைப் போலவே சிவப்புதான் என்பதை உணர்ந்த அவர், இந்த வெளிநாட்டு மாணவர்களுக்கு அன்பையும், மரியாதையையும், நல்ல கவனிப்பையும் அளிப்பதன் மூலம், அவர்களது தாய்நாட்டிற்கு வெளியே மற்றொரு இல்லத்தை நாம் வழங்கினால், அவர்கள் உலகில் நமது கலாச்சாரத் தூதர்களாகத் திகழ்வார்கள் என்று எண்ணினார். இப்படித்தான் சிம்பயோசிஸ் சர்வதேச கலாச்சார மையம் உருவானது. மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் கல்வி எதுவாக இருந்தாலும், அதோடு கலாச்சாரக் கல்வியும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்."

சிம்பயோசிஸ் நிறுவனம் ஆரம்பக் காலத்தில் பல இன்னல்களைச் சந்தித்தபோது, ரோட்டரி தான் 1 லட்சம் ரூபாய் கொடுத்து கல்வி மையத்தைத் தொடங்க உதவியது என்று பேராசிரியர் முஜும்தார் நன்றியுடன் நினைவுகூர்ந்தார். 1973-ல் தொடங்கிய இக்கூட்டுப்பணி இன்றும் பல்வேறு வழிகளில் தொடர்கிறது.

ரோட்டரி சங்கங்களுக்கும் சிம்பயோசிஸ் மாணவர்களுக்கும் இடையே அடிக்கடி கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. "இது உலகளாவிய புரிதலுக்கு பங்களிப்பதற்கான ஒரு சிறிய மற்றும் எளிமையான வழியாகும்; இது ஒருவேளை உலக அமைதிக்கு வழிவகுக்கும்."

2002-ல், இந்த நிறுவனம் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது. தற்போது இது பெங்களூரு, ஹைதராபாத், நொய்டா, நாக்பூர், நாசிக், மும்பை மற்றும் துபாய் ஆகிய இடங்களில் வளாகங்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில் 1,053 பல்கலைக்கழகங்களும், 50,000-க்கும் மேற்பட்ட கல்லூரிகளும் உள்ளன. ஆனால் சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தில், சர்வதேசமயமாக்கல் என்பதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; இங்கு 85 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயில்கின்றனர்.

இந்தியாவில் உள்ள 42 ரோட்டரி மாவட்டங்களில் 23 மாவட்டங்கள்



இந்த விழாவில் பங்கேற்றது, ரோட்டேரியர்கள் அமைதிக்கு அளிக்கும் முக்கியத்துவத்திற்குச் சான்றாகும் என்று TRF அறங்காவலர் பரத் பாண்டியா கூறினார்.

இன்றைய உலகில் மோதல்கள் பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளன. உலகில் 1.7 கோடிக்கும் அதிகமான அகதிகள் உள்ளனர். 2024-ல் மோதல்கள் மற்றும் அகதிகளால் உலகிற்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு 19.97 டிரில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார இழப்பு என்பது இந்த நெருக்கடியின் ஒரு பகுதி மட்டுமே; ரோட்டரி அமைதியைப் பற்றி பேசுவதுடன் மட்டுமல்லாமல் அமைதி தழைத்தோங்குவதற்குத் தேவையான சூழலை உருவாக்கவும் பாடுபடுகிறது. இதற்காக சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு, நீர் மற்றும் துப்புரவு, நோய் தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் ரோட்டரி தீவிரமாகச் செயல்படுகிறது."

மற்றொரு முக்கியமான படி அதன் அமைதி மையங்களும், ஆய்வாளர்களும் ஆகும். வளர்ந்து வரும் இளம் தலைவர்களையும் கருத்தாக்கம் செய்பவர்களையும் வலுப்படுத்துவதன் மூலமும், மோதல்களைத் தீர்ப்பதற்கும் நிலையான வளர்ச்சிக்குமான திறன்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலமும், உள்ளூர் மற்றும் உலகளாவிய அளவில் ஒரு தாக்கத்தை உருவாக்க ரோட்டரி உதவுகிறது. ஆர்ச் க்ளம்ப் ஒருமுறை கூறினார்: நீங்கள் கோயில்களையும், தேவாலயங்களையும், மசூதிகளையும் கட்டினால், அவை காலப்போக்கில் சிதைந்து போகும். நினைவுச் சின்னங்களை எழுப்பினால், காலம் அவற்றைச் சிதைத்துவிடும். ஆனால், மக்களின் மனதோடு இணைந்து பணியாற்றி, அவர்களுக்குள் இரக்கம், நேர்மை, பொறுப்புணர்வு, ஒத்துழைப்பு மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றை விதைத்தால், நீங்கள் அழியாத ஒன்றைச் செய்கிறீர்கள்; அது பல நூற்றாண்டுகளுக்கு நிலைத்து நிற்கும்."

புதிய அமைதி மையத்தின் தொடக்க விழா, சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தின் 55-வது நிறுவன தினமாகவும் அமைந்தது என்று அதன் இணை வேந்தர் டாக்டர் வித்யா எராவ்டேகர் கூறினார்.

அமைப்பின் முக்கிய பண்புகளும், சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தின் வழிகாட்டும் கொள்கைகளும், குறிப்பாக அதன் தாரக மந்திரமான வசுதைவ குடும்பகம் என்பதும் முழுமையாக ஒத்துப் போவதாக அவர் ரோட்டேரியர்களுக்கு உறுதியளித்தார். 2027-ம் ஆண்டில் இந்த மையத்தில் சேரப்போகும் ரோட்டரி அமைதி அறிஞர்கள், "உலக அமைதியை மேம்படுத்துவதற்குத் தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றுத் திகழ்வார்கள்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ரோட்டரி அமைதி மையத்தின் தலைவரான சுதக்ஷினா சென் கூறுகையில், சமூக சேவை, பன்முகத் தன்மை மீதான மரியாதை மற்றும் கல்வியின் மீதான அர்ப்பணிப்பு ஆகிய அடிப்படை பண்புகளை இரு நிறுவனங்களும் பகிர்ந்து கொள்வதால், சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தில் இந்த மையம் நிறுவப்பட்டது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

இந்த மையம் ஆசியாவின் பெரும் பகுதிகளுக்குச் சேவை செய்யும். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "இந்த மையம் அனுபவப்பூர்வமான கற்றலுடன் கூடிய பல்துறை அணுகு முறையை ஒருங்கிணைக்கும். அமைதி மற்றும் மேம்பாட்டின் பல்வேறு தளங்களில் பணியாற்றும் இடைநிலை வல்லுநர்களுக்கு ஆசியாவில் சமூக மாற்றத்திற்கான நிலையான மற்றும் செயல்படுத்தக்கூடிய விளைவுகளை முன்னெடுக்கத் தேவையான அதிகாரத்தை வழங்கும் வகையில், இக்கல்வித் திட்டம் நேரடி மற்றும் ஆன்லைன் கலந்த கற்றல் முறையில் வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

முன்னாள் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, புனே ரோட்டரி யினருக்கும் சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்திற்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வரும் உறவை நினைவுகூர்ந்தார். குறிப்பாகச் சுகாதாரத்துறையில், சிம்பயோசிஸ் மருத்துவமனைக்கு நிதியுதவி மற்றும் உபகரணங்கள் வழங்கி ரோட்டரி உதவியுள்ளது. முக்கியமாக, 35 இயந்திரங்களுடன் கூடிய டயாலிசிஸ் மையத்தை நிறுவி, ஏழை நோயாளிகளுக்கு இலவச சேவை வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள 35 டயாலிசிஸ் இயந்திரங்களின் எண்ணிக்கை 50-ஆக உயர்த்தப்படும் என்று அவர் அறிவித்தார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட DG வினோத் சரோகி (RID 3234), இதற்கான நிதித் தேவையைத் தான் ஏற்றுக்கொள்வதாக உடனடியாக உறுதியளித்தார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# ரோட்டரி அமைதி ஃபெல்லோஷிப் விண்ணப்பங்கள்




2027–28-ம் கல்வி ஆண்டுக்கான ரோட்டரி அமைதி ஆய்வு உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை வருகிற **மே 15, 2026** முன்னதாக ரோட்டரி அறக்கட்டளைக்கு அனுப்ப வேண்டும்.

**போட்டிக்கான விண்ணப்பத்தை தயாரிக்க:**

- ரோட்டரி அமைதி மையங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள பாடத்திட்டங்களை ஆராயுங்கள். நீங்கள் இரண்டு மையங்களின் பாடத்திட்டத்திற்கு தகுதியுடையவராக இருந்தால், முதுகலை பாடத்திட்டத்திற்கு நீங்கள் விரும்பும் இரண்டு மையங்களை தரவரிசைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.
- உங்களுக்கு அருகில் உள்ள ரோட்டரி அல்லது ரோட்ராக்ட் சங்கத்தை அறிய Club Finder-ஐ பயன்படுத்தவும். ஒரு சங்கம் அல்லது மாவட்டத்தின் பரிந்துரை இருந்தால் உங்களின் விண்ணப்பம் நிச்சயம் ஊக்குவிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் தங்களின் தனிப்பட அனுபவம், அறிவு மற்றும் உந்துதல் அடிப்படையில் அசல் மற்றும் ஆதாரமான உள்ளடக்கத்தை சமர்பிக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு (AI) மூலமான உள்ளடக்கத்தை பயன்படுத்தினால் ஏற்கப்படாது.
- விண்ணப்பத்தில் உங்களைப் பற்றியத் தகவல்கள், கல்வித் தகுதி மற்றும் தொழில்முறை பரிந்துரைகள், தனிப்பட்ட அறிக்கை, விடியோ மற்றும் கட்டுரைகள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில் படித்ததற்கான சான்றிதழ்கள் (முதுகலை மட்டும்), ஆங்கில மொழித்திறன் தேர்வு மதிப் பெண்கள் (முதுகலை மட்டும்), சமூக தாக்க திட்டம் (சான்றிதழ் மட்டும்) தேவைப்படும். உங்கள் திட்டத்திற்கு இவை தேவைப்பட்டால் பல்கலைக்கழக சான்றிதழ்களை கோரவும், IELTS அல்லது TOFEL தேர்வுக்கு பதிவு செய்து கொள்ளவும். அனைத்து தகவல்களும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.
- நீங்கள் அமைதி ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், நீங்கள் எந்த ரோட்டரி அமைதி மையத்தில் படிக்க வேண்டும் என்கிற தகவல் நவம்பர் மாதம் தெரிவிக்கப்படும்.
- ஃபெல்லோஷிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்கள் அவர்களுக்கான அமைதி மையம் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஃபெல்லோஷிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதால் மட்டும் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக நீங்கள் கருதக்கூடாது.

**சான்றிதழ் திட்டத்திற்கான தகுதி:** உகாண்டாவின் கம்பாலாவில் உள்ள மேக்கரேரே பல்கலைக்கழகம் அல்லது இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செசெஹிர் பல்கலைக்கழகம் அல்லது புனேவில் உள்ள சிம்பாயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் திட்டத்திற்கான வேட்பாளர்கள் அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும், அல்லது அங்கு அல்லது கண்டத்திற்கு வெளியே உள்ள பிராந்தியத்தின் சமூகங்கள் அல்லது முன்முயற்சிகளுடன் பணியாற்றியிருக்க வேண்டும், அல்லது அவர்கள் பிராந்தியத்திற்கு வெளியே இருந்து வந்திருக்கலாம், ஆனால் பிராந்தியத்திற்குள் அமைதியைக் கட்டியெழுப்பும் அணுகுமுறைகளைப் பற்றி அறிந்து கொள்வதில் ஒரு கட்டாய ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**தேர்வு நடைமுறைகள்:** ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக பிரதிநிதி களைக் கொண்ட ரோட்டரி அமைதி மையங்கள் சார்ந்த குழு விண்ணப்பங்களை பரிசீலித்து தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியலை வெளியிடும். அதன் அடிப்படையில் பல்கலைக் கழகம் நேர்காணலுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

**தகுதிக்கான கட்டுப்பாடுகள்:** முனைவர் ஆராய்ச்சி படிப்புக்கு ரோட்டரி அமைதி ஃபெல்லோஷிப்பை பயன்படுத்தக்கூடாது. பின்வரும் நபர்கள் ஃபெல்லோஷிப்புக்கு தகுதியற்றவர்கள்:

- ரோட்டரியின் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் அல்லது ரோட்டரி உறுப்பினர்களாக இருக்கும் ரோட்ராக்ட் உறுப்பினர்கள்.
- ரோட்டரி சங்கம் அல்லது மாவட்டம், RI அல்லது இதர ரோட்டரி அமைப்பைச் சேர்ந்த ஊழியர்கள்.
- வாழும் எந்த ஒரு நபரின் வாழ்க்கை துணைவர்கள், (குழந்தைகள் அல்லது பேரக்குழந்தைகள் அல்லது சட்டப்படி தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள்), இரத்த சம்பந்தம் உள்ள வாழ்க்கைத் துணைவர்கள் அல்லது மூதாதையர்கள் (பெற்றோர்கள் மற்றும் தாத்தா, பாட்டி வகையினர்).
- மேல குறிப்பிட்டவாறு ரோட்டரியின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள்.

முதுகலை விண்ணப்பதாரர்கள் படிக்க விரும்பும் ஃபெல்லோஷிப் தொடங்கும் தேதிக்கும், தங்களின் பட்டப் படிப்புக்கும் இடையில் குறைந்தது மூன்றாண்டுகள் இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சான்றிதழ் அல்லது முதுகலை திட்டம் அல்லது உலகளாவிய மானிய உதவித்தொகையை பூர்த்தி செய்த ரோட்டரி அமைதி ஃபெல்லோஸ், அந்த திட்டத்தின் இறுதிதேதிக்கும் அவர்களின் ஃபெல்லோஷிப் உத்தேச தொடக்க தேதிக்கும் இடையில் மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

Please refer https://*on.rotary.org/3LjPXGO*.

ADVT.





Rotary Club of VIRUDHUNAGAR

UNITE FOR GOOD






# PROJECT FOCUS

A Pioneering Initiative for the Youth of Tamil Nadu

## A LEGACY OF IMPACT

16+ Districts Covered • 14,000+ Students Benefited • Leading Institutions Served in Tamilnadu

**Project Focus is a pioneering project aimed at helping the school and college students, with two objectives in FOCUS, one is guiding the school students to achieve their goals and the other is empowering the college students to overcome their fear of public speaking.**

## Goal Setting

### For School Students

Size : Min 50 Students - Max 500 Students
Duration : 2 Hours
Medium of Training : Tamil & English
Audience : Government, Government Aided and Private school students

Program that guides the school children to fix their goals and focus on them to taste the success and contentment in their lives. Through this initiative, students will have the opportunity to develop action plans and work towards realizing their dreams, with the guidance of our Pilot Faculty. Through his mentorship and other forms of support, this transformative initiative is dedicated to helping students achieve their full potential.

We are waiting to partner with you.

**As on Feb 10, 2026**

No. of. Programs
**142**

No. of. Beneficiaries
**14,225**

Do you want to conduct " **Project Focus** " in your Town, City, District?

## Effective Public Speaking

### For College Students

Size : Min 40 Students - Max 60 Students
Duration : 6 Hours
Medium of Training : Tamil & English
Audience : Government and Private College Students

Program that empowers the youth to come out of their fear, hesitation, anxiety in public speaking. It emphasizes the importance of effective communication skills in their personal, professional and family life. It regulates their pattern of speaking, delivery skills, presentation tactics, content drafting and aligning with the objective/purpose of their speech. It helps the students to voice out their ideas, opinions and wishes in front of others, enabling them to compete with large audience. It in turn equip the college students to crack their placement interviews with confidence in speaking and answering the questions.

LEKHA ads/Mar 26/Inner

## Contact

Project Chairman
**Rtn.M.A.P.R. Rengasamy**
Pilot Faculty & JCI Area Trainer - 99444 11961



IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS



# RYLA மூலம் தொழில்முனைவுத் தீப்பொறி

ரஷீதா பகத்

2021-ம் ஆண்டில் மதுரையிலுள்ள காமராஜ் பொறியியல் கல்லூரியில் அகமது இப்ராஹிம்ஷா இறுதியாண்டு மாணவராக இருந்த போது, விருதுநகர் ரோட்டரி சங்கம் நடத்தும் RYLA பயிற்சி முகாம் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று நாள் நிகழ்வு முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதை அவர் உணர்ந்தார்; "இது மிகவும் நடைமுறை ரீதியாகவும், அனுபவப்பூர்வமாகவும் இருந்தது," என்று ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் அலுவலகத்தில் அமர்ந்திருந்த அந்த இளம் தொழில்முனைவோர் கூறுகிறார். அங்கிருந்த மற்ற ஆறு தொழில்முனைவோரும் இதை ஆமோதித்துத் தலையசைக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விருதுநகர் ரோட்டரி சங்கம் நடத்திய RYLA அமர்வுகளில் பங்கேற்ற பிறகு தொழில்முனைவோராக உருவெடுத்துள்ளனர். இதற்கு RID 3212-ன் முன்னாள் ஆளுநர் V R முத்து அவர்களுக்குச் சொந்தமான இதயம் எண்ணெய் நிறுவனம் நிதியுதவி அளித்துள்ளது.

அகமது எப்போதும் உணவுத் துறையில் ஈர்க்கப்பட்டவர், ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுலாத் துறையில் பணியில் சேர்ந்தார். தற்போது அவர் புளூ கேட்வேஸ் என்ற தனது சொந்த நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். இது தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து தமிழகக் கோயில்களை, குறிப்பாக மதுரை-இராமேஸ்வரம் பகுதிகளைச் சுற்றிப் பார்க்க விரும்பும் பயணிகளுக்கான சேவைகளை வழங்குகிறது.

அவர் RYLA-வில் என்ன கற்றுக்கொண்டார்? "ஒரு விஷயத்தில் உங்களுக்கு ஆர்வம் இருக்கும்போது, நீங்கள் சோர்வின்றி உழைப்பீர்கள்... நேரத்தைப் பார்க்க மாட்டீர்கள், அதுவே வெற்றியைக் கொடுக்கும் என்பதை நான் கற்றுக்கொண்டேன்." அவர் இப்போது உணவுச் சுற்றுலாவிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளார், மேலும் இதை விரிவுபடுத்துவதும் ஒரு ஹோட்டலைத் திறப்பதும் அவரது கனவாகும்.

சென்னையைச் சேர்ந்த கனிஷ்கா சகாதேவன், RYLA-வின் மூன்றாவது குழுவில் பங்கேற்றவர். 19 வயதிலிருந்தே ரோட்ராக்டராக இருக்கும் அவர், இளைஞர்களுக்கு "வேலை தேடுபவர்களாக இல்லாமல், தொழில்முனைவோராக மாறி வேலைவாய்ப்புகளை உருவாக்குவது" எப்படி என்பது குறித்த நடைமுறை அறிவை வழங்க நடத்தப்படும் RYLA அமர்வுகள் பற்றி அறிந்தார்.



*அஹமத் இப்ராஹிம்ஷா*

சென்னை VIT-யில் MBA முடித்துள்ளார். இரு கூட்டாளர்களுடன் இணைந்து, லிங்க்டின் போன்ற ஒரு தரவுத்தளத்தை அவர் உருவாக்கியுள்ளார், "இதன் வித்தியாசம் என்னவென்றால், தனிநபர்களிடமிருந்து சரிபார்க்கப்பட்ட தரவை மட்டுமே நாங்கள் வழங்குகிறோம்." இந்த மூன்று இளைஞர்களும் ஒரு முன்மாதிரியை உருவாக்கி, 12 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நோஷாக் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தைத் தொடங்கினர். கனிஷ்கா தனது பங்கான 4 லட்சம் ரூபாயைத் தனது தாயாரிடம் இருந்து பெற்றார். "ஆனால் தொழிலை விரிவுபடுத்த எங்களுக்கு இன்னும் அதிக பணம் தேவைப்பட்டது, அது எங்களிடம் இல்லாததால், நாங்கள் மற்றொரு தொழிலில் இறங்கினோம்."

இது ட்ரீமர்ஸ் கிட் என்று அழைக்கப்படுகிறது, இது பரிசுகளுக்காகத் தனிப்பயனாக்கப்பட்ட கதைப் புத்தகங்களை வழங்குகிறது. "யாராவது ஒருவரது வாழ்க்கையைப் பற்றி ஒரு புத்தகத்தை உருவாக்கி ஒருவருக்குப் பரிசளிக்க விரும்பினால், அவர்கள் தகவலை எங்களிடம் கொடுப்பார்கள், நாங்கள் அதை அழகாக வடிவமைக்கப்பட்ட புத்தகமாக மாற்றி ஒரு பிரதியை அவர்களிடம் வழங்குவோம்."

அவரது சந்தைப்படுத்தல் உத்தி இதுதான்: "ட்ரீமர்ஸ் கிட்டில், ஒரு நபரின் மிக அர்த்தமுள்ள தருணங்களைக் கொண்டாட நாங்கள் தனிப்பயனாக்கப்பட்ட கதைப் புத்தகங்களை உருவாக்குகிறோம். ஒவ்வொரு புத்தகமும் அந்த நபரின் பயணத்தைப் படம்பிடிக்கும் வகையில் கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது ஒரு பொக்கிஷமாக மாறும்." சராசரியாக, ஒரு புத்தகத்தின் விலை சுமார் 2,000 ரூபாய். இதுவரை அவர்கள் 500 புத்தகங்களைத் தயாரித்துள்ளனர். இந்த இளைஞர்கள் எழுதும் பணிக்கு AI-ஐப் பயன்படுத்துகின்றனர், இதன் மூலம்



கனிஷ்கா சகாதேவன்

ஒரு புத்தகத்திற்கு 1,600 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது.

இந்த முயற்சியில் இருந்து கிடைக்கும் லாபம் அவரது முதன்மை நிறுவனமான நோஷாக் சொல்யூஷன்ஸில் முதலீடு செய்யப் படுகிறது, “அது எங்களுக்குப் பணத்தைக் கொண்டு வராது. ஒரு சமூக சேவை போன்றது! அதனால்தான் இந்த மற்றொரு தொழில். இன்னும் இரண்டு ஆண்டுகளில், நாங்கள் கொஞ்சம் பணம் ஈட்டிவிட்டு வேறு ஒரு மாதிரிக்கு மாறுவோம். எங்களிடம் நிறைய யோசனைகள் உள்ளன,” என்று அவர் புன்னகையுடன் கூறுகிறார்.

வெங்கடசுப்பிரமணியன் மற்றும் நிஷாந்தினி ராஜா ஆகியோர் சென்னையில் லேப் என் பாக்ஸ் என்ற நிறுவனத்தை நிறுவியுள்ளனர், இது குழந்தைகளுக்காக DIY அறிவியல் கருவிகளை வழங்குகிறது மற்றும் வேடிக்கையான அறிவியல் நிகழ்வுகளை ஒருங்கிணைக்கிறது. வெங்கட் ஒரு மெக்கானிக்கல் இன்ஜினியர். “கல்லூரி முடித்தவுடனேயே நான் ஒரு ஸ்டார்ட்அப்பில் இறங்கினேன். கல்லூரி நாட்களிலேயே எங்கள் பொறியியல் கல்லூரி வளாகத்தில் எழுதுபொருள் கடை நடத்திய முக்கியக் குழுவில் ஒருவராக இருந்ததால், எனக்கு ஸ்டார்ட்அப் சூழல் அறிமுகமாகியிருந்தது.”

அவரது குடும்பத்தில் கடந்த இரண்டு தலைமுறையினர் அரசுப் பணியில் மட்டுமே இருந்ததால், இது அவருக்கு மிகவும் புதியதாகவும் உற்சாகமாகவும் இருந்தது. 2020-ல் அவர் படிப்பை முடிப்பதற்கு முன்பு, ஏர் கூலர் மாதிரியை உருவாக்கி யதற்காக AICTE நடத்திய ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டியில் அவரது குழு வெற்றி பெற்றது.

“ஆனால் எங்கள் கண்டுபிடிப்பை ஒரு வணிகமாக மாற்ற முடியவில்லை, ஏனெனில் என் குழுவில் நான் ஒருவன் மட்டுமே ஸ்டார்ட்அப் தொடங்கத் தயாராக இருந்தேன்,” என்று ஆதங்கத்துடன் கூறுகிறார்.

எனவே அவர் ஒரு வேலையில் சேர்ந்தார், ஆனால் “இளமையாக இருக்கும்போதே நாம் ரிஸ்க் எடுக்க வேண்டும், பிறகு நிறைய பொறுப்புகள் வந்துவிடும்” என்று நம்பி ஒரு மாதத்திலேயே அந்த வேலையை விட்டார். அவர் லேப் என் பாக்ஸ் நிறுவனத்தைத் தொடங்கினார், சிறிது காலத்திற்குப் பிறகு தனது கல்லூரி சீனியரான நிஷாந்தினியுடன் கைகோர்த்தார். நிஷாந்தினி ஒரு பயோமெடிக்கல் இன்ஜினியர், அவர் ஏற்கனவே குழந்தைகளுக்காகப் பல செயல்பாடுகளை நடத்தி வந்த 16 குரூப்ஸ் இன்னோவேஷன் லேப்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார்.

நிஷாந்தினி புன்னகையுடன் கூறுகிறார்: “எனக்குக் குழந்தைகளை மிகவும் பிடிக்கும், அவர்களுடன் உரையாடுவதை உறுதி செய்யும் ஒன்றைச் செய்ய விரும்பினேன்.” நிதி பெறுவதற்காக இருவரும் பல முதலீட்டாளர்களை அணுகினர், அப்போது தற்செயலாக உணவு விஞ்ஞானி பசுபதியைச் சந்தித்தனர், அவர் அவர்களை PDG முத்துவிடம் அறிமுகப்படுத்தினார்.

இந்த ஜோடி முத்துவைச் சந்தித்தபோது, “நாங்கள் செய்யும் வேலையில் எங்களுக்கு இருந்த ஆர்வத்தை அவர் உடனடியாகக் கண்டறிந்தார். கல்வி சார்ந்த எங்களது தயாரிப்புகளுக்குச் சரியான சந்தைப்படுத்தல் தேவை என்று கூறி, அவர் ரோட்டரி மாவட்ட ஆளுநராக நடத்திய RYLA அமர்வில் பங்கேற்கப் பரிந்துரைத்தார்.” முத்து தொடங்கிய விஞ்ஞான ரதம் (சக்கரங்களில் அறிவியல்) என்ற மற்றொரு திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பசுபதி உள்ளார்.

வெங்கடசுப்ரமனியன் மற்றும் நிஷாந்தினி ராஜா.



அவர்கள் 2023-ல் கலந்து கொண்ட RYLA அமர்வு, குழந்தைகளுக்கு அறிவியலை ஒரு வேடிக்கையான கற்றல் செயல்பாடாக மாற்றுவதற்கான அவர்களது தயாரிப்புகளை மேம்படுத்தவும் சந்தைப்படுத்தவும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நிஷாந்தினி கூறுகிறார்: "லேப் என் பாக்ஸ் ஆற்றல்மிக்க அறிவியல் பார்ட்டிகள், ஈர்க்கக்கூடிய பள்ளி அறிவியல் நிகழ்ச்சிகள் மற்றும் சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட அறிவியல் கருவிகள் மூலம் அறிவியலுக்கு உயிர் கொடுக்கிறது. எங்கள் அறிவியல் பார்ட்டிகள் கொண்டாட்டங்களை ஒரு அனுபவப்பூர்வமான சாகசமாக மாற்றுகின்றன, அங்கு குழந்தைகள் பரிசோதனை செய்து, ஆராய்ந்து, மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள்."

வெங்கட் மேலும் கூறுகையில்: "பள்ளிகளில், எங்களது கலந்துரையாடல் முறையிலான அறிவியல் நிகழ்ச்சிகள் கற்றலை உற்சாகப்படுத்துவதோடு மாணவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுகின்றன. வீட்டிற்கு எடுத்துச் செல்லும் எங்களது அறிவியல் கருவிகள், நிகழ்வுக்கு அப்பாலும் கற்றலைத் தொடரச் செய்கின்றன, குழந்தைகள் தங்கள் சொந்த வேகத்தில் கருத்துகளை ஆராய ஊக்குவிக்கின்றன. லேப் என் பாக்ஸ் - ஃபன் சயின்ஸ் அன்-பாக்ஸ்டு என்ற எங்களது தாரக மந்திரத்தின்படி, அறிவியலை மகிழ்ச்சிகரமானதாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும், மறக்க முடியாததாகவும் மாற்றுகிறோம்."

அந்த DIY அறிவியல் பெட்டியை ஒரு குழந்தை திறக்கும்போது, 10 அல்லது 20 வெவ்வேறு பொருட்கள் வெளியே வரும் என்றும், அவற்றுடன் விளையாடும்போது குழந்தை பல அறிவியல் உண்மைகளைக் கண்டறியும் என்றும் அவர் விளக்குகிறார். இந்த உரையாடலில் நான் கண்டறிந்த ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், சிறுவர்களை விட சிறுமிகள் அறிவியலில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். "சிறுவர்கள் விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்... ஆனால் சிறுமிகள் அறிவியலால் கவரப்படுகிறார்கள். தடைய அறிவியல் விசாரணை குறித்த எங்கள் ஃபாரன்சிக் பாக்ஸ் மீது அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர்." பெட்டிகளின் உள்ளடக்கத்தைப் பொறுத்து, அதன் விலை 500 முதல் 1,200 ரூபாய் வரை இருக்கும்.

வெங்கட் தனது RYLA அமர்வை ஒரு "தூண்டுதலாக" உணர்ந்தார்... "பயிற்றுவிப்பாளர்கள் உங்கள் மனதில் பல யோசனைகளை விதைக்கிறார்கள். முழு அனுபவமும் உங்களுக்குள் ஒரு பொறி போன்றது... ஒரு தொழில்முனைவு பொறி. தனிப்பட்ட முறையில், இந்த RYLA அமர்வுகள் அனைவருக்கும் ஏற்றது... வணிகம் என்ற வார்த்தையின் அர்த்தம் கூட தெரியாதவர்களுக்குக் கூட இது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் உணர்ந்தேன்."

"பொருட்களை உருவாக்குவதுதான் எனக்குப் பிடித்த விஷயம்!" என்கிறார் ஜான் தாமஸ். 2022-ல் RYLA அமர்வில் பங்கேற்ற இவர், சிவகாசியில் தான் படித்த கல்லூரியின் ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

அவர் அப்போது மெக்கானிக்கல் இன்ஜினியரிங்கில் டிப்ளமோ படித்துக் கொண்டிருந்தார்; அதற்கு முன்பு சென்னையில் உள்ள லயோலா கல்லூரி மற்றும் மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரி (MCC) ஆகிய இரண்டு முன்னணி கல்லூரிகளில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். லயோலாவில் இருந்தபோது, மற்றொரு மாணவருடன் இணைந்து "2019-லேயே ஒரு EV ஸ்கூட்டரை உருவாக்கினோம். எனக்கு பொருட்களை உருவாக்குவது மிகவும் பிடிக்கும்... லெகோ போன்ற விளையாட்டுகள் எனக்கு மிகவும் பிடித்தவை. அதுவே எனது ஆர்வமாக இருந்தது, என் வாழ்நாள் முழுவதும் அதையே செய்ய விரும்பினேன்."

ஆனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆலோசகராக இருந்த அவரது தந்தை இதை விரும்பவில்லை. "ஆரம்பத்தில் என் தந்தை கொஞ்சம் பணம் கொடுத்தார், ஆனால் நான் பொறுப்பற்றவன் என்று அவர் நினைத்தார். அவரைப் பொறுத்தவரை கண்டுபிடிப்புகள் அல்லது சோதனைகள் செய்வது தேவையற்றது. என்னிடம் ஏற்கனவே ஒரு தொழில் இருக்கிறது; அதை ஏன் நீ எடுத்து நடத்தக்கூடாது? என்று கூறி எப்போதும் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுரை கூறுவார்."

ஆனால் மகனுக்கு அதில் விருப்பமில்லை, எனவே தனது சொந்த ஊரில் உள்ள பாலிடெக்னிக்கில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ செய்ய முடிவு செய்தார். EV துறையை வணிக ரீதியாகத் தொடங்க விரும்பினார், "ஆனால் உங்களுக்குத் தெரியும், அது அதிக முதலீடு தேவைப்படும் தொழில். என் தந்தை சொன்னார்: உனக்கு EV வேண்டுமென்றால், டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனத்தில் சேர். எங்காவது வேலைக்குச் செல், அல்லது சிறியதாக எதையாவது தொடங்கு."



*ஜான் தாமஸ்*

டிப்ளமோ முடித்த ஆறு மாதங்களிலேயே, தாமஸ் தனது 23 வயதில் திருமணம் செய்து கொண்டார்! இப்போது அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள். "அதனால் வெளியே சென்று புதிய விஷயங்களை ஆராயும் வாய்ப்பை இழந்தேன். என் தந்தை தனது கூட்டாளர்களிடமிருந்து சில இயந்திரங்களை வாங்கி, அவரது பழைய தொழிற்சாலை கட்டிடம் ஒன்றை எனக்குக் கொடுத்து, EV-க்கு பதிலாக இரும்பு கட்டமைப்புகளை உருவாக்குமாறு கூறினார்."

அவர் சில முயற்சிகளைச் செய்தார், அவை தோல்வியடைந்தன. பின்னர் IKEA பாணியில் வீட்டிலேயே பொருத்தக்கூடிய இரும்பு அலமாரிகள், நாற்காலிகள் போன்றவற்றை உருவாக்குவதில் வெற்றியடைந்தார். விவசாயக் கருவிகள் மற்றும் பிற இயந்திரங்களையும் அவர் தயாரிக்கிறார். இருப்பினும், இது அவருக்கு முழு திருப்தியை அளிக்கவில்லை, "என்னால் புரிந்து கொள்ள முடியாத பல நுணுக்கங்கள் இருந்ததால் நான் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தேன்."

ஒரு கட்டத்தில் அவரது தந்தை நிதியுதவியை நிறுத்தினார், "மேலே ஏதாவது செய்ய வேண்டுமென்றால் உனது நகைகளை அடகு வை" என்று கூறினார். அவரது மனைவியும் தனது நகைகளைக் கொடுத்து உதவினார். சோலார் சிஸ்டம்களை வாங்கிப் பொருத்தும் மற்றொரு தொழில் மூலம் அவர் கூடுதல் பணம் திரட்டினார். "நாங்கள் சோலார் பேனல்கள், இன்வெர்ட்டர்கள் மற்றும் பேட்டரிகளை வாங்குகிறோம், அவற்றை முழுமையாகப் பொருத்துவதற்கு என்னிடம் ஒரு குழு உள்ளது. இது லாபகரமான தொழில்."

அவரது ஸ்டார்ட்அப் நிறுவனத்திற்கு ட்ரினிட்டி ஐசிஆர் என்டர்பிரைசஸ் என்று பெயரிடப் பட்டுள்ளது; இது "கண்டுபிடிப்பு, பாதுகாப்பு மற்றும் சீர்திருத்தம்" ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு உற்பத்தி மற்றும் பொறியியல் நிறுவனம் ஆகும். சூரிய ஆற்றல் அமைப்புகளை நிறுவுதல் மற்றும் துல்லியமாகத் தயாரிக்கப்பட்ட ஸ்டீல் தயாரிப்புகளான பர்னிச்சர்கள், விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள், சூரிய ஆற்றல் தகடுகளைத் தாங்கும் கட்டமைப்புகள் (இவை அவரது தளத்திலேயே தயாரிக்கப்படுகின்றன) மற்றும் மொத்த அளவிலான பிரத்யேகப் பொறியியல் உதிரிபாகங்கள் போன்ற வலுவான மற்றும் அத்தியாவசியத் தொழில் துறைகளை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் இயங்குகிறோம். வடிவமைப்பு, முன்மாதிரி உருவாக்கம் மற்றும் அளவிடக்கூடிய உற்பத்தி ஆகியவற்றில் நேரடி அணுகுமுறையுடன், சிவகாசி போன்ற மூன்றாம் நிலை நகரங்களுக்குத் தேவையான உற்பத்தி சேவைகளை நாங்கள் வழங்குகிறோம்."

அவரது மனம் இன்னும் EV தொழிலிலேயே உள்ளது; குறிப்பாக விவசாயத்திற்கான மின்சார இயந்திரங்கள் தயாரிப்பதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளார். சிறிய வகை EV டிராக்டர்களைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளார். தற்போது இது ஒரு போராட்டமாக இருக்கலாம், ஆனால் நான் ஆர்வமாக இருக்கும் தயாரிப்பு உற்பத்தித் துறையில் நிச்சயமாக வெற்றி பெறுவேன். டாடா மோட்டார்ஸ் போன்ற பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான OEM உதிரிபாகங்களைத் தயாரித்து வழங்க வேண்டும் என்பதே என் விருப்பம், என்று தாமஸ் நம்பிக்கையுடன் கூறுகிறார்."

2017-ல் சிவில் இன்ஜினியரிங் முடித்த கிருபாகரன் சத்தியசீலன், தமிழகத்தின் ராஜபாளையத்தைச் சேர்ந்தவர். நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகப் பொறியியல் துறையில் பணியாற்றிய அவர், தனது மாவட்டத்தில் (விருதுநகர்) ரோட்டரி சங்கம் மூலம் நடத்தப்படும் RYLA பற்றி அறிந்து, 2021 நவம்பரில் ஒரு அமர்வில் கலந்து கொண்டார்.

அந்த மூன்று நாள் அமர்வு அவருக்கு எப்படி உதவியது என்று கேட்டபோது, அந்தப் பயிற்சி முறை "எளிதாக முன்னேற உதவுகிறது" என்றார். "இது மிகவும் நடைமுறைக்கு ஏற்றது; அவர்கள் உங்களுக்கு 10 காரணிகளை வழங்குவார்கள், உங்கள் விருப்பப்படி அவற்றைக் குறிக்க வேண்டும். நீங்கள் எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றோ, அது எப்படி உங்களை கோடீஸ்வரராக்கும் என்றோ அவர்கள் சொல்ல மாட்டார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரிவில் எட்டு காரணிகளை நீங்கள் தேர்ந்தெடுத்தால், அந்தத் தொழிலில் நீங்கள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகள் மற்றும் அவற்றைத் தீர்க்க நீங்கள் எடுக்க வேண்டிய யதார்த்தமான படிகள் என்ன என்பதை அவர்கள் கூறுவார்கள். அதனால்தான் இந்தப் பயிற்சி மிகவும் நடைமுறை ரீதியானது என்று நாங்கள் அனைவரும் கூறுகிறோம்."

"அப்படியானால் அவர்கள் வெறும் கனவுகளை விற்பனை செய்யவில்லை..." என்று அந்த இளைஞர்களிடம் நான் கேட்டபோது, அவர்கள் அனைவரும் ஒருமனதாக, "ஆமாம்; இந்தப் பயிற்சி மிகவும் நடைமுறை ரீதியானது என்று நாங்கள் கூறுகிறோம்" என்றனர்.



*கிருபாகரன் சத்தியசீலன்*

கிருபாகரன் பயிற்சியை முடித்துவிட்டு, ஸ்பைருலினா காப்ஸ்யூல்கள் தயாரிப்பில் இறங்கினார். இதில் புரதம், வைட்டமின்கள் B12, E, K மற்றும் ஒமேகா 3 போன்ற ஊட்டச்சத்துக்கள் இருப்பதாக அவர் விளக்குகிறார். “இது ஒரு சூப்பர் ஃபுட், அன்றாட உணவில் போதுமான ஊட்டச்சத்து கிடைக்காதவர்களுக்கு இது அவசியம்.”

சுமார் 3 இலட்சம் ரூபாய் முதலீட்டில் இதைத் தொடங்கினார், அந்தப் பணத்தை அவரது தாயார் வழங்கினார். RYLA-வில் “முதலீட்டு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன, இது நாங்கள் தயாரிக்கும் வணிகத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்” என்று அவர் விளக்குகிறார்.

ஸ்பைருலினா தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தலில் பல சிக்கல்களைச் சந்தித்ததாக அவர் ஒப்புக்கொள்கிறார், ஆனால் அவற்றைக் கையாண்டுள்ளார். ஆன்லைன் மூலமாகவும் கண்காட்சிகள் மூலமாகவும் விற்பனை செய்கிறார்.

திருச்சியைச் சேர்ந்த மதுசூதன் ராஜ்ராணி கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளார், அவர் ரியல் எஸ்டேட் மற்றும் உட்புற வடிவமைப்பு ஆகிய இரண்டையும் கவனித்து வருகிறார். 2023-ல் திருச்சி ரோட்டரி சங்கம் நடத்திய RYLA அமர்வில் அவர் பங்கேற்றபோது, “ஏற்கனவே மூன்று ஆண்டுகளாக தொழிலில் இருந்தார். ஒரு சுயசார்பு கொண்ட நகரிய மாதிரியை உருவாக்குவதே அவரது ஆரம்பகால வணிகக் கனவாக இருந்தது.”

ஆனால் அதற்கு மிகப்பெரிய முதலீடு தேவைப்படுமே? “ஆம், ஆனால் நான் ஒரு கட்டமைப்பு பொறியாளர் என்பதால், இது எனது கல்லூரி நாட்களிலிருந்தே கனவாக இருந்தது.” அவர் சென்னையில் சிவில் இன்ஜினியரிங்கில் முதுகலை முடித்துவிட்டு ஓராண்டு அங்கு பணியாற்றினார், ஆனால் கோவிட் தாக்கியபோது தனது சொந்த ஊருக்குத் திரும்பினார். “சும்மா இருக்க” விரும்பாமல் அவர் தனது சொந்த ரியல் எஸ்டேட் முயற்சியைத் தொடங்கினார்.



*மதுசூதன் ராஜ்ராணி*

இதற்காக அவர் சுமார் 60 இலட்சம் ரூபாய் கடன் வாங்கினார், ஆனால் வங்கியிலிருந்து அல்ல. அது மாதம் 2.5 சதவீத என்ற அதிர வைக்கும் வட்டி விகிதத்தில் வாங்கப்பட்ட பிணையில்லா கடன்!

எனது அதிர்ச்சியான என்னது? என்ற கேள்விக்கு அவர் புன்னகையுடன் கூறுகிறார்: “ஆம், அது ஒரு மிகப்பெரிய தவறு. நான் முற்றிலும் வழி தெரியாமல் தவித்தேன்.” 30 ஆண்டுகளாகத் தொழிலில் இருக்கும் அவரது குடும்பத்தினர் இதுபோன்ற அவசரச் செயலைச் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தியும், அவர் அதைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறார்.

இறுதியில் அவர் கூட்டு முயற்சிகளில் இறங்கினார். தான் நிர்ணயித்த விலை கிடைக்கும் வரை வீடுகளை விற்காமல் பிடிவாதமாக இருந்ததுதான் தான் செய்த தவறு என்று மதுசூதன் கூறுகிறார். இதனால் அதிக வட்டி விகிதத்திலேயே தனது லாபம் முழுவதையும் அவர் இழந்தார். “ஆனால் நான் RYLA-விற்குச் சென்றபோது, பண விஷயத்தில் ஈகோ இருக்கக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். அது உங்கள் தொழிலை அழிக்கிறது என்றால், நீங்கள் அதிலிருந்து வெளியேற வேண்டும். உண்மையைச் சொல்லப்போனால், RYLA-விற்கு வருவதற்கு முன்பு நான் முற்றிலும் திசை தெரியாமல் இருந்தேன்,” என்று அவர் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்.

“என் மீதான நிதி நெருக்கடி மிக அதிகமாக இருந்தது. கட்டுமானம், உட்புற வடிவமைப்பு போன்ற பிற திட்டங்களில் எனது நிறுவனம் ஈட்டிய லாபம்கூட அதிக வட்டியைச் செலுத்துவதற்கே செலவானது. அத்தகைய வட்டி விகிதத்தைத் தாக்குப் பிடிக்க முடியாது, அதனால் தொழிலை எப்படி முன்னேற்றுவது என்று என்னால் சரியாகச் சிந்திக்க முடியவில்லை. எல்லாவற்றையும் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்ததால் என்னால் தொழிலை விட்டு வெளியேறவும் முடியவில்லை.”

“ஆரம்பத்தில் அவர்கள் பேச்சைக் கேட்காததால்” தனது பெற்றோரிடமும் அவர் உதவி கேட்க விரும்பவில்லை. தான் தோண்டிய பள்ளத்திலிருந்து வெளியே வர, அவர் தனது வீடுகளை அடக்க விலைக்கே விற்கத் தொடங்கினார். இதன் மூலம் சுமார் 70 லட்சம் ரூபாய் கடனில் கிட்டத்தட்ட 80 சதவீதத்தை அவர் அடைத்தார். சுமார் 55 லட்சம் ரூபாயைச் செலுத்திவிட்டார், இன்னும் 15 லட்சம் ரூபாய் மட்டுமே மீதமுள்ளது. அசலில் பெரும் பகுதி குறைந்ததால் வட்டித் தொகையும் குறைந்தது, இதனால் அவர் நஷ்டத்திலிருந்து மீண்டு மீண்டும் லாபப் பாதைக்குத் திரும்பியுள்ளார்.

அவர் தனது வணிக மாதிரியையும் மாற்றியுள்ளார். இப்போது தனி வீடுகளுக்குப் பதிலாக முதலீட்டாளர்களைச் சேர்த்துக்கொண்டு அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டுகிறார், இதில் லாபத்தில் முதலீட்டாளர்களுக்குப் பங்கு வழங்கப்படுகிறது. “இப்போது நான் வட்டி கட்ட வேண்டிய அவசியமில்லை,” என்று மதுசூதன் புன்னகைக்கிறார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# RYLA ஊக்குவிப்பாளர்கள்

RYLA-வில் பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்களில் ஒருவரான ஜான் தாமஸிற்கு, இந்த அமர்வு மூன்று நாள் தீவிரப் பயிற்சி அல்லது “மிகவும் நடைமுறை அணுகுமுறையைக் கொண்ட ஒரு MBA” போன்றது. “நான் என்ன தொழில் செய்ய விரும்புகிறேன் என்பது பற்றிய தெளிவான யோசனை எனக்குக் கிடைத்தது.” ஒரு குறுகிய RYLA அமர்வை ஒரு தீவிர MBA படிப்புடன் அவர் எப்படி ஒப்பிடுகிறார் என்று கேட்டபோது, ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் 400 ரூபாய் வழங்கப்படுவதாகத் தாமஸ் விளக்குகிறார். அந்தப் பணத்தைக் கொண்டு மூலப்பொருட்களை வாங்கி, அவற்றை ஒரு பொருளாக மாற்றி உள்ளூர் சந்தையில் விற்க வேண்டும். உதாரணமாக, ஃப்ரூட் சாலட்டுக்கான பழங்கள் அல்லது காகித கைவினைப் பொருட்களுக்கான காகிதம், பசை போன்றவை. “அந்த சந்தையில் உள்ள வாடிக்கையாளர்களின் விபரங்கள் மற்றும் அவர்களின் செலவு செய்யும் முறை குறித்து எங்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது.”

ஃப்ரூட் சாலட் மற்றும் ரோஸ் மில்க் முதல் பானி பூரி அல்லது காகித கைவினைப்பொருட்கள் வரை பல்வேறு தயாரிப்புகள் இதில் அடங்கும். ஒருமுறை, “சில பங்கேற்பாளர்கள் பதின்ம வயது சிறுமிகள் வாங்குவார்கள் என்று எதிர்பார்த்து காகிதக் கம்மல்களைச் செய்தார்கள்”. ஆனால் அவர்களின் உண்மையான வாடிக்கையாளர்கள், “தங்கள் தோழிகளுக்காக அவற்றை வாங்கிய சிறுவர்கள்!”

சந்தைப்படுத்துதலின் நுணுக்கங்கள் இதுதான்! பங்கேற்பாளர்கள் தங்கள் தொழில்நுட்பத் திறன்களைப் பயன்படுத்தி, ஒரு நிமிட ரீல் போன்ற டிஜிட்டல் உள்ளடக்கங்களை உருவாக்கி கட்டணம் பெற்று சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தலாம். இதன் தெளிவான நோக்கம்: ஒரு வணிக மாதிரியை உருவாக்கி வருமானம் ஈட்டுவது! மேசையைச் சுற்றியிருந்தவர்கள் இதை ஆமோதித்துத் தலையசைக்கிறார்கள். “எங்களுக்குப் பிந்தைய RYLA குழுக்கள் எங்களை விடச் சிறப்பாகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு RYLA பயிற்சியும் மேன்மேலும் சிறப்படைந்து வருகிறது” என்பது அனைவரின் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

தொழில்முனைவோராக மாறிய பங்கேற்பாளர்கள் RYLA ஸ்டார்ட்டர்


ரஷீதா பகத்

ஸ்டார்ஸ் என்ற வாட்ஸ்அப் குழுவின் மூலம் தொடர்பில் உள்ளனர். இதில் 328 உறுப்பினர்கள் உள்ளனர். யாருக்காவது வணிகத் தேவை இருந்தால், அதை இந்தக் குழுவில் தெரிவித்து, அதற்குப் பதிலளிப்பவருடன் தொடர்பு கொள்ளலாம்.

ஒவ்வொரு குழுவிலிருந்தும், இரண்டு சிறந்த பங்கேற்பாளர்கள் சிங்கப்பூர் பயணத்திற்குத் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள், அங்கு அவர்களுக்காகச் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அங்கிருக்கும் வணிகக்கலாச்சாரத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும், அந்த நாட்டின் பொருளாதாரம் ஏன் இவ்வளவு சிறப்பாக வளர்ந்துள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளச் செய்வதுமே இதன் நோக்கம்.

அகமது, கனிஷ்கா, கிருபாகரன் மற்றும் மதுசூதனன் ஆகியோர் சிங்கப்பூர் சென்று அந்த அனுபவத்தை மிகவும் ரசித்தனர்.



மாணவர்கள் உட்பட இன்னும் இளையவர்கள் இப்போதெல்லாம் RYLA-வில் சேருவதாக வெங்கட் கூறுகிறார். “அவர்கள் எங்களுக்கு டிஜிட்டல் மார்க்கெட்டிங் சேவைகளை வழங்குகிறார்கள். நாங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளும்போது, நான் இரண்டாம் அல்லது மூன்றாம் ஆண்டு மாணவர், எனக்கு இவ்வளவு பணம் கொடுத்தால், உங்களுக்காக இத்தனை இன்ஸ்டா பதிவுகளை வடிவமைத்துத் தருகிறேன் என்று கூறுகிறார்கள். அவர்களிடம் முதலீடு எதுவும் இல்லை, ஆனால் அவர்கள் தங்கள் நேரத்தைப் பணமாக்குகிறார்கள்.”

தான் அன்புடன் வளர்த்து, நிதியுதவி அளித்து வரும் இந்தத் திட்டத்தின் எதிர் பார்ப்புகள் மற்றும் முடிவுகள் குறித்து PDG முத்து கூறுகையில்: “இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, வேலைவாய்ப்புகளை அளித்து, இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் தன்னம்பிக்கை கொண்ட தொழில்முனைவோராக வளர்வதைப் பார்க்கும்போது நான் மிகுந்த மனநிறைவை உணர்கிறேன். அவர்கள் பொறுப்பேற்று, திறமையான வணிகர்களாக வளர்வதைக் காண்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது.”

முக்கியத் தொழில்துறைகளுக்கு ஆலோசகராகவும், RYLA பங்கேற்பாளர் களின் அன்பிற்குரியவராகவும் இருக்கும் பயிற்றுவிப்பாளர் A A ஜெயராமன் கூறுகையில், இந்தத் திட்டத்தின் தனிச்சிறப்பு அதன் அணுகுமுறைதான் என்கிறார் - பயிற்சிக்கு முன்னதாகவே “ஒவ்வொரு பங்கேற்பாளரின் விபரங்கள், வணிக ஆர்வம், செயல்படுத்தக்கூடிய யோசனைகள் மற்றும் அவர்கள் விடை காண விரும்பும் கேள்விகள் சேகரிக்கப்படுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு அர்த்தமுள்ள முறையில் பதிலளிக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்கிறோம்,” இதன் மூலம் அவர்களின் நோக்கம் வலுப்படுத்தப்பட்டு யோசனைகள் மெருகேற்றப்படுகின்றன.

பங்கேற்பாளர்கள் பயிற்சியின் முடிவில்: “தங்கள் வணிக யோசனை செயல்படுத்தக்கூடியது என்ற உறுதி; எதிர்காலத்தைத் திட்டமிட உதவும் ஒரு வணிகத்திட்டம் மற்றும் அவரால் வடிவமைக்கப்பட்ட ஒரு தகவல் தொகுப்பு ஆகியவற்றைத் தங்களோடு கொண்டு செல்கிறார்கள். மேலும், பயிற்சி முடிந்த பிறகும் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு எங்கள் குழு தொடர்ந்து இருக்கும் என்ற உறுதியையும் அவர்கள் பெறுகிறார்கள்.”

ஜெயராமன் மேலும் கூறுகையில், “இது வெறும் மூன்று நாள் பயிற்சிப் பட்டறை அல்ல. பங்கேற்பாளர்கள் பதிவு செய்த தருணத்திலிருந்தே எங்களுடனான தொடர்பு தொடங்கு கிறது. பயிற்சிக்கு ஆறு நாட்களுக்கு முன்பே, மதிப்பீடு மற்றும் பிற செயல் பாடுகள் உள்ளிட்ட பயிற்சிகளை நாங்கள் தொடங்குகிறோம், அதனால் அவர்கள் எங்களிடம் வரும் போது, நேரடியாகப் பயிற்சியின் முக்கிய நீரோட்டத்தில் இணைந்து விடுகிறார்கள்.”

மேலும், அந்த மூன்று நாட்களும் விரிவானவை மற்றும் தீவிரமானவை; “பங்கேற்பாளர்கள் ஏற்கனவே ஒரு தொழில்முனைவு பயணத்திற்குத் தயாராக வருவதால், அவர்களிடையே சிறந்த மாற்றத்தைக் காண்கிறோம். எனவே, முறையான பின்தொடர்தல் இருந்தால், விதைகளை விதைக்க இந்த மூன்று நாட்கள் போதுமானவை. எங்கள் குழு ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் வழிகாட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது. இந்த முறை, உண்மையான தேவைகளின் அடிப் படையில் எங்கள் திட்டத்தை வடிவமைக்க உதவுகிறது.” இதை அந்தத் தொழில்முனைவோரும் உறுதிப்படுத்துகிறார்கள்; அவர்களில் ஒருவர், “முந்தைய நாள் மாலை தான் ஜெயராமன் சாருடன் 45 நிமிடங்கள் பேசினேன்” என்று உற்சாகத்துடன் கூறுகிறார்.

அவருக்கு உங்களை நினைவிருக்கிறதா? “நிச்சயமாக, அவர் நடத்திய ஒவ்வொரு RYLA பயிற்சியையும் அவர் நினைவில் வைத்திருக்கிறார்,” என்பதே பதிலாக இருந்தது.



RC *நீலகிரிஸ் உறுப்பினர்* Dr. T S *சாப்ரா (இடமிருந்து மூன்றாவது), முன்னாள் தலைவர் விஜயகுமார் டார் (வலது) மற்றும் சக ரோட்டேரியன்களுடன்.*

# 99 வயதிலும் ஓய்வில்லா சேவைப்பணி

ஜெய்ஸ்ரீ

99 வயதில் பெரும்பாலான மக்கள் பொது வாழ்விலிருந்து விலகிவிடுவர், ஆனால், டாக்டர் TS சாப்ரா, நீலகிரி மாவட்டம், குன்னூரில் உற்சாகத்துடன் ரோட்டரி கூட்டங்களில் பங்கேற்கிறார். மூத்த பல் மருத்துவர், ராணுவ அதிகாரி மற்றும் ரோட்டேரியனான அவர், சேவை என்பது ஒரு முழக்கமாக இல்லாமல் ஒரு வாழ்க்கை முறையாக ஒரு தலைமுறையை பிரதிநிதித்துவபடுத்துகிறார். ரோட்டரியில் 57 ஆண்டுக்காலம் மற்றும் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகாலம் வாழ்ந்த அனுபவம் அவரிடம் உள்ளது. நீலகிரி ரோட்டரி சங்கத்தின் (RID 3203) மூத்த உறுப்பினரான அவர் அனைவராலும் மதிக்கப்படுகிறார்.

பிரிவினைக்கு முன்பு இருந்த இந்தியாவில் பிறந்த சாப்ராவின் வளர்ச்சி சுதந்திர போராட்ட இயக்கத்தால் வடிவமைக்கப்பட்டது. 1944 மற்றும் 1947-க்கும் இடைப் பட்ட காலத்தில் லாகூரில் பல் மருத்துவம் படித்துவந்த அவர், சுதந்திரம் கோரி வந்த இளம் இந்தியர்களின் தேசபக்தி

இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அவர் தீவிரமாக பங்கேற்றார்.

1947-ம் ஆண்டில் பிரிவினைக்குப் பின் இவரது குடும்பம் லாகூரிலிருது வெளியேறியது. லட்சக்கணக்கான மக்களைப் போலவே இவரது குடும்பத்தினரும் சுதந்திர இந்தியாவுக்குள் அகதிகளாக வந்தனர். மும்பை JJ மருத்துவமனையில் மீண்டும் பல் மருத்துவ படிப்பை தொடங்கி 1948-ல் படித்து முடித்தார். சில மாதங்களுக்குப் பின், அதாவது 1949-ம் ஆண்டு ஜனவரியில், இந்திய ராணுவம் தகுதி வாய்ந்த பல் மருத்துவர்களை அதிகாரி அந்தஸ்தில் பணிக்கு சேருமாறு அழைப்பு விடுத்தது. சாப்ரா உடனடியாக அந்த பணிக்கு விண்ணப்பித்தார். அப்போது இந்திய ராணுவத்தில் சேர்ந்த பல் மருத்துவர்களில் இவரும் ஒருவர்.

நீலகிரியில் உள்ள வெலிங்டன் ராணுவ மருத்துவமனையில் முதலில் மேஜராகவும், பின்னர் லெப்டினென் கர்னலாகவும் இருமுறை பெரிய பதவிகளை வகித்துள்ளார். 1966–67-ம் ஆண்டில் காசா முனையில் மோதல்கள் வலுத்திருந்த காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டின்படி அவர் அங்கு பணிபுரிய அனுப்பப்பட்டார். “இந்த அனுபவம் எனது உலக கண்ணோட்டத்தை விரிவுபடுத்தியது மற்றும் மனிதாபிமான சேவைக்கான எனது உறுதிப்பாட்டை ஆழப்படுத்தியது. எனக்கு ஒழுக்கம், விசுவாசம் மற்றும் தோழமையை ராணுவம் கற்றுக்கொடுத்தது. சாதி, மதப் பாகுபாடுகள் இல்லாமல் நாடு முழுவதிலிருந்தும் நாங்கள் அங்கு சென்று ஒரே குடும்பமாக செயல்பட்டோம்” என்று அவர் நினைவுகூர்ந்தார்.



*DG B தனசேகர் மற்றும் அவரது மனைவி அமுதப்ரியா Dr சாப்ராவின் 55 ஆண்டுகால ரோட்டரி சேவைக்காக அவரை பாராட்டினர். சங்கத்தலைவர் H ஹரிகிருஷ்ணன் வலதுபுறம் இருக்கிறார்.*

1969-ல் முன்கூட்டியே ஓய்வுபெற்ற சாப்ரா, குன்னூரில் தங்கியிருக்க முடிவுசெய்தார். நீலகிரி ரோட்டரி சங்கத்தின் கூட்டுறவு மற்றும் சேவை நெறிமுறைகளால் ஈர்க்கப்பட்ட அவர், 1969-ம் ஆண்டு செப்டம்பரில் ரோட்டரி உறுப்பினராகச் சேர்ந்தார். “கூட்டுறவு, சேவை ஆகிய இரண்டு தூண்களை ரோட்டரி தாங்கிப் பிடிப்பதை அறிந்த நான், அதனால் ஈர்க்கப்பட்டு சேர்ந்தேன்” என்று அவர் நினைவுகூர்ந்தார்.

“இன்று ரோட்டரி எனது குடும்பங்களில் ஒன்றாகிவிட்டது. எனது வலிமைக்கும், உணர்ச்சிபூர்வமான செயல்பாடுகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது” என்று கூறும் சாப்ரா, இப்போதும் தனது மகள் சுனைனாவின் துணையுடன் வந்து ரோட்டரி கூட்டங்களில் பங்கேற்கிறார். தாயார் மறைவுக்குப் பின் சுனைனாவும் ரோட்டரியில் சேர்ந்தார். அவரது மனைவி அருணா, 1970-களில் இன்னர் வீல் சங்கத்தின் நிறுவனச் செயலராக இருந்தவர்.



*Dr சாப்ரா மற்றும் அவரது குடும்பத்தினர் தங்கள் இளமைப் பருவத்தில்.*

பல்வேறு ரோட்டரி நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக பல் மருத்துவம்

மற்றும் மருத்துவ முகாம்களை நடத்தியதையும், இலவச மருத்துவச் சேவை செய்து வந்ததையும் சாப்ரா பெருமையாக குறிப்பிடுகிறார். எனினும் ரோட்டரி இன்டர்நேஷனல் தன்னார்வலராக பல் மருத்துவ சேவை செய்த அனுபவத்தை அவர் தனித்து குறிப்பிடுகிறார். இதன் மூலம் அவர் பல நாடுகளுக்குச் சென்றார். உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளவும், ரோட்டரியின் உலகளாவிய கூட்டுறவு மீதான அவரது நம்பிக்கையை வலுப்படுத்தவும் இது உதவியது.



*எகிப்தில் உள்ள UNEF முகாமில் சர்வதேச பல் மருத்துவ அதிகாரிகளுடன் Dr சாப்ரா (இடமிருந்து இரண்டாவது).*

1991-ம் ஆண்டு நீலகிரி ரோட்டரி சங்கம், தனது பொன் விழாவைக் கொண்டாடியபோது அப்போது RI தலைவராக இருந்த ராஜேந்திர சாபூவின் வருகையை அவர் நினைவுகூர்ந்தார். இந்த கொண்டாட்டத்துக்கு இலங்கை, வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். “பாகிஸ்தானிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் அனைவரும் பஞ்சாபிகளாக இருந்தனர். நான் அவர்கள் மொழியில் பேசுவதைக் கண்டு அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அது எனக்கு பழைய தருணத்தை நினைவுபடுத்தியது. அவர்கள் பாகிஸ்தானில் உள்ள எனது சொந்த கிராமத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தனர்” என்கிறார் சாப்ரா.

பல ஆண்டுகளாக ஆண்கள் மட்டுமே இடம்பெற்ற அமைப்பாக இருந்த ரோட்டரி, இன்று அதிக உள்ளடக்கத்துடன் பரிணாம வளர்ச்சியின் காரணமாக அதிக துடிப்புள்ள இயக்கமாக மாறியுள்ளதை அவர் நேரில் கண்டுள்ளார். இந்த வளர்ச்சியை வரவேற்கும் அவர், ஒரு மென்மையான எச்சரிக்கையையும் விடுக்கிறார். “நாம் யாரை உறுப்பினராக சேர்க்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ரோட்டரியின் மீது ஈடுபாடும், அதன் நெறிமுறைகளை பின்பற்றவும் நேரத்தை செலவிடவும் தயாராக இருக்கும் நபர்களை சங்கங்கள் அடையாளம் காண வேண்டும். நாம் ரோட்டரியில் சேரும்போது வெறும் உறுப்பினர்களாக இருக்கிறோம். நாம் முழு ஈடுபாட்டுடன் செயல் பட்டால்தான் உண்மையான ரோட்டேரியன்களாக இருக்க முடியும்” என்கிறார் அவர்.

புத்தகங்களை வாசிப்பது, இசையை கேட்பது, சமூக வலைத்தளங்கள் மூலம் உரையாடுதல், குன்னூர் சங்கத்தில் வாரம் ஒருமுறை பிரிட்ஜ் விளையாடுவது என அவர் இந்த வயதிலும் சுறுசுறுப்புடன் செயல்படுகிறார். முன்னாள் பல் மருத்துவரான அவரது மகன் தருண், இப்போது முழுநேர சுற்றுச்சூழல் ஆர்வலராக, தோடர்கள் கலாசாரத்தை பாதுகாப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்.

இளம் தலைமுறையினருக்கு அவர் சொல்ல விரும்பும் அறிவுரை இதுதான்: “மெதுவாக செயல்படுங்கள். நாம் பணத்துக்கு அடிமையாகிவிட்டோம். கடவுள் நமக்கு நேரத்தை கொடுத்திருக்கிறார். ஆனால், நாம் எதற்கெடுத்தாலும் அவசரப்படுகிறோம்”. இளம் தொழிலதிபர்கள் தங்கள் ஆசை களையும் கருணையையும் சமப் படுத்த வேண்டும். “பணம் சம்பாதி யுங்கள். ஆனால் ஒருபோதும் மனிதத் தன்மையை இழந்துவிடாதீர்கள். உங்கள் குடும்பத்தினரிடம் பேசுங்கள். நீங்கள் அக்கறை கொண்டிருப்பதாக அவர்களிடம் சொல்லுங்கள். எதையும் இன்றே செய்துவிடுங்கள். நாளைக்கு என்று ஒத்திப்போடாதீர்கள். அந்த நாளை வராமலே போகலாம்”.

சக ரோட்டேரியன்களுக்கு அவர் கூறும் செய்தி தெளிவாக உள்ளது. தலைமைத்துவம் கூட்டாக இருக்க வேண்டும். சேவை பணிவாக இருக்க வேண்டும். குழுவாக பணியாற்றினாலும் நேர்மையாக இருக்க வேண்டும்.

சங்கத்தின் உறுப்பினர் தீபிகா உன்னி சரியாக குறிப்பிடுகையில், “55 ஆண்டுகளாக ரோட்டரியில் இருக்கும் 99 வயது சாப்ரா மாமா, ‘சேவைக்கு ஒருபோதும் ஓய்வில்லை’ என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். ரோட்டேரியனாக இருப்பதில் அவர் அடையும் மகிழ்ச்சியும், ரோட்டரிக்கான அவரது வெளிநாட்டுச் சேவை பற்றிய கதைகளைக் கேட்பது எனக்கு மிகவும் பிடிக்கும்.

சக ரோட்டேரியனான ஜேக்கப் மாத்யூஸ், அவரது தெளிவான மனதைக் கண்டு வியக்கிறார். “இன்றும் அவர், பல ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற சம்பவங்களை விரிவாக நினைவுகூர்கிறார். அவரது நகைச்சுவை கூர்மையானது, ரசிக்கத்தக்கது, என்கிறார்.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவரை அறிந்திருக்கும் முன்னாள் தலைவர் விஜயகுமார் தார் கூறுகையில், “இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் உத்வேகம் கொடுக்கும் மனிதர் சாப்ரா. நீலகிரி யானைகளுக்கு போட்டியாக அவரது புத்தி கூர்மை இருக்கிறது. அவரது நகைச்சுவையில் ஒரு குறும்புத்தனம் தெரியும். வாழ்நாளில் நாம் ஒருமுறையாவது சந்திக்க வேண்டிய மனிதர், என்று கூறினார். ■

# RC மெட்ராஸ் வரலாற்றுடன் ஒரு உயிருள்ள பிணைப்பு




*இடமிருந்து:* PRID P T *பிரபாகர், ஜான் ஆம்ஸ்ட்ராங் மற்றும் அவரது மனைவி பெட்டி, சங்க உறுப்பினர்* M *பாலசுப்பிரமணியன் மற்றும் முன்னாள் தலைவர்* N K *கோபிநாத்.*

**கிரண் ஜெஹரா**

சென்னையில் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் (RCM), RID 3234, 28-வது வாராந்திர கூட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில், RCM-ன் நிறுவனத் தலைவர் சர் காட்ஃபிரே ஜார்ஜ் ஆம்ஸ்ட்ராங்கின் பேரன், ரோட்டேரியன் ஜான் ஆம்ஸ்ட்ராங் பங்கேற்றதுதான். “சர் காட்ஃபிரே, 1929-ல் எங்கள் சங்கத்தை நிறுவ உதவியதிலிருந்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, அவரது பேரன் நம் முன் நிற்கிறார். இன்றைய மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தை அதன் தோற்றத்துடன் இணைக்கிறார்” என்று சங்கத்தின் முன்னாள் தலைவர் கோபிநாத் தெரிவித்தார்.

சர் ஆம்ஸ்ட்ராங்கின் வாழ்க்கையை ஒரு பவர் பாயின்ட் விளக்கக்காட்சி விவரிக்கிறது. 23 வயதில் அவர் முதன் முதலில் இந்தியாவுக்கு வந்து தென்னிந்திய ரயில்வேயில் போக்குவரத்து கட்டுப்பாட்டாளராக பணியைத் தொடங்கினார். 1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கியபோது அவர் பிரான்சில் லெப்டினன்டாகவும், பின்னர் நார்மண்டியில் பட்டாலியன் கமாண்டராகவும் செயல்பட்டார்.

1920-ல் அவர் மீண்டும் இந்தியா திரும்பி, சென்னை துறைமுக கழகத்தின் தலைவராகப் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து அவர் 1929-ம் ஆண்டில் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தை நிறுவினார்.

இந்தியாவில் ரோட்டரியின் ஆரம்பகால ஆண்டுகளை கோபிநாத் விவரித்தார். பாம்பே ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு மெட்ராஸ் ரோட்டரி சங்கம் நிறுவப்பட்டது. இது நாட்டின் ஆரம்பகால ரோட்டரி சங்கங்களில் ஒன்றாகும். மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் சி.ஜேம்ஸ், மாவட்ட ஆளுநராக பணியாற்றியதை அவர் நினைவு கூர்ந்தார். அந்த நேரத்தில் இந்தியா ஒரே ரோட்டரி மாவட்டமாக, அதாவது ரோட்டரி மாவட்டம்-89 என செயல்பட்டு வந்தது. அதன் பின்னர் அவர் 1933–34-ம் ஆண்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக சேவையாற்றினார்.




*சங்க செயலாளர் பிரசன்னா ராஜகோபாலன் மற்றும் தலைவர் நிகில் ராஜ் ஆகியோர் ஜான் ஆம்ஸ்ட்ராங்குடன்.*

உங்கள் தாத்தாவின் வழியில் உங்களை தொடர்புபடுத்துவதை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று லண்டனில் உள்ள சிஸ்விக் மற்றும் பிரன்ட்ஃபோர்டு ரோட்டரி சங்க உறுப்பினரான ஜான் ஆம்ஸ்ட்ராங்கிடம் கேட்டபோது, “நான் இன்று உங்கள் முன் நிற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்” என்று பதில் கூறினார். இந்த கூட்டத்தில் PRID P T பிரபாகர் மற்றும் DGND S ரவி ஆகியோரும் கலந்துகொண்டனர். “ஒரு வாராந்திர கூட்டம்போல் அல்லாமல், ரோட்டரி, சேவை, திட்டங்கள் மற்றும் தலைமைத்துவத்தால் மட்டும் கட்டமைக்கப்படவில்லை, கதைகள், உறவுகள் மற்றும் தொடர்ச்சியும் அதில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த கூட்டம் நினைவூட்டியது,” என்று P T பிரபாகர் கூறினார்.

இந்த கூட்டத்தில் பிரபல மலையேற்ற வீரர் ஜாஃபர் இஸ்மாயிலுடன் துடிப்பான கேள்வி-பதில் நிகழ்வும் இடம்பெற்றது. 2012-ம் ஆண்டு கிளிமஞ்சாரோ மலையில் ஏறியதில் தொடங்கி, உயரமான மலைகளில் ஏறுவதை சவாலாகக் கொண்டவர் ஜாஃபர் இஸ்மாயில். 2024-ம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை படைத்தார். ■




# நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைதல்

ஓலுபுன்மி அஃபோலாபி

*நைஜீரியாவில் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பை குறைப்பதற்கான ஒரு திட்டத்தின் வெற்றி, புள்ளி விவரங்களால் அளவிட முடியாதது.*


Signs

இந்த புள்ளி விவரங்கள் காகித அளவில் அடையாளமற்றதாக இருக்கலாம். நைஜீரியாவில் 1,00,000 கர்ப்பிணிப் பெண்களில் 512 பேர் பிரசவத்தின்போது மரணிப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இது சர்வதேச அளவில் உயர்ந்த எண்ணிக்கையாகும். ஆனால், அவை எனக்கு அடையாள மற்றதாகத் தெரியவில்லை. நான் அந்த தாய்மார்களைப் பார்க்கிறேன். குழந்தைகளையும் பார்க்கிறேன். அந்த எண்ணிக்கைகள் துயரங்களாகவோ அல்லது வெற்றி களாகவோ மாறும் அறைகளில் நான் நிற்கிறேன்.

நான் நைஜீரியாவில் ஆரோக்கிய மான குடும்பங்களுக்காக ஒன்றிணைதல் என்னும் மானிய உதவி யுடன் கூடிய ரோட்டரி அறக்கட்டளை திட்டத்திற்காக இணைந்து பணியாற்று கிறேன். மூன்றாவது ஆண்டை பூர்த்தி செய்துள்ள இந்த முன்முயற்சி திட்டம், சில குறிப்பிட்ட பகுதிகளில் தாய்-சேய் இறப்பை 25 சதவீதம் குறைப்பதை நோக்கமகக் கொண்டது. இதைச் செய்ய, வீட்டில் இருப்பதைவிட மருத்துவமனைகளில் சுகாதார பராமரிப்பு பெறத் தேர்ந்தெடுக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க சமூகங்களுடன் உரையாடுகிறோம் மற்றும் வீட்டுக்குச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். சுகாதாரப் பணியாளர்களுக்கு கூடுதல் பயிற்சி அளிப்பதன் மூலம் அந்த சேவைகளின் தரத்தை உயர்த்துகிறோம்.

சமீபத்தில் மகப்பேறியல் மற்றும் பிறந்த குழந்தைகள் பராமரிப்பு தொடர்பான அவசர சிகிச்சை பயிற்சியின்போது எகிடி மாநிலத்தில் ஆயே அருகில் உள்ள மருத்துவ மையத்திற்கு பிரசவ வலியுடன் ஒரு பெண் வந்தார். அந்த பெண் இதற்கு முன்பாக ஐந்து முறை கர்ப்பமாக இருந்தார். இப்போது 36 வார கால இரட்டைக் குழந்தையை சுமந்துவந்தார்.

நிலைமை மிகவும் பதற்றமாகவே இருந்தது. மருத்துவமனையில் ஊழியர் பற்றாக்குறை இருந்தது. பொறுப்பில் இருந்த செவிலியரும் இல்லை. சமூக சுகாதார விரிவாக்கப் பணியாளர் ஒருவர் பிரசவத்தை கவனிக்க முன்வந்தார். அவர் செவிலியர் பயிற்சி பெற்றவர் அல்ல, ஆனால், அவர் எங்கள் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தார். அவரசர சிகிச்சை பயிற்சியின் மூலம் உயிர்களை காக்கும் திறன்பெற்றிருந்தார்.

இரட்டை குழந்தைகளில் முதல் குழந்தை தலையைத் தூக்கி வெளியே வந்தது. பிறந்த குழந்தையின் அழுகுரல் அறை முழுவதும் கேட்டது. ஒரு கணத்தில் எங்களுக்கு நிம்மதி ஏற்பட்டது. ஆனால், இரண்டாவது குழந்தை வெளிவருவது அவ்வளவு எளிதாக இல்லை. குழந்தையின் தலைப்பகுதிக்கு பதிலாக கால் பகுதி தெரிந்தது. சமூக ஆரோக்கியப்பணியாளர் முயற்சிகள் மேற்கொண்டும், பிரசவத்தில் முன்னேற்றம் இல்லை. நேரம் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. அறையில் இருந்தவர்கள் பதற்றத்துடனும், என்ன நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்புடனும் இருந்தனர்.

என்ன செய்யலாம் என்று உடனடியாக ஆலோசிக்கப்பட்டது. பயிற்சிக்கு வந்திருந்த மருத்துவ அதிகாரியும் மற்றும் ஒரு செவிலியரும் எந்த மறுப்பும் இல்லாமல் உதவ முன் வந்தனர். இதற்காக அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இருவரும் அந்த பெண்ணை இவின் ஏக்தி நகரில் உள்ள பொது மருத்துவமனைக்கு மாற்றினர்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு இரட்டையரில் இரண்டாவது குழந்தை பாதுகாப்பாக வெளியே வந்தபோது நான் அவளின் படுக்கைக்கு அருகில் நின்றிருந்தேன். ஆனால், சோதனை முடிந்தபாடில்லை. பிரசவித்த தாய்க்கு இரத்தப் போக்கு அதிகம் இருந்தது. நைஜீரியாவில் பிரசவிக்கும் தாய்மார்களின் இறப்புக்கு காரணமான பிரசவத்திற்கு பிந்தைய அதீத ரத்தப்போக்கு அவருக்கும் இருந்தது. உடனடியாக அவருக்கு பல மருந்துகள் கொடுக்கப்பட்டன. இதையடுத்து இரத்தப் போக்கு கட்டுக்குள் வந்தது. தாயாரின் உடல் காப்பாற்றப்பட்டது. இரட்டைக் குழந்தைகள் சிறியதாக இருந்தாலும் சீராக சுவாசித்துக் கொண்டிருந்தன.



*நவம்பரில் நடந்த ஒரு சமூக உரையாடலில் தாய்வழி ஆரோக்கியம் குறித்து உரையாற்றும்போது, ஒரு சமூக சுகாதார ஊழியர் ஒரு கர்ப்பிணிப் பெண்ணைப் போல நடிக்கிறார்.*

அன்று இரவு நான் படுத்துக் கொண்டபோது, அவளின் வெளிறிய, ஆனால் சிரித்த முகத்தையும், பக்கத்தில் இரட்டை குழந்தைகள் படுத்திருப்பதையும் நினைத்துப் பார்த்தேன். துணிச்சலுடன் செயல்பட்ட சமூக ஆரோக்கிய பணியாளரின் முகமும் என் நினைவுக்கு வந்தது. நிலைமை சிக்கலானபோது அந்த பெண் துணிச்சலுடன் மேல்சிகிச்சைக்கு பரிந்துரைத்ததும், தாயும், இரட்டை குழந்தைகளும் பாதுகாப்பாக இருக்கும் வரை அவர்களைக் கைவிடாத மருத்துவமனையின் குழுவினரையும் நினைத்துப் பார்த்தேன்.

எனக்கு இது, வேலையின் மற்றொரு நாளைவிட அதிகமாக இருந்தது. இது மீண்டும் உறுதிப் படுத்தப்பட்ட அழைப்பாகும்.




ஒவ்வொரு புள்ளிவிவரத்திற்கும் பின்னால் ஒரு கதை இருக்கிறது என்பதை இந்த அனுபவம் எனக்கு நினைவுபடுத்தியது. அதுதான் ஒரு தாய், ஒரு குழந்தை, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்.

ஒலுபுன்மி அஃபோலபி, நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைதல் திட்டத்தின் தொடர்பு அதிகாரி. மேலும் நியூ டான் நைஜீரியா ரோட்டரி இ-சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

படங்கள்: லைட் ஒரியே

©Rotary



*ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் இஜியோமா பேர்ல் ஒகோரோ (இடமிருந்து இரண்டாவது) மற்றும் அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் (வலதுபுறம்) ஆகியோர் பாராட்டு விருதுகளைப் பெறுகிறார்கள்.*

**புள்ளி விவரங்கள் 2025-ம் ஆண்டு ஜூன் 30 நிலவரப்படி:**

# 908

*அவசரகால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைகள் பராமரிப்பில் பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர்கள் .*

# 542

*மகப்பேறு பராமரிப்பில் பல்வேறு வகையான பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர்கள்.*

# 133

*கருத்தடை மாத்திரை, மருந்துகள் விநியோகம் உள்பட மருத்துவ வசதிகள் உள்ளன.*

# 38,783

*வீடுகளுக்கு நேரில் சென்று தாய்-சேய் நல மருத்துவ வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.*

# 408

*குடியிருப்பாளர்களிடம் தாய்-சேய் நலம், மருத்துவ பராமரிப்பு குறித்து சமூக உரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.*

# 51,350

*மக்கள் சமூக உரையாடல்களில் பங்கேற்றனர்.*

# நம்பிக்கைதான் முதலீடுகளை ஈர்க்கிறது

ஜெய்ஸ்ரீ

TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் வருகையை முன்னிட்டு சென்னையில் RID 3233 சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட "மில்லியன் டாலர் வாய்ப்பு" என்னும் தலைப்பிலான சந்திப்புக் கூட்டம் உலகெங்கிலும் தாராளமனப்பான்மை, நம்பிக்கை மற்றும் கொடுப்பதற்கான உத்திகள் எவ்வாறு தொடர்ந்து வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை தெளிவு படுத்தியது. ரோட்டரி தலைவர்கள் ஊக்குவிப்பு மற்றும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர்.

"ரோட்டரி உண்மையில் பலருக்கு வாய்ப்புகளைத் திறக்கிறது" என்று நாக் கூறினார். ரோட்டரி, உறுப்பினர்களுக்கு நட்புறவு, தலைமைத்துவம் மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளை வழங்குகிறது. அறக்கட்டளையின் மிகப் பெரிய பங்கு, சேவை செய்பவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குவதுதான். மாவட்டத்தில் உள்ள பல பெரு நன்கொடையாளர்கள், AKS உறுப்பினர்கள் மற்றும் CSR கூட்டாளர்களின் தாராளத்தன்மைக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார். "இது பணம் பற்றியது அல்ல, பணம் என்ன செய்கிறது என்பது பற்றியது. ஆனால், உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அது பணத்தை பற்றியதுதான். பணம் இல்லாவிட்டால் எதுவும் வேலை செய்யாது" என்று அவர் வெளிப்படையாக கூறினார். அவருக்கு கொடுப்பதற்குப் பின்னால் உள்ள உண்மையான காரணம் நம்பிக்கை. "ரோட்டரி அறக்கட்டளை ஒரு நம்பிக்கையான அமைப்பாகும்," என்றார்.

இந்த நம்பகத்தன்மையை விளக்க அவர், பில் கேட்ஸை மேற்கோள்காட்டினார். அவரது அறக்கட்டளை ரோட்டரியின் போலியோ பங்களிப்புக்கு ஒன்றுக்கு இரண்டு என்ற கணக்கில் நிதிப் பங்களிப்புச் செய்கிறது. "நாங்கள் $50 மில்லியன் நிதி திரட்டினால், கேட்ஸ் அறக்கட்டளை $100 மில்லியன் எங்கள் கணக்கில் சேர்க்கிறது. அதைத்தான் நான் உண்மையிலேயே நம்பிக்கை என்று கூறுகிறேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

பெர்லினில் உள்ள 93 வயதான ஒரு நன்கொடையாளர், மேல்நிலைச் செலவுகளை கேள்விக்குறியாக்கிய நிகழ்வை அவர் சுட்டிக்காட்டினார். அவருக்கு நான் விளக்கம் அளித்தேன். "திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல், அளவிடுதல் இவை மேல்நிலைச் செலவுகள் ஆகாது. அவை தாக்கத்தை உறுதிசெய்பவை" என்று நாக் கூறினார். உள்ளீடு, வெளியீடு, முடிவுகள் மற்றும் தாக்கத்தின் கட்டமைப்பை அறிமுகப்படுத்திய அவர், ரோட்டரி எப்படி திட்டங்கள் மூலம் நீடித்த மாற்றத்தை உருவாக்குகிறது, மதிப் பிடுகிறது என்பதை விளக்கினார்.

நோயாளிகள் கண்ணியத்துடன் வாழ உதவும் டயாலிசிஸ் இயந்திரங்கள் ஆனாலும் சரி அல்லது வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் விவசாயிகளுக்கு ஆதரவான திட்டங்களானாலும் சரி, ரோட்டரி எதையும் நீண்டகால நன்மைகளை கருத்தில் கொண்டே செயல்படுத்தி வருகிறது. "நாங்கள் பணத்தைவிட அதனால் ஏற்படும் தாக்கத்திற்குதான் முக்கியத்துவம் கொடுக்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

போலியோ இல்லாத நாடாக இந்தியா உருவாகி பத்து ஆண்டுகளுக்கு மேலான போதிலும் சமீபத்தில் ஜெர்மனியில் போலியோ வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். "மீண்டும் போலியோ தாக்குதலால் எந்த ஒரு குழந்தையும் முடங்கிப் போய் விடக்கூடாது என்று உறுதியேற்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

"ரோட்டரியின் முதுகெலும்பாகச் செயல்படுவது TRF-தான் ரோட்டரியின் செயல்பாடுகள் வெளி உலகத்திற்கு தெரிவதும் அதன் மூலம் தான்" என்று அறங்காவலர் பரத் பாண்ட்யா கூறினார். சர்வதேச மானிய உதவித்திட்டங்களில் பங்கு பெறும் ரோட்டேரியன்கள்



**இடமிருந்து: DG தேவேந்திரன், PRID A S வெங்கடேஷ், PDG N நந்தகுமார் மற்றும் DGN கணபதி சுரேஷ்.**

*TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக், DG D தேவேந்திரனுடன் சேர்ந்து விளக்கேற்றுகிறார், சுசான் நாக், அர்ச்சனா தேவேந்திரன் மற்றும் கீதாராணி அம்பலவாணன் ஆகியோர் உடன் உள்ளனர்.*






உள்ளன. அதில் எங்கள் சங்கம் நடத்தும் மையமும் ஒன்று என்று அவர் கூறினார்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலான இந்த வசதிகள் மூலம் 2,500-க்கு மேலான மக்கள் பார்வை பெற்றுள்ளனர். அதில் ஒரு அனுபவம் தனித்துவமானது. கடந்த ஆண்டு சங்க உறுப்பினர் மும்பை புறநகர் பகுதியில் உள்ள பார்வையற்றோர் பள்ளிக்குச் சென்றனர். அங்கு படிக்கும் பார்வையற்ற 150 சிறுமிகளுக்கு மருத்துவ ரீதியில் உதவ முடியுமா என்று ஆய்வு செய்தனர். முறையான பரிசோதனைகளுக்குப் பிறகு அவர்களில் கருவிழிப்படலம் பாதிக்கப் பட்ட 12 சிறுமிகளுக்கு சிகிச்சைகள் மூலம் பார்வையை மீட்டெடுக்க முடியும் என்பதை உணர்ந்தனர். இதையடுத்து அவர்களுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. “இன்று அந்த 12 சிறுமிகளும் வழக்கமான பள்ளியில் நம்பிக்கையுடனும் சுதந்திரமாகவும் படிக்கிறார்கள். அதுதான் ரோட்டரியின் சக்தியாகும். உண்மையில் வாழ்க்கை மாற்றமாகும்”

உற்சாகத்துடனும் திருப்தியுடனும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிப்பதாக அவர் கூறினார். மனிதாபிமான மானியங்கள் உறுப்பினர்களை ஈர்க்கவும், தக்க வைக்கவும் மாபெரும் சக்தியாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது சங்கத்தின் கண் பராமரிப்பு மையத்தின் செயல்பாடுகளை அவர் உதாரணமாக பகிர்ந்து கொண்டார். போரிவிலி ரோட்டரி சங்கம் சார்பில் கண் வங்கி மற்றும் கண் பராமரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. கண் வங்கிகள் பல இருந்தாலும் அவை தானமாக அளிக்கப்படும் கண்களை மட்டுமே சேகரிக்கின்றன. ஆனால், ஒரு சில மட்டும் கருவிழி மாற்றுச் சிகிச்சைக்காக கண்களை பதப்படுத்தி பாதுகாத்து வருகின்றன. மும்பையில் இதுபோன்று மூன்று மையங்கள்

TRF-ன் “பெருக்கி விளைவு” (சிறிய உதவி பெரிய நன்மை) பற்றியும் அவர் பேசினார். தமது சங்கத்தின் $1,000 பங்களிப்பு பொருந்தக்கூடிய மானியங்கள் மூலம் திட்டத்தின் மதிப்பு எவ்வாறு $117,000-ஆக வளர்ந்தது என்பதை அவர் நினைவு கூர்ந்தார். RID 3140-ன் ஆளுநராக இருந்த பதவிக்காலத்தை நினைவு கூர்ந்த அவர், மாவட்டம் உலகின் முன்னிலை பங்களிப்பாளராக உருவெடுத்ததையும் அது இந்தியாவின் கொடுக்கும் எண்ணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் கூறினார்.

“இந்தியர்கள் வாங்குபவர்கள் மட்டுமல்ல, கொடுக்கும் திறன் பெற்றவர்கள் என்பதை நாங்கள் நிரூபித்தோம்” என்றார்.

RI இயக்குநர் M முருகானந்தம், புனேயில் சிம்பியோசிஸ் பல்கலைக் கழகத்தில் ரோட்டரி அமைதி மையத்தை திறந்து வைத்ததற்காக அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் அறங்காவலர் பரத் பாண்ட்யா ஆகியோருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொண்டார். ரோட்டரியின் ஏழு விஷயங்களில் கவனம் செலுத்தி வருவதையும் சர்வதேச சவால்களை எதிர்கொண்டு வருவதையும் குறிப்பிட்டு பேசிய அவர், “கல்வி அறிவு இல்லாத இடங்களில் புரிதல் இருப்பதில்லை, சுகாதார வசதி மோசமாக உள்ள இடங்களில் துன்பம் அதிகரிக்கிறது. குழந்தைகள் பாதுகாக்கப்படாத இடங்களில் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. எனவேதான் அங்கெல்லாம் ரோட்டரி காலடி எடுத்து வைக்கிறது”என்றார்.

முன்னதாக, அறங்காவலர் தலைவரை, PRID A S வெங்கடேஷ் அறிமுகப்படுத்தி பேசுகையில், ரோட்டரியுடன் அவருக்கு இருக்கும் நீண்டகால தொடர்பையும், இளைஞர் பரிமாற்றத் திட்டங்கள் மீது அவருக்கு இருக்கும் ஆர்வத்தையும் எடுத்துரைத்தார். ஹோல்கர் நாக், சூசன் இருவரும் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 45-க்கும் மேலான மாணவர்களை வரவேற்று உபசரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

TRF பங்களிப்புகளை “மனித குலத்தின் மீதான முதலீடுகள்” என DG D தேவேந்திரன் குறிப்பிட்டார். “உங்களிடம் அதிகம் இருப்பதற்காக கொடுக்காதீர்கள். மனிதாபிமானத்துடன் கொடுங்கள்” என்று உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார். மாவட்ட ரோட்டரி அறக்கட்டளை தலைவர் L நீலகண்டன் கூறுகையில், தங்களது மாவட்டம் புதிதாக பிரிக்கப்பட்ட இரண்டாவது ஆண்டில், அதாவது கடந்த ஆண்டில் TRF-க்கு $1.03 மில்லியன் பங்களிப்புச் செய்துள்ளதாக கூறினார். இந்த ஆண்டு, வருடாந்திர நிதி, என்டௌவ்மென் நிதி, போலியோ நிதி என மூன்றுக்கும் $1.2 மில்லியன் நிதி பங்களிப்புச் செய்ய இலக்கு வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.■



*வலமிருந்து: அறங்காவலர் தலைவர் கனாக், அறங்காவலர் பரத் பாண்டியா, RI இயக்குநர் M முருகானந்தம் மற்றும் DG தேவேந்திரன்.*

Rotary PEOPLE OF ACTION

# இளம் அறிவியலாளர்களை வளர்க்கும் ரோட்டரி

V முத்துகுமரன்

இளம் அறிவியலாளர்கள் மன்றம் 2025 (YSF) வருங்காலப் புதுமைச் சிந்தனையாளர்களை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழ் நாட்டிலுள்ள பொள்ளாச்சியில் ஒரு நாள் கண்காட்சி ஒன்றை நடத்தியது. இதில், தமிழ் நாடு, கேரளம், மும்பையைச் சேர்ந்த 42 பள்ளிகளிலிருந்து சுமார் 340 மாணவர்கள் திட்டச் செயமுறை விளக்க அரங்குகளை அமைத்திருந்தார்கள். அறிவியல் மாதிரிகள், மாதிரிக் கருவிகள் மற்றும் சிந்தனை யோசனைகளின் வழியாக அவர்கள் தங்கள் படைப்பூக்க அறிவைக் காட்சிப்படுத்துவதற்கான ஒரு தளமாக இது அமைந்தது.

RC பொள்ளாச்சி, RID 3203, குழந்தைகளுக்கு நேரடித் தொழில் நுட்பத்திறன்களை வழங்கும் அறிவு அடிப்படையிலான NGO-ஆன அர்காம் டெக் சொல்யூஷன்ஸ் இணைந்து நடத்திய இந்த YSF கோயம்பத்தூரிலுள்ள கோவை வித்யாஷ்ரம் பள்ளியில் நடைபெற்றது. “கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழ் நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சிகளை நடத்திவரும் அர்காமுடன் நாங்கள் முதன்முறையாக இணைந்து பணியாற்றுகிறோம். ரோட்டரி இங்கு இணைந்திருப்பதால், YSF-ன் அளவும் வீச்சும் மிகவும் உயர்ந்துவிட்டது, இந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளில் நல்ல தாக்கத்தை உண்டாக்குகிறது” என்றார் சங்கத் தலைவர் V சதீஷ் சந்திரன்.

5 முதல் 6 அறிவியலாளர்கள் YSF-க்காக அர்காமால் அழைக்கப் பட்டனர். இந்தச் சிறந்த அறிவியலாளர்கள் பங்கேற்பாளர் களுடன் உரையாடினார்கள்.

YSF திட்டம் எப்படித் தொடங்கியது என்பதை நினைவுகூர்ந்த சங்கச் செயலாளர் ஸ்ரீகாந்த் வெங்கட் “2024ல் நான் அர்காம் கண்காட்சிக்குச் சென்றேன், பள்ளி மாணவர்களிடையில் அறிவியல், தொழில்நுட்பம், உண்மை வாழ்க்கைச் செயல்பாடுகளுக்கான சிக்கல் தீர்த்தல் கருத்துகளில் அவர்கள் கொண்டுவந்த தாக்கத்தைக் கண்டு வியந்தேன். இதையடுத்து, பள்ளிகளுக்கான ஆண்டு அறிவியல் திருவிழாவை நடத்துவதற்காக இவர்களுடன் இணைந்து பணியாற்றுவதுபற்றி எங்கள் சங்கத்தின் வாரியக் கூட்டத்தில் நாங்கள் பேசினோம். அதன்மூலம் நவம்பர் 2025-ல் எங்கள் முதல் இணை YSF பிறந்தது” என்றார்.

“YSR பங்கேற்பாளர்களை வகுப்பறைகள், பாடப்புத்தகக் கற்பித்தலைத் தாண்டிச் சிந்திக்கச் செய்தது, அவர்களுடைய கற்பனைக்குச் சிறகுகளைக் கொடுத்தது. இது செய்யறிவு (AI) அடிப்படையிலான மாதிரிகள், அறிவார்ந்த வீடுகள், டிஜிட்டல் அலுவலகங்கள் போன்ற IoT (பொருட்களின் இணையம்) செயல்பாடுகள் போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்தியது. வளர்ந்துவரும் பிரச்சனைகள், சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அறிவியல் கொண்டுவரக் கூடிய வாய்ப்புகளை அவர்கள் அறிந்தார்கள்” என்று விளக்கினார் வெங்கட்.





“YSF எனக்கு ஒரு சிறந்த கற்றல் பயணத்தைத் திறந்தது. என்னுடைய செய்முறை விளக்க மாதிரியை வழங்கியபிறகு நான் வல்லுனர்களுடன் உரையாடினேன். அறிவியல் சமூகத்திலுள்ள உண்மை உலகச் சூழல்களைக் கற்றுக் கொள்ளும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது” என்கிறார் பொள்ளாச்சி ஆரோக்கியமாதா உயர்நிலைப் பள்ளியின் 9-ம் வகுப்பு மாணவர் முபாஸ்ஸிர். ரோட்டரி மற்றும் அர்காமைப் பாராட்டிய பிரகாஷ் (கேரளத்திலுள்ள சித்தூரிலிருக்கும் விஜயமாதா கான்வெண்ட் உயர்நிலைப் பள்ளியின் 8-ம் வகுப்பு மாணவர் வாணிஸ்ரீயின் தந்தை) “நன்கு கட்டமைக்கப்பட்ட, ஊக்கமளித்த, மாணவர்களைப் படைப்பூக்கத்துடன் சிந்திக்கவும், கேள்விகளைக் கேட்கவும், அறிவியல் மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் வழிகாட்டிய இந்த நிகழ்வின்” ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் இன்னொரு முன்னெடுப்பு, பெரிய மருத்துவ மனைகளின் ஆதரவுடன் பொள்ளாச்சியில் நடத்தப்பட்ட இரண்டு பரிசோதனை முகாம்களில் 130 கிராமப்புறப் பெண்களுக்கு மார்பக, கருப்பை வாய்ப் புற்று நோய்ப் பரிசோதனைகளைச் செய்த ஆற்றும் திட்டம். “கோவை மருத்துவ மையம் மற்றும் கங்கா மருத்துவமனை ஆதரவுடன் நடந்த இரண்டு முகாம்களில், நாங்கள் RC மேட்டுப்பாளையத்தின் மாமோகிராஃபி வண்டியைப் பயன்படுத்தி 150 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்தோம்.

மற்றொரு திட்டத்தின் கீழ், வால்பாறை–ஆழியார் காட்டுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் விட்டுச்சென்ற பிளாஸ்டிக், பிற குப்பைகளை ரோட்டரியன்களும் ரோட்டராக்டர்களும் ஏழு ஞாயிற்றுக்கிழமைகளுக்குத் திரட்டினார்கள். “நாங்கள் காட்டுயிர், சுற்றுச்சூழலுக்குப் பெரிய ஆபத்தாக இருந்தசுமார் 10 டன் குப்பைகளைத் திரட்டினோம்” என்றார் இவர். வாழைக்கொம்பு நாகூர் என்ற பழங்குடியினத்தோர் குக்கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில், ஹைதராபாத் IHL-ன் CSR நிதியின்கீழ் (ரூ.37.5 லட்சம்) ஒரு புதிய வகுப்பறை கட்டப்பட்டுவருகிறது. டிசம்பரில் DG B தனசேகர் இந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். “அதே நாளில் நாங்கள் இந்தப் பள்ளியைச் சேர்ந்த 80 பழங்குடியினக் குழந்தைகளுக்கு ரூ.15,000 மதிப்புள்ள புதிய உடைகள், பள்ளிச் சீருடைகளை வழங்கினோம்” என்றார் சந்திரன்.

இந்தச் சங்கத்தின் இன்னொரு பெரிய சமூக முன்னெடுப்பு, போக்குவரத்துக் கண்காணிப்பாளர்கள், செவிலியர், சிறப்புக் கல்வியாளர்கள், சமூகப் பணியாளர்கள், அரசு ஓட்டுநர்கள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள், பண்பாட்டுக் கலைஞர்கள் போன்ற 25 முன்களப் பணியாளர்களுக்கு நாட்டைக் கட்டமைப்போர் விருதுகளை வழங்கியது. நாட்டுக்குப் புரதம், இளைஞர்களுக்கு வளம் என்ற தலைப்பில் STC கல்லூரியில், RYLA பதாகையின்கீழ் நடத்தப்பட்ட பறவை வளர்ப்புப் பயிலகத்தில், 240 மாணவர்களுக்குக் கால்நடைப் பிரிவு, பண்ணை மேலாண்மை, ஊட்டச்சத்து, கால்நடைச் சேவைகள் மற்றும்






*இடமிருந்து வலமாக:* RID 3203 *அரசு பள்ளி மாணவர்களுக்கு புதிய ஆடைகளை வழங்கும் நிகழ்ச்சியில்* DG B *தனசேகர் (இடமிருந்து 4-வது) மற்றும் அவரது மனைவி அமுதப்ரியா. மேலும் (வலமிருந்து)* RC *பொள்ளாச்சி செயலாளர் ஸ்ரீகாந்த் வெங்கட் மற்றும் தலைவர்* V *சதீஷ் சந்திரன்; பள்ளி மாணவர்கள் தங்கள் அறிவியல் மாதிரிகளைக் காட்சிப்படுத்துகிறார்கள்; வால்பாறை-அலியார் வனப்பகுதியில்* DG *தனசேகர் ஒரு மெகா குப்பைத் தொட்டியில் ஒரு பிளாஸ்டிக் பாட்டிலை வைக்கிறார். மேலும் சங்கத்தலைவர் சந்திரன் (இடது), அமுதப்ரியா மற்றும் செயலாளர் வெங்கட் (வலமிருந்து 2-வது) உள்ளனர்; சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கத்தின் போது போக்குவரத்து விதிகளைப் பின்பற்றும் வாகன ஓட்டிக்கு இனிப்பு வழங்கப்படுகிறது.*



*கரப்பாடி கிராமத்தில் மரம் நடும் நிகழ்ச்சியில் சங்கத்தலைவர் சந்திரன்.*

வழங்கல் சங்கிலித் தளபாடங்களில் உள்ள பணி வாழ்க்கை வாய்ப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பசுமை மரபைக் கொண்டுவரும் நோக்கத்துடன், பொள்ளாச்சி அருகிலுள்ள கரப்பாடி கிராமத்தில் ஒரு பெரிய மரம் நடும் திட்டம் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. “தொலைநோக்கிலான பசுமைப் போர்வை, மண் பாதுகாப்புக்காகச் சுமார் 1,000 பனை விதைகள் நடப்பட்டன. பின்னர் 600 உள்ளூர் இனங்கள் நடப்பட்டன. இவை இந்தக் கிராமத்தில் 600-க்கும் மேற்பட்டோருக்குப் பலனளிக்கும்” என்றார் சந்திரன். இதில் ரோட்டரியன்களுடன் கிராமத்து மக்களும் இளம் தன்னார்வலர்களும் பங்கேற்றதால், “நாங்கள் இந்தக் குக்கிராமத்தைப் பசுமைச் சொர்க்கமாக மாற்றுவோம், ஒரு வலுவான சூழியல் அடித்தடத்தை விட்டுச்செல்வோம்.”

இந்தியச் சாதனைகள் புத்தகத்தில் நுழையும் முயற்சியாக, போதைப் பொருள்களைத் தவறாகப் பயன் படுத்துவது பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குகிற ரோட்டரி தொடர் ஓட்டம் ரோட்டராக்டர்களுடன் இணைந்து நடத்தப்பட்டது. சுமார் 250 பங்கேற்பாளர்கள் பொள்ளாச்சியிலிருந்து ஈரோடு வரையுள்ள 120கிமீ தொலைவை ஓடினார்கள். பொள்ளாச்சி நகராட்சித் தலைவர் N சியாமளாவும் சந்திரனும், RID 3203 போக்குவரத்து விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் சிவானந்த வடிவேல், ரோட்டராக்ட் தலைவர் ராஜலட்சுமி, DRR செல்வவிக்னேஷ் முன்னிலையில் இந்தத் தொடர் ஓட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள். இந்தியப் பல் மருத்துவச் சங்கத்தின் உள்ளூர்ப் பிரிவின் ஆதரவுடன் கரப்பாடி கிராமத்தில் நடத்தப்பட்ட வாய்த் தூய்மை முகாமில் 55 பேர் பரிசோதிக்கப்பட்டார்கள்.

இந்தச் சங்கம் தன் DEI முன்னெடுப்பின்கீழ், பாரதியார் பல்கலைக்கழகத்திலுள்ள நியூபிரிட்ஜ் மையத்துடன் இணைந்து நடத்திய ஒரு திட்டத்தில், 10 சிறப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 205 மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் ஒத்திசைக்கப்பட்ட யோகா நடனத்தை வழங்கினார்கள். இந்த 10 நிமிடச் சிறப்பு நடனம் விர்ச்சூ உலகச்சாதனைகள் புத்தகத்தில் இடம் பெற்றது.

### பன்னாட்டு நல்கைத் திட்டம்

ஒளிப்பொறிப் பணி என்ற பெயரில் இவர்கள் நடத்திவரும் பன்னாட்டு நல்கைத் திட்டம் ($65,000) மேற்குத் தொடர்ச்சிமலையின் அடிவாரத்தில் உள்ள பழங்குடியினத்தோர் வாழ்விடம் மற்றும் காப்புக் காட்டுப் பகுதியான ஆனைமலைக் கல்வித் தொகுதியில் 10 அரசுத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் வெவ்வேறு பாலினத்தோருக்கான 10 கழிப்பறைத் தொகுதிகளைக் கட்டுகிறது. இதன் பன்னாட்டுக் கூட்டாளர், RC பெல்மோன்ட், RID 9423, ஆஸ்திரேலியா.

இது இந்தச் சங்கத்தின் இரண்டாவது GG திட்டமாகும். “எங்கள் முதல் GG திட்டம், 1995-ல் ரூ.2.5 கோடியில் ஒரு மின் சுடுகாடு அமைத்ததாகும்.

ஒரு கௌரவ ரோட்டரியன் உள்பட 89 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தின் வயது 41. இது ஐந்து ரோட்டராக்ட், இரண்டு இன்டராக்ட் சங்கங்களை ஆதரித்துள்ளது. RC பொள்ளாச்சியின் பதிவுத் தலைவர், ஆடைத் தொழில்துறை ஆளுமை, கொடையாளர், குமரகுரு கல்வி நிறுவனங்கள் குழுவின் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயர்.■

# தைபேயில் மட்டும்





*சீன உணவு வகைகள் மற்றும் ஒபரா ஆகியவை பங்கேற் பாளர்களுக்கான சிறப்பு சலுகைகளில் அடங்கும்.*

ரோட்டரி சர்வதேச மாநாட்டில் தொடர்பையும் வேடிக்கையையும் கண்டறிய பல வழிகள் உள்ளன.

ஊக்கமும் உற்சாகமும் தரும் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தவிர, ஜூன் 13 மற்றும் 17-ம் தேதிகளுக்கு இடையில் நீங்கள் தைவானுக்குச் செல்லும்போது உங்களுக்கே உரித்தான சிறப்பு அனுபவங்களைப் பெறுவீர்கள். சிறப்பு அம்சங்களில் ஒபரா, ரோட்டரி இளைஞர் பரிமாற்ற முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கான கூட்டம் மற்றும் தீவு முழுவதும் ஒரு பைக் பயணம் ஆகியவையும் அடங்கும்.

தைபேயில் உள்ள உங்கள் நண்பர்கள் நேஷனல் ஒபரா தியேட்டரிலும், நேஷனல் சிம்பொனி இசைக்குழுவிலும் ரோட்டரி இரவுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். சுவையான சீன உணவு வகைகள் மற்றும் அற்புதமான நிகழ்ச்சிகளுடன் இரவு விருந்தில் கலந்துகொள்ளுங்கள் அல்லது போலியோவை முடிவுக்கு கொண்டுவர நிதி திரட்டுங்கள்: தீவைச் சுற்றி மாநாட்டுக்கு முன்னதாக ஒருவார கால பைக் பயணம் அல்லது ஜூன் 13-ம் தேதி 3 கி.மீ. அல்லது 12 கி.மீ. ஓட்டத்தில் பங்குபெறுங்கள்.

சீனம் அல்லது ஆங்கிலமொழியிலான திட்டமிட்ட சுற்றுப்பயணங்களுடன் இயற்கை காட்சிகளை பார்ப்பது எளிது. அரைநாள் முதல் ஐந்து நாட்கள் வரையிலான பயணத் திட்டங்களுடன் தைவானின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப்பார்க்கலாம். குறுகியகால பயணங்களில் ஏதாவது ஒன்று உங்களின் ஆர்வத்துக்கு பொருந்துவதாக இருக்கலாம். தேசிய முக்கியத்துவமான இடங்கள், இயற்கைச்சூழல் நிறைந்த இடங்கள், ஷாப்பிங் செல்வதற்கான பழமைவாய்ந்த தெருக்கள், பாரம்பரிய கலைகள் என சிலவற்றை குறிப்பிடலாம்.

கட்டணம் செலுத்தி பங்கேற்கும் இரண்டு நிகழ்ச்சிகளில் ரோட்டரி இளைஞர் பரிமாற்றம் குறிப்பிடத்தக்கவை. ஜூன் 12-ம் தேதி நடைபெறும் நிகழ்வில் இளைஞர் பரிமாற்ற தலைவர்களும் முன்னாள் மாணவர்களும் ஒன்றிணைந்து, இந்த திட்டம் எப்படி சர்வதேச அளவில் புரிதலை மேம்படுத்துகிறது என்பதை தங்களின் கதைகள் மூலம் பகிர்ந்துகொள்வார்கள். அடுத்த நாள், அதாவது மாநாட்டுக்கு முன்னதாக ரோட்டரி இளைஞர் பரிமாற்ற தலைவர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களுடனான சந்திப்பு நடைபெறும்.

ரோட்டரி தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ கூறுகையில், உறுப்பினர்கள் மாநாட்டில் ஒன்றுசேரும்போது ஏதோ ஒரு சிறப்பான சம்பவம் நடக்கும். “எதுவும் சாத்தியம் என்கிற உணர்வுதான் அது”.அந்த உணர்வை நீங்கள் தைபேயில் நேரில் அனுபவிக்கலாம்.அரெஸ்ஸோவுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறார்: ஒன்றாக அனுபவிக்க வாருங்கள் என்பதுதான் அது.

மேலும் அறிய *convention.rotary.org*-ல் பதிவு செய்யவும்.


**STATEMENT ABOUT OWNERSHIP**

Statement about ownership and other particulars about *Rotary News* (Tamil) to be published in the first issue of every year after the last day of February

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. Publisher's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. Editor's Name | : | Rasheeda Bhagat |
| Nationality | : | Indian |
| Address | : | No. 25<br>Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers,<br>3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008 sd/-

1st March, 2026 P T Prabhakar



ஸ்கூல் ஆன் வீல்ஸில் ஒரு வகுப்பில் கலந்துகொள்ளும் குழந்தைகள்.




# தெருவோரக் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல்

ரஷீதா பகத்

பல இந்திய நகரங்களில் குழந்தைகள் தெருக்களில் வசிக்கின்றனர், புவனேஸ்வரும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கு ரயில் நிலையம், நடைபாதைகள், கோயில்கள் மற்றும் சந்தைப் பகுதிகளுக்கு அருகில் ஏராளமான குழந்தைகள் தெருக்களில் வாழ்கின்றனர். “இந்தக் குழந்தைகளின் பொதுவான வேலை குப்பை பொறுக்குவது, இதில் ஆறு வயது சிறுவர் சிறுமிகள் கூட மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைச் சேகரிப்பதற்காகக் குப்பைகளைச் சலிப்பார்கள். அவர்கள் தெருவில் தங்கள் பெற்றோருடன் வசித்தால், குறைந்தபட்சம் உணவாவது கிடைக்கும். இல்லையெனில், அவர்களின் அடுத்த வேளை உணவுக்கு உத்தரவாதம் இல்லை. தனிப்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் உறுதி செய்யப்படாதபோது, கல்வி என்பது ஒரு எட்டாக் கனவாக இருக்கிறது. இந்தக் குழந்தைகள் போதைப் பழக்கத்திற்கும் கடுமையான நோய்களுக்கும் ஆளாகும் அதிக ஆபத்தில் உள்ளனர்,” என்று புவனேஸ்வர் ரோட்டரி சங்கத்தின் (RID 3262) முன்னாள் தலைவர் S ஹரிச்சந்தன் கூறுகிறார்.

அத்தகைய குழந்தைகளுக்கு எந்தவொரு முறையான அல்லது வழக்கமான கல்வியும் ஒரு பகற்கனவாகவே நீடிப்பதால், அவர்கள் பல்வேறு வகையான சுரண்டல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக நேரிடுகிறது. அவர்கள் சிறு குழுக்களாக வசிப்பதால், அவர்களுக்காக ஒரு முறையான கல்வித் திட்டத்தைத் தொடங்குவது கடினம், இது அவர்களுக்கு எந்தவிதமான கல்வியும் கிடைக்காத நிலையை உருவாக்குகிறது என்று அவர் கூறுகிறார்.

இந்த மிகப்பெரிய சிக்கலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும், துரதிர்ஷ்டவசமான இந்தக் குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றவும், 2010-ம் ஆண்டில் தொலைநோக்கு கல்வியாளர் இந்தர்ஜித் குரானாவால் ருச்சிகா சமூக சேவை அமைப்பு (RSSO) நிறுவப்பட்டது. மாணவர்களால் அன்புடன் மாமா என்று அழைக்கப்பட்ட அவர், இத்தகைய பின்தங்கிய குழந்தைகளுக்காக ருச்சிகா பள்ளியை அமைத்தார். அவரது மறைவுக்குப் பிறகு, RSSO-வின் தலைமை நிர்வாக அதிகாரியாக டாக்டர் பெனுதர் சேனாபதி இப்பணிகளைத் தொடர்ந்தார். அவரே ஸ்கூல் ஆன் வீல்ஸ் என்ற கருத்தை உருவாக்கினார். இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒடிசாவில் டோட்டோ என்று அழைக்கப்படும் மூன்று பேட்டரியால் இயங்கும் மின்சார ரிக்ஷாக்களை வழங்கிய நிலையில், 2021-ம் ஆண்டில் டாக்டர் சேனாபதி இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ரோட்டரியின் உதவியைக் கோரி

அப்போதைய புவனேஸ்வர் ரோட்டரி சங்கத் தலைவராக இருந்த ஹரிச்சந்தனை அணுகினார்.

சங்கத் தலைவர் இத்திட்டம் குறித்து உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார், அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்ததையடுத்துக் கூட்டணி உறுதி செய்யப்பட்டது. "ருச்சிகா பிரதிநிதிகளுக்கும் எங்களுக்கும் இடையே பலகட்ட ஆலோசனைகளுக்குப் பிறகு, நாங்கள் ஒரு செயல்பாட்டு பட்ஜெட்டை அமைத்தோம், மேலும் இந்த தெருவோரக் குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய சேவைகளின் நிதித் தேவைகள் குறித்து விவாதித்தோம். எங்களின் முன்னாள் தலைவரும் சமூக சேவை இயக்குநருமான மறைந்த டாக்டர் S K ராய் இதில் முக்கியப் பங்காற்றினார். சங்கம் ரூ.1.5 லட்சம் செலவிடத் தீர்மானித்தது மற்றும் ஆகஸ்ட் 2021-ல் ருச்சிகா மற்றும் ரோட்டரி இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது, இன்னர் வீல் உறுப்பினர்களும் இதில் இணைந்தனர்," என்று அவர் கூறுகிறார்.

ராய் அவர்களின் தலைமையில் முதல் ரோட்டரி ஸ்கூல் ஆன் வீல்ஸ் நடைமுறைக்கு வந்தது மற்றும் புவனேஸ்வர் இன்னர் வீல் சங்கம் ஆண்டு முழுவதும் உணவு ரேஷன் வழங்கக் கூட்டாளராகக் கைகோர்த்தது. இத்திட்டத்தை 2021-ம் ஆண்டு ஆசிரியர் தினத்தன்று அப்போதைய RID 3262 DG சாந்தனு குமார் பானி தொடங்கி வைத்தார்.

சங்கம் ஒரு மையம் மற்றும் ஒரு டோட்டோவுடன் தொடங்கியது – இன்று இரண்டு மையங்கள் மற்றும் இரண்டு டோட்டோக்கள் மூலம் சுமார் 60 மாணவர்களுக்குச் சேவை செய்கிறது – மேலும் இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.5 லட்சத்தை ஒதுக்கித் தனது பங்களிப்பைத் தொடர்கிறது. கல்வியுடன் சேர்த்து, குழந்தைகளின் அடிப்படை சுகாதாரத் தேவைகளும் கவனிக்கப்படுகின்றன.

இத்திட்டம் செயல்படும் விதத்தை விளக்கிய ஹரிச்சந்தன், தெருக்களில் அல்லது தெரு போன்ற சூழ்நிலைகளில் வாழும் குழந்தைகளுக்குத் தரமான அடிப்படைக் கல்வியை வழங்குவதற்கான ஒரு ஒருங்கிணைந்த




*நான்காவது இடமிருந்து: PDG-க்கள் யக்யான்சிஸ் மொஹபத்ரா மற்றும் D N பதி, மற்றும் மாணவர்களுடன் கிளப்பின் முன்னாள் தலைவர் ஹரிசந்தன் (வலது புறம்).*




*இ-ரிக்ஷாவில் இயங்கும் ரோட்டரி ஸ்கூல் ஆன் வீல்ஸ் முன் குழந்தைகள்.*



**ஓட்டுநர் மற்றும் ஆசிரியரான பிஜய், குழந்தைகளுக்கு பாடம் நடத்துகிறார்.**










அணுகுமுறைதான் இந்த ஸ்கூல் ஆன் வீல்ஸ் என்று கூறுகிறார். “எங்களிடம் இரண்டு மையங்கள் உள்ளன, ஆனால் பழைய விதான் சௌதாவுக்குப் பின்னால் உள்ள தெரு மற்றும் சிசு பவன் சதுக்கத் தெரு உட்பட புவனேஸ்வர் மாநகரப் பகுதியின் பல்வேறு மூலைகளில், குழந்தைகள் எங்கெல்லாம் தெருக்களில் வசிக்கிறார்களோ அங்கெல்லாம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அடிப்படையில், இது இந்தக் குழந்தைகளுக்கான வீட்டு வாசலிலேயே கல்வி வழங்கும் திட்டமாகும். இதில் பள்ளி போன்று அலங்கரிக்கப்பட்ட, கற்றல் மற்றும் விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள், சில உணவுகள் மற்றும் முதலுதவி பெட்டி ஆகியவற்றைக் கொண்ட பேட்டரியால் இயங்கும் மின்-ரிக்ஷா (டோட்டோ) குழந்தைகளிடம் செல்கிறது. டோட்டோவின் இரண்டு பக்கங்களும் கரும்பலகையாகப் பயன்படுத்தப்படுகின்றன, மேலும் டோட்டோவைச் சுற்றி வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் காட்சிப் படுத்தப்படுகின்றன. பிஜய் என்பவர் டோட்டோவின் ஓட்டுநர் மற்றும் ஆசிரியராகச் சங்கத்தால் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் குழந்தைகள் இருக்கும் இடத்திற்கு டோட்டோவை ஓட்டிச் சென்று, அவர்களுக்கு ஒரு மணி நேரம் பாடம் கற்பிக்கிறார், பின்னர் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்கும் மற்றொரு இடத்திற்குச் செல்கிறார்.



குழந்தைகளுக்குப் பள்ளியில் இருக்கும் உணர்வை அளிப்பதற்காக, ரோட்டேரியர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் ரோட்டரி லோகோவுடன் கூடிய இரண்டு டி-ஷர்ட்கள், காலணிகள், பொம்மைகள், புத்தகங்கள், மருந்துகள் போன்றவற்றை வழங்கியுள்ளனர். ஒரு சங்க உறுப்பினர் சுமார் 50 பொம்மைகளை வழங்கியதன் மூலம், ஒரு பொம்மை வங்கி தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் விளையாடுவதற்குப் பல்வேறு வகையான பொம்மைகள் வழங்கப்பட்டபோது குழந்தைகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்த பள்ளி திட்டம் கற்றலுக்கு அப்பாற்பட்டு குழந்தைகளிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஹரிச்சந்தன் கூறுகிறார். “நாங்கள் அவர்களைப் புவனேஸ்வரில் உள்ள பிராந்திய இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவர்கள் மிகவும் ஒழுக்கமாகவும் நற்பண்புகளுடனும் இருப்பதைக் கண்டு நாங்கள் வியப்படைந்தோம். அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட போது, அழிந்துபோன விலங்குகள், பறவைகள், பெரிய மீன்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதி களிலிருந்து சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையான கற்களைப் பார்த்து அவர்கள் மிகவும் ரசித்தனர். எதிர்காலத்திலும் இது போன்ற சுற்றுலாக்களை ஒருங்கிணைக்க சங்கம் நம்பிக்கையுடன் இருக்கிறது.”

மற்ற குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் பிறந்தநாளைக் கொண்டாட ஆவலுடன் காத்திருக்கும் வேளையில், “தெருக்களில் வாழும் பல குழந்தைகளுக்குத் தாங்கள் பிறந்த தேதி கூடத் தெரியாது. முன்னாள் தலைவர் ஞான ரஞ்சன் ரத்திற்கு நன்றி, மகிழ்ச்சியையும் புன்னகையையும் பரப்பவும் குழந்தைகளுக்குக் கேக் விநியோகிக்கவும், ஒவ்வொரு மாதத்தின் கடைசித் தேதியன்றும் மிகச்சிறிய குழந்தையைக் கொண்டு கேக் வெட்டி அனைத்துக் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடும் முறை தொடங்கப் பட்டது. பின்னர் ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாளன்றும், குழந்தைகள் சுத்தமான சட்டைகள்

ஒரு நாளில் நான்கு இடங்களுக்கு டோட்டோ செல்கிறது. பிஜய் கூறுகையில்: “சில கருத்துக்களையோ அல்லது பாடங்களையோ கற்பிக்கும்போது குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவும் தக்கவைக்கவும் நான் அடிக்கடி பாடுவதையும் ஆடுவதையும் நாடுகிறேன். குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவும் சில பாடங்களைக் கற்பிக்கவும் பொம்மைகளும் பயன்படுத்தப் படுகின்றன.”

எண்கள் மற்றும் சொற்களைக் கற்பிப்பதைத் தவிர, அவர் குழந்தைகளுக்குக் கல்வியின் நன்மைகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார், முறையான அரசுப் பள்ளிக்குச் செல்ல அவர்களை ஊக்குவிக்கிறார், தேவைப்பட்டால் முதலுதவி வழங்குகிறார் மற்றும் குழந்தைகள் பசியுடன் இருந்தால் உணவு வழங்குகிறார். ஓவியம் மற்றும் கைவினைப் பணிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. பாடல்கள், விளையாட்டுகள் மற்றும் பொம்மலாட்டம் ஆகியவை ஒவ்வொரு நாள் கற்றல் அமர்விலும் ஒருங்கிணைந்த பகுதியாகும், ஏனெனில் இது குழந்தைகளைக் கற்றலில் ஈர்க்கிறது. கற்றல் பணியின் முடிவில், குழந்தைகளை ஈடுபாட்டுடன் வைத்திருக்க ஆசிரியர் சில வீட்டுப் பாடங்களைக் கொடுக்கிறார்.

சில குழந்தைகள் முறையான பள்ளிக்குச் செல்லத் தயாராக இருப்பதை ஆசிரியர் கண்டறிந்தால், அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. முறையான பள்ளிகளில் சேரும் குழந்தைகளுக்குப் பள்ளி நேரத்திற்குப் பிறகு ஆசிரியர் தொடர்ந்து கல்வி ஆதரவை வழங்குகிறார்.

தற்போது பல குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் பயின்று வருவதாகவும், பலர் உயர்நிலைப் பள்ளித் தேர்வுகளில் கூட தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் ஹரிச்சந்தன் உறுதிப்படுத்துகிறார். ஆனால் இந்த தெருவோரக் குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்ப்பது எளிதான காரியமாக இருக்கவில்லை. “நாங்கள் அக்கம் பக்கத்திலுள்ள அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றி, இந்த தெருவோரக் குழந்தைகளைத் தங்கள் பள்ளிகளில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பள்ளிச் சூழலை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குமாறு அவர்களை வற்புறுத்த வேண்டியிருந்தது. இந்தப் பள்ளி மாணவர்களிடையே இந்தக் குழந்தைகளைத் தங்கள் நண்பர்களாக ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காகச் சில அமர்வுகளையும் நடத்த வேண்டியிருந்தது,” என்று அவர் மேலும் கூறுகிறார்.

கற்றல் மையங்களில் கூட,

அணிந்து, தலைமுடியை நீட்டாக வாரி, நகங்களை வெட்டி, முகத்தைக் கழுவிச் சுத்தமாக மையத்திற்கு வருவதைக் கண்டோம்!” என்று அவர் நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

இன்றுவரை சங்கம் ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாளன்றும் குழந்தைகளின் பிறந்தநாளைத் தவறாமல் கொண்டாடி வருகிறது, மேலும் சிறுவர்கள் அன்று கேக் சாப்பிடுவதற்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள்!

இந்தக் குழந்தைகளின் குடும்பங் களுக்காகச் சங்க உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட இதர நலத்திட்டங்களில் குளிர்காலத்தில் குடும்பங்களுக்குப் போர்வை வழங்குதல் மற்றும் ரோட்டேரியர்களால் குழந்தைகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் சமைத்த உணவு வழங்கப்படும் அன்னபூர்ணா தினம் ஆகியவை அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் குறைந்த பட்சம் சில நூறு குழந்தைகள் பயனடைந்துள்ளனர். அடிப்படை கல்வியைப் பெறுவதைத் தவிர, அவர்கள் அடிப்படை சுகாதாரம், மருத்துவம் மற்றும் தேவைப்படும் போது முதலுதவி சேவைகளின் பலன்களையும் பெற்றுள்ளனர். ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க நல்ல சுகாதாரம் மற்றும் துப்புரவு நடைமுறைகளைப் பற்றியும் அவர்கள் கற்றுக்கொண்டனர், மேலும் அவர்களின் உரிமைகள் மற்றும் தேவைப்படும்போது பல்வேறு அரசு அமைப்புகளிடமிருந்து அவர்கள் பெறக்கூடிய உதவிகள் குறித்தும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.



குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உணவு வழங்கப்படுகிறது.




2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், 132 குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் புத்தகங்களும் சீருடைகளும் வழங்கப்பட்டன.

IPDG யக்யான்சிஸ் மொஹாபத்ரா கூறுகையில், “இந்த முயற்சியின் மூலம் அடிப்படை கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன், ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் துப்புரவு அறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மகிழ்ச்சியான மற்றும் ஆக்கப்பூர்வமான கற்றல் சூழலுடன் தெருக்களில் வாழும் பல குழந்தைகளைச் சென்றடைவதே சங்கத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகக் கிடைக்கும் பல்வேறு அரசு சேவைகளுடன் இந்த பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளை நாங்கள் இணைக்கிறோம்.”

முன்னாள் தலைவர் ஸ்ரீசந்தன் மிஸ்ரா இத்திட்டத்தின் பரவலான தாக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறார், இவர்களது முயற்சிக்குப் பிறகு, அஸிம் பிரேம்ஜி அறக்கட்டளை மற்றும் ஒரு பெல்ஜிய அமைப்பால் இதுபோன்ற மேலும் இரண்டு ஸ்கூல் ஆன் வீல்ஸ் ஆதரிக்கப்பட்டுள்ளன. பல்வேறு ஆளுநர்களின் ஆதரவுடன் சங்கத்தால் இத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடிகிறது. இவர்களில் முன்னாள் ஆளுநர்கள் சாந்தனு பானி, பிரபு சுபுதி, ஜெயஸ்ரீ மொஹந்தி மற்றும் யக்யான்சிஸ் மொஹாபத்ரா ஆகியோர் அடங்குவர். ■

# குறைபிரசவக் குழந்தைகளின்
# கண் பராமரிப்புக்காக முக்கிய உபகரணங்களை வழங்கும் ஜல்னா ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்

ஜல்னா மிட் டவுன் ரோட்டரி சங்கம் (RID 3132), பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் (NICU) மகாராஷ்டிராவின் முதல் அதிநவீன ரெட் கேம் நோயறிதல் மையத்தை அமைத்துள்ளது. குறைபிரசவத்தில் பிறந்த குழந்தைகள் பார்வையை இழக்கும் அபாயத்திலிருந்து பாதுகாக்கவும், அவர்கள் இயல்பான வளர்ச்சியைப் பெறவும் தேவைப்படும் சிறப்பான சிகிச்சையில் இது முக்கிய சேவையாகும். பச்சிளம் குழந்தைகள் குறைபிரசவ ரெட்டினோபதி காரணமாகப் பார்வையை இழக்காமல் இருப்பதை உறுதி செய்வதே இந்தக் கருவியின் நோக்கமாகும்.

மஹிகோ ஆராய்ச்சி அறக்கட்டளையால் நடத்தப்படும் கண் சிகிச்சை மையமான ஸ்ரீ கணபதி நேத்ராலயாவில் இந்த மையம் நிறுவப்பட்டுள்ளது. சுமார் $49,500 உலகளாவிய மானியத்துடனும், ஸ்ரீ கணபதி நேத்ராலயா வழங்கிய சுமார் ரூ.1.5 கோடி பங்களிப்புடனும் இது சாத்தியமானது.

இந்தத் திட்டத்தின் தொடக்கம் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து விளக்கினார் சங்கத்தின் முன்னாள் தலைவர் அனுப் கர்வா (மானியக் குழுத் தலைவர் மற்றும் RID 3132 மானிய துணைக் குழுத் தலைவர், RY24–25). மருத்துவமனையின் மருத்துவர்களுடனான உரையாடலில், இந்த நேத்ராலயா மருத்துவத் துறையில் ரெட்டினோபதி ஆஃப் ப்ரீமெச்சூரிட்டி (ROP) என்று அழைக்கப்படும் இந்நிலைக்காக தினமும் குறைந்தது 3–4 பச்சிளம் குழந்தைகளைப் பரிசோதிப்பதாக ரோட்டேரியர்கள் கண்டறிந்தனர். அதிர்ச்சியளிக்கும் தகவல் என்னவென்றால்: இந்தக் குழந்தைகளில் பலர் ஏற்கனவே குணப்படுத்த முடியாத மிகவும் மோசமான நிலையில் (5-ம் நிலை ROP) உள்ளனர். இது பனிப்பாறையின் நுனி மட்டுமே; பல ஆராய்ச்சி வெளியீடுகள் ROP பாதிப்பு ஆபத்தான அளவில் இருப்பதாகத் தெரிவிக்கின்றன. குறைபிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இந்நிலை




*ஸ்ரீ கணபதி நேத்ராலயாவில் RC ஜல்னா மிட்டவுன் நிறுவியுள்ள ரெட்கேம் கருவியின் உதவியுடன் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைக்கு விழித்திரை பாதிப்பு உள்ளதா என பரிசோதிக்கப்படுகிறது.*

ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் இந்நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கான நிபுணத்துவம் இல்லை. இதற்குத் திறன்மிக்க அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் உயர்தர உபகரணங்கள் மற்றும் வசதிகள் தேவை என்றார்.

ஜல்னா மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புறப் பகுதிகளில், மேம்பட்ட விழித்திரை இமேஜிங் வசதிகள் மற்றும் பயிற்சி பெற்ற நிபுணர்களுக்கான பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இதனால் குழந்தைகள் வெகுதொலைவில் உள்ள நகரங்களுக்குப் பரிந்துரைக்கப் படுகின்றனர், இதில் பொன்னான நேரம் வீணாகிறது.




குறைப்பிரசவ ரெட்டினோபதி (ROP) என்பது 1.5 கிலோவிற்கும் குறைவான எடை அல்லது 32 வாரங்களுக்கு முன்பே பிறக்கும் குழந்தைகளின் விழித்திரை இரத்த நாளங்களைப் பாதித்து பார்வையைப் பறிக்கக்கூடிய ஒரு நிலையாகும். கடந்த இரு தசாப்தங்களில் குறைப் பிரசவக் குழந்தைகளின் உயிர் பிழைப்பு விகிதம் உலகளவில் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 3.5 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் இத்தகைய சூழலில் பிறக்கின்றனர். இந்தியா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் பார்வையிழப்பு மற்றும் பார்வைக் குறைபாடு ஏற்படுத்தும் பொருளாதாரச் சுமை மிகப்பெரியது.

இந்தக் காரணிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, “ஒரு ரெட் கேம் நோயறிதல் மையத்தை நிறுவுவதற்கான எங்கள் கனவு வடிவம் பெற்றது” என்று கர்வா கூறுகிறார். இத்திட்டத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்தியவர்களுக்கு, “இது ஒரு கருவியை வாங்குவதற்கும் மேலானது... இந்தப் பிராந்தியத்தின் குறைபிரசவக் குழந்தைகளின் பெற்றோருக்கு நம்பிக்கையை அளிக்கும், உயிர்காக்கும் மற்றும் நிலையான ஒரு அமைப்பை உருவாக்குவதாகும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பயணம் ரோட்டேரியர்கள், மருத்துவர்கள், குழந்தைகளுக்கான மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளின் குடும்பத்தினருக்கு இடையிலான உரையாடல்களுடன் தொடங்கியது. தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு மேற்கொண்ட வருகைகள், அந்த இடங்களை விட்டு வெளியேறிய பிறகும் மனதில் நிலைத்திருக்கும் கதைகளை வெளிப்படுத்தின. “மிகவும் கடினமாக விஷயம் என்னவென்றால், பல குழந்தைகள் ஆபத்தான நாட்களிலிருந்து தப்பிப் பிழைக்கிறார்கள், ஆனால் இறுதியில் இருண்ட எதிர்காலத்தை எதிர்கொள்கிறார்கள்” என்றார்.

முதல் படியாக உண்மையான தேவையைப் புரிந்துகொள்வதும் கடுமையான சமூக மதிப்பீடும் இருந்தது. இது “பல மருத்துவமனை வருகைகள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களுடனான விவாதங்கள் மூலம் செய்யப்பட்டது. இவை ஒரு முக்கியமான இடைவெளியை வெளிப்படுத்தின... ROP நோயறி தலுக்கான சிறந்த தரமாகக் கருதப்படும் ரெட் கேம் தொழில்நுட்பம் இல்லாதது தான் அது. தரவுகளைச் சேகரித்து, நோயாளிகளின் வரலாற்றை ஆவணப்படுத்தி, பிரச்சினையின் தீவிரத்தை மதிப்பிட்ட பிறகு, “தேவை உண்மையானது, அவசரமானது மற்றும் மறுக்க முடியாதது என்று நாங்கள் உறுதியாக நம்பினோம்.”

தேவையை உணர்ந்த பிறகு, முக்கியக் குழு உறுப்பினர்கள் அமெரிக்காவில் உள்ள ரோட்டரி சங்கங்களை அணுகினர். விளக்கக் காட்சிகள், கதைகள் மற்றும் தரவு ஆதரவுடனான தேவை மதிப்பீடு மூலம், திட்டத்தின் முக்கியத்துவம் RID 5330-ன் RC கொரோனா மற்றும் RID 5870-ன் RC ஆஸ்டின் ஆகியவற்றுடன் பகிரப்பட்டது. கர்வா நிதியுதவி உறுதிமொழிகளைப் பெற்று கூட்டாண்மையை உறுதிப்படுத்தினார். $49,500 மதிப்புள்ள உலகளாவிய மானியத்திற்கு ரோட்டரி அறக்கட்டளை ஒப்புதல் அளித்தது. மேலும் கணபதி நேத்ராலயா ரூ.1.5 கோடி பங்களித்தது.

அதிநவீன இமேஜிங் தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த மையம் 2025-ல் மாவட்ட ஆளுநர் சுதிர் லட்டூரே முன்னிலையில் திறக்கப்பட்டது. மஹிகோ குழுமத்தின் தலைவர் ராஜேந்திர பர்வாலே, IPDG சுரேஷ் சாபூ, PDG சுவாதி ஹெர்கல், சங்கத்தலைவர் அன்கித் அகர்வால், ஸ்ரீ கணபதி நேத்ராலயாவின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ருஷிகேஷ் நைகாவோங்கர் மற்றும் அனுப் கர்வா ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு வழங்கப்படும் சேவை இலவசமானது, “நிதிக்கட்டுப்பாடுகள் காரணமாக எந்தக் குழந்தைகளுக்கும் சிகிச்சை

மறுக்கப்படக்கூடாது” என்று அகர்வால் கூறினார்.

உபகரணங்கள் வாங்கப்பட்டு மையம் திறக்கப்பட்டவுடன், மகாராஷ்டிராவின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளைப் பரிசோதிக்கும் பணி தொடங்கியது. திறமையான மற்றும் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களால் ஃபண்டஸ் கேமராவைப் பயன்படுத்தி இப்பரிசோதனை நடத்தப்படுகிறது. இந்தக் கேமரா, ஏற்கனவே கூட்டாளர் மருத்துவமனைகளில் உள்ள டெலிமெடிசின் வசதிகளுடன் தொடர்புடைய குளிரூட்டப்பட்ட நடமாடும் வேனில் கொண்டு செல்லப்படுகிறது.



இந்தச் சிறப்புக் கேமரா மூலம் எடுக்கப்பட்ட படங்கள், கிளவுட் சர்வர்கள் வழியாக ஜல்னாவில் உள்ள கூட்டாளர் மருத்துவமனையில் இருக்கும் ROP நோயறிதல் மற்றும் சிகிச்சையில் பயிற்சி பெற்ற விழித்திரை நிபுணர்களுடன் பகிரப்படும்.

தீபாவளி முதல், இந்த கையடக்கக் கருவி மூலம் ஜல்னாவுக்கு அருகிலுள்ள மூன்று நகரங்களில் குறைபிரசவத்தில் பிறந்த 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இதில் நிலை 1 மற்றும் 2-ல் இருந்த எட்டு பேருக்கு, சரியான நேரத்தில் சொட்டு மருந்து மற்றும் போதிய கண் பராமரிப்பு மூலம் விழித்திரை நோய் தடுக்கப்பட்டுள்ளது. இந்த பாதிப்புகள் சரியான நேரத்தில் கண்டறியப்படாவிட்டால், அறுவை சிகிச்சைக்கு அல்லது பார்வை இழப்புக்குக் கூட வழிவகுத்திருக்கும் என்று கர்வா கூறினார்.

நோய் பாதிப்பு கண்டறியப்பட்டு சிறப்பு மருத்துவ மேலாண்மை தேவைப்படும் குழந்தைகளுக்கு, அவர்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளிலேயே சிகிச்சை அளிக்கப்படும். அறுவை சிகிச்சை தேவைப்படும் பச்சிளம் குழந்தைகள் ஜல்னாவில் உள்ள ஸ்ரீ கணபதி நேத்ராலயாவுக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள். அறுவை சிகிச்சைகளுக்கான செலவு தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஈடுசெய்யப்படும் என்று சங்கத்தலைவர் அனில் அகர்வால் கூறினார்.

அடுத்ததாக மருத்துவர்களுக்கான பயிலரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் குழந்தைகள் நல மருத்துவர்கள் மற்றும் கண் மருத்துவர்களுக்கு இந்நிலையைக் கண்டறிவது குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் ஆரம்பக்கட்ட கண்டறிதல் மற்றும் விரைவான பரிந்துரைகள் சாத்தியமாகும். “மகாராஷ்டிராவின் 10-க்கும் மேற்பட்ட நகரங்களைச் சேர்ந்த NICU மருத்துவர்களுக்காக ஒரு பயிலரங்கை நாங்கள் நடத்தவுள்ளோம். உலகளாவிய பரிசோதனை கவரேஜை உறுதி செய்வதற்காக கிராமப்புற மகாராஷ்டிராவின் மாவட்டங்களில் உள்ள அதிகமான NICU-க்களுடன் இணைப்பை ஏற்படுத்தவுள்ளோம். மேலும் சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் நிர்வாகத்திற்காக மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளுக்கு நடமாடும் யூனிட்டை அனுப்பவுள்ளோம்,” என்று கர்வா கூறினார். கடந்த ஆண்டு DGSC-ஆக இருந்த காலத்தில், மாவட்ட மானியங்கள் உட்பட $7,00,000 மதிப்பிலான 15 உலகளாவிய மானியத் திட்டங்களை அவர் செய்துள்ளார்.

மகாராஷ்டிரா முழுவதும் அதிக முகாம்கள் நடத்தப்படும். தன்னார்வத் தொண்டு செய்ய ஆர்வமுள்ளவர்கள் இத்திட்டத்தில் பங்களிக்க நேத்ராலயா மருத்துவர்களுடன் பயணம் செய்யலாம்.

மகாராஷ்டிரா முழுவதும் உள்ள NICU மற்றும் ரோட்டரி கண் சிகிச்சை மருத்துவமனைகள் *rcjmidtown@gmail.com* மற்றும் *anupkarwa@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்புகொண்டு இணைந்து செயல்படலாம்.■

## ISRO-ல் RH-200 ஏவப்படுவதைப் பார்த்த மாணவர்கள்

அரசுப்பள்ளி மாணவர்கள் 50 பேரை ISROவில் RH-200 ஆய்வு ஏவுகணை ஏவப்படுவதைப் பார்க்க அழைத்துச்சென்றது திருப்பூர் மெட்டல் டவுன் ரோட்டரி சங்கம், RID 3203. இவர்களுடைய பயணம், மற்ற செலவுகளுக்கெனச் சங்க உறுப்பினர் பென் VG ஆனந்த்ராம் ரூ.1 லட்சம் பங்களித்தார்.



திருவனந்தபுரத்தில் உள்ள இஸ்ரோவில் மாணவர்கள்.

## இன்டராக்டர்கள் நடத்திய செயற்கைக் கை, கால் முகாம்

RC ராய்ப்பூர் க்வீன்ஸ், RID 3261, ஆதரிக்கும் ராய்ப்பூர் பினாக்கிள் இன்டராக்ட் சங்கம் ராய்ப்பூரில் நான்கு நாள் செயற்கைக் கை, கால் நன்கொடை முகாமை நடத்தியது. குஜராத்தைச் சேர்ந்த வல்லுனர் குழு ஒன்று செயற்கைக் கை, கால்களைப் பொருத்தியது. இன்டராக்டர்கள் பதிவு, தளவாடங்கள், மறுவாழ்வு ஆதரவைக் கையாண்டார்கள்.



*ஒரு பயனாளிக்கு செயற்கை கால் பொருத்தப்படுகிறது.*

## சிறுவர்களுக்காக ஒரு பூங்கா

கொல்கத்தா அருகிலுள்ள சோனார்பூரில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு குழந்தைகள் பூங்காவைச் சமூகத்துக்குப் பரிசளித்தது RC சோனார்பூர், RID 3291. சவுத் கொல்கத்தா விஷனுடன் (முன்னாள் தலைவர்கள் மன்றம்) இணைந்து குழந்தைகள் நாளைக் கொண்டாடும்வகையில் இந்தப் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பூங்கா, இந்தச் சங்கத்தின் RCC ஆஷ்ரம் ஆனந்தம் ஆதரவுடன் கட்டப்பட்டுள்ளது.



*பூங்கா திறப்பு விழாவில் குழந்தைகளுடன் சங்க உறுப்பினர்கள்.*

## அறிவார்ந்த வகுப்பறைகளை உருவாக்குதல்

RC-கள் மங்களூர் நார்த் (RID 3181), பெங்களூர் விஜயநகர் (RID 3191) இணைந்து, பிக்செல் சாஃப்டெக்ஸ் CEO Rtn PV ராய் ஆதரவிலான ரூ.5.8 லட்சம் மதிப்புள்ள CSR திட்டத்தின்கீழ், மங்களூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்வி நிறுவனங்களில் ஐந்து அறிவார்ந்த பலகைகளை நிறுவினார்கள். இந்த முன்னெடுப்பு டிஜிட்டல் வகுப்பறை உள்கட்டமைப்பை வலுப்படுத்தும், ஊடாடிக் கற்றலை மேம்படுத்தும்.



*டிஜிட்டல் வகுப்பறையை PDG கிருஷ்ணா ஷெட்டி (இடது) திறந்து வைக்கிறார்.*

Rotary PEOPLE OF ACTION

# வண்ணங்களிலிருந்து வகுப்பறை வரை

கிரண் ஜெஹரா

கருஞ்சிவப்பு ஆழம், தங்கக் கனவுகள் (Crimson Depth, Golden Dreams) என்ற ஓவியத்தில் விற்பனையால், பெங்களூரில் ஏழை மாணவர்களுக்காக நடத்தப்படும் ரோட்டரி பெங்களூர் வித்யாலயாப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்கு நிதி கிடைத்துள்ளது. RC பெங்களூர் (RCB), RID 3192, நடத்திய கலை அடிப்படையிலான நிதி திரட்டல் முன்னெடுப்பான கலா ஃபார் வித்யாவின் வழியாக, இந்தக் கலைப்படைப்பிலிருந்து கிடைத்த தொகையில் 30% இந்தப் பள்ளிக்கு வழங்கப்பட்டது.

பெங்களூரைச் சேர்ந்த கலைஞர் குஷ்பூ திப்ரேவால், அரசாங்கத்தின் டாக்டர் BR அம்பேத்கர் பன்னாட்டுக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் (SC மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதுநிலை, முனைவர் படிப்புகளைப் படிப்பதற்கெனக் கர்நாடக அரசம் முழு நிதியுதவி வழங்கி நடத்தும் முன்னெடுப்பு) கிராமப்புறக் கர்நாடகத்தைப் பார்வையிட்டபின் இந்த ஓவியத்தை வரைந்தார். இந்தப் பயணங்களின்போது அவர் நன்கு படிக்கிற, ஆனால், உயர்நிலைக் கல்வி வழிகளைப்பற்றி அவ்வளவாகத் தெரியாத SC/ST மாணவர்களுடன் பேசினார். “பல மாணவர்கள் பெங்களூரில் படிப்பதைப்பற்றிக்கூட நினைத்திருக்கவில்லை. வெளிநாட்டுப் படிப்பெல்லாம் அவர்களுடைய சிந்தனையிலேயே இல்லை. இந்தச் சந்திப்புகள் இந்த ஆக்கத்துக்கான கருப்பொருளை, நோக்கத்தை வடிவமைத்தன” என்றார் இவர். இவருடைய கலைப்படைப்பு ரூ 41,000க்கு விற்பனையானது.



*ஓவியர் குஷ்பூ திப்ரேவால் தனது ஓவியத்துடன்.*

“கலா ஃபார் வித்யா, கலைப் பொருட்களின் விற்பனையைக் கொண்டு கல்விக்கு நிதி திரட்டுகிறது. இந்த முன்னெடுப்பு வழக்கமான, நன்கொடை அடிப்படையிலான கோரிக்கைகளை நம்பியிருக்காமல், கலைப் பொருட்களின் விற்பனையில் ஒரு நிலையான பகுதியைக் கல்விக்கு நிதியளிக்கச் செய்தல், விற்பனைத் தொகையின் பெரும்பகுதியைக் கலைஞர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றைப் பின்பற்றுகிறது.

RCB தன் 18வது ஆண்டுக் கலை நிதி திரட்டல் கண்காட்சியான கலா ஃபார் வித்யாவின் 2025-ம் பதிப்பைச் சமீபத்தில் பெங்களூர் பன்னாட்டு மையத்தில் நடத்தியது. இந்தக் கண்காட்சி நாகதேவனஹள்ளியில் 540-க்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளின் கல்வியை ஆதரிக்கும் ரோட்டரி பெங்களூர் வித்யாலயாவுக்கு நிதி திரட்டியது.

இந்தக் கண்காட்சியை ரோட்டரியன்கள் சீதாலட்சுமி சின்னப்பா, மீரா சங்கர், சாந்தி பலிகா தொடங்கிவைத்தார்கள். இந்த ஆண்டுப் பதிப்பில் 155 கலைஞர்கள் வழங்கிய 201 ஓவியங்கள், 21 சிற்பங்கள் இடம்பெற்றன.

இந்த ஆண்டு இந்தச் சங்கம் நீடித்த விற்பனை மாதிரியைப் பின்பற்றியதாகச் சொல்கிறார் இந்தச் சங்கத்தின் பன்னாட்டுச் சேவை இயக்குநரான சந்தீப் ஒஹ்ரி. அக்டோபரில் கண்காட்சி முடிந்துவிட்டாலும், டிசம்பர் 31, 2025 வரை கலைப்படைப்புகள் ஓர் இணையத் தளத்தின் வழியாகக் கிடைத்தன. “தொடக்க வார இறுதி

## பலன் பெறும் பள்ளி




ரோட்டரி பெங்களூரு வித்யாலயா மாணவர்கள் ஒரு கண்காட்சியில் தங்கள் மாதிரிகளைக் காட்சிப்படுத்துகிறார்கள்.

*கலா ஃபார் வித்யா வழியாகத் திரட்டப்படும் நிதி, பெங்களூர் ரோட்டரி சங்கத் தொண்டு அறக்கட்டளை இயக்கும் ரோட்டரி பெங்களூர் வித்யாலயாப் பள்ளியை ஆதரிக்கிறது. இந்தப் பள்ளி மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி மழலையர் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை கன்னட, ஆங்கில வழிகளில் கல்வி வழங்குகிறது.*

*நாகதேவனஹள்ளியில் அமைந்துள்ள, பொதுப் போக்குவரத்தால் அணுகக்கூடிய இந்த வளாகத்தில் வகுப்பறைகள், அறிவியல், கணினி ஆய்வகங்கள், நூலகம், விளையாட்டுக் களம், அரங்கம் உள்ளன. இந்தப் பள்ளியின் கணினி ஆய்வகம் 2023ல் நவீன அமைப்புகள், உரிமம் பெற்ற மென்பொருள், டிஜிட்டல் கற்றல் வளாகங்களுடன் மேம்படுத்தப்பட்டது. 1 முதல் 10 வரையிலான வகுப்புகளின் மாணவர்களுக்கு மின் கற்றல் உள்ளடக்கம் வழங்கப்படுகிறது.*

*கல்வி முன்னேற்றமானது வழக்கமான மதிப்பீடுகள், அனுபவம் பெற்ற ஆசிரியர்கள், திட்டமிடப்பட்ட பெற்றோர்-ஆசிரியர் உரையாடல்களின் மூலம் ஆதரிக்கப்படுகிறது. இந்தப் பள்ளி கல்விக்கு வெளியிலான பங்கேற்பு, கள வருகைகள், தூய்மை, ஆண்டுதோறும் மருத்துவப் பரிசோதனைக்கும் முன்னுரிமை வழங்குகிறது.*

*RC பெங்களூர் உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு ஒன்று மாதந் தோறும் சந்தித்து நிர்வாகம், கல்வி, பாதுகாப்பு, சட்ட விவகாரங்களை ஆராய்கிறது. பள்ளியின் தலைமைச் செயல் அலுவலர், தலைமை ஆசிரியையின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கிறார்கள்.*



கண்காட்சியில் DGE ரவிசங்கர் டகோஜு.

விற்பனை உச்சத்தை நம்பியிருப்பதைக் குறைக்கவும், வாங்கக்கூடியவர்களுடைய பட்டியலை விரிவாக்கவும் இந்த அணுகுமுறை வடிவமைக்கப்பட்டது" என்று தொடர்ந்து சொல்கிறார் இவர்.

விற்பனையில் 50 முதல் 60% தரகு பெறும் வணிகக் கலைக்கூடங்களிலிருந்து மாறுபட்ட நிதிக் கட்டமைப்பைப் பயன்படுத்துகிறது கலா ஃபார் வித்யா. இந்த மாதிரியின்கீழ், சட்டப்படியான வரிகள், பணம் பெறுதலைச் செயல்முறைப்படுத்தும் கட்டணங்களுக்குப்பிறகு வரும் தொகையில் சுமார் 30% கல்விக்கு வழங்கப்படுகிறது, பெரும்பான்மைத் தொகையைக் கலைஞர்கள் பெறுகிறார்கள். விற்காத ஆக்கங்கள் கலைஞர்களின் சொத்தாகவே தொடர்கின்றன. அதன் முழு உரிமை, காப்புரிமையை அவர்கள் தக்கவைத்துக் கொள்கிறார்கள்" என்கிறார் ஒஹ்ரி.

வெவ்வேறு கலைவாழ்க்கை நிலைகளில் உள்ள கலைஞர்களைச் சேர்க்கும்வகையில் பங்கேற்புக் கட்டணங்கள் கட்டமைக்கப் பட்டுள்ளன. அச்சு உருவாக்குநர்கள், வளரும் கலைஞர்களிடம் குறைந்த நுழைவுக் கட்டணம் பெறப்படுகிறது. "இந்தக் கட்டணங்கள் கூடுதல் வருவாய்க்காகப் பெறப்படுவதில்லை, இடத்துக்கான வாடகை, காப்பீடு, தளவாடங்கள் போன்ற அடிப்படைச் செயல்பாட்டுச் செலவுகளை ஈடு செய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளன."

2025 பதிப்புக்குக் கிடைத்த எதிர்வினையால் ஊக்கம் பெற்ற RC பெங்களூர் இந்தத் திட்டத்தை ஆண்டுக்கு ஒருமுறைமட்டுமின்றி ஆண்டு முழுக்க நடத்தி விரிவு படுத்தினால் என்ன என்று ஆராய்கிறது. இதன் நோக்கம், கலைஞர்களுக்கு நீடித்த தோற்றத்தை வழங்குதல், ரோட்டரி பெங்களூர் வித்யாலயாவில் கல்விக்குத் தொடர் நிதியை உருவாக்குதல். "கலைக் கல்வி அமைப்புகள், பள்ளிகளுடன் பணியாற்றுவது பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறோம் என்றார் ஒஹ்ரி.■

# ரோட்டரி பாரா டேபிள் டென்னிஸ் போட்டி

**V முத்துக்குமரன்**

கடந்த மூன்று ஆண்டுகளாக மாற்றுத்திறனாளிகளுக்காக டேபிள் டென்னிஸ் போட்டிகளை நடத்திவந்த மதராஸ் சென்ன பட்னா ரோட்டரி சங்கம் (RID 3234) இப்போது IIT சென்னையுடன் இணைந்து தேசிய அளவில் பாரா ராங்கிங் டேபிள் டென்னிஸ் போட்டிகளை முதன் முறையாக தமிழகத்தில் நடத்தியது. தேசிய அளவில் நடத்தப்படும் மூன்றாவது பதிப்பாகும் இது.

சென்னை IIT வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரண்டு நாள் போட்டிகளில் 20 மாநிலங்களைச் சேர்ந்த, 60 பெண்கள் உள்பட 221 பாரா தடகள வீரர்கள் பங்கேற்றனர். மாவட்ட ஆளுநர் வினோத் சரோகி, பங்கேற்பாளர்களை வரவேற்றுப் பேசினார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் பாரா தரவரிசை டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியை சர்வதேச போட்டியாக நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நிகழ்ச்சிக்கான திட்டத்தின் தலைவர் ராஜசேகர் ராமன் கூறுகையில் மதராஸ் சென்ன பட்னா ரோட்டரி சங்கம் ரோட்டேரியன் களுக்காக ஒவ்வொரு ஆண்டும் டேபிள் டென்னிஸ் லீக் போட்டிகளை நடத்துவது வழக்கம். “பங்கேற்பாளர்களிடம் மிகுந்த உற்சாகத்தையும் நட்புறவையும் கண்ட நாங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டியை நடத்த வேண்டும் என்று நினைத்தோம். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அது செயல்வடிவம் பெற்றுள்ளது. அதன் எதிரொலிதான் தேசிய அளவிலான பாரா டேபிள் டென்னிஸ் போட்டிகள்” என்று கூறினார்.

முதல் ஆண்டு நடைபெற்ற பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் 36 வீரர்கள் மட்டுமே பங்கேற்றனர். அடுத்த ஆண்டு இந்த எண்ணிக்கை 46-ஆக உயர்ந்தது. ஆனால், எங்கள் நிகழ்வின் தரம் பற்றிய செய்தி விரைவாக பரவியதை அடுத்து கடந்த ஆண்டு (2025) நடைபெற்ற போட்டியில் நாடு முழுவதிலிருந்து 156 வீரர்கள் கலந்துகொண்டனர். இதையடுத்து போட்டியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல நாங்கள் விரும்பினோம் என்று ராஜசேகர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் கடந்தகால சாதனைகளைப் பார்த்த பின்பு இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு டேபிள் டென்னிஸ் கழகம் தேசிய அளவில் தரவரிசைக்கான பாரா டேபிள் டென்னிஸ் போட்டிகளை நடத்த மதராஸ் சென்ன பட்னா ரோட்டரி சங்கத்துக்கு அனுமதி வழங்கியது.

போட்டிகளை நடத்துவதற்கான சரியான இடத்தையும் கூட்டாளர் களையும் ரோட்டரி சங்கம் தேடிவந்த போது, IIT சென்னை, ரோட்டரியுடன் இணைந்து செயல்பட முன்வந்தது. இரண்டு நாள் போட்டிகளின் போது



*இடமிருந்து: RC மெட்ராஸ் சென்னா பாட்னா தலைவர் அந்தோணி குமார், RID 3234 AG R ரவிசங்கர், DG வினோத் சரோகி, மாவட்ட செயலாளர்கள் R J குமாரவேல் மற்றும் R சப்தகிரி, J கணேஷ் ஆகியோர் நிகழ்வின் தொடக்க விழாவில்.*




IIT ஆராய்ச்சி மாணவர்கள் பாரா வீரர்களின் விளையாட்டு முறைகளை சி.சி.டி.வி.க்களை நிறுவி செயற்கை நுண்ணறிவு மற்றும் வீரர்களின் அசைவு மூலம் ஆய்வு செய்தனர். இதன் மூலம் சிறப்பு விளையாட்டு வீரர்களின் செயல்திறன் மற்றும் பயிற்சியை மேம்படுத்த முடியும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக பாரா டேபிள் டென்னிஸ் போட்டிகளில் வழக்கமாக பங்கேற்கும் சூரத்தைச் சேர்ந்த பவிகா குகாடியா (30), போட்டிகளின் ஒரு பிரிவில் கலந்துகொண்டார். நிகழ்ச்சியையொட்டி ஏற்பாடு செய்யப்படிருந்த போக்குவரத்து, தங்கும் இடம் மற்றும் உணவு வழங்குதல் தொடர்பான வசதிகளை அவர் வெகுவாக பாராட்டினார். பவிகா இதுவரை 25-க்கும் மேலான தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்றவர். அவர் ஒரு மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

உத்தரப்பிரதேச மாநிலம், உன்னாவ் மாவட்டத்தைச் சேர்ந்தவரும் பவிகாவின் தோழியுமான பிராச்சி பாண்டே, சக்கர நாற்காலியை பயன்படுத்தும் டி.டி.வீராங்கனை. அவர் கூறுகையில், "நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து ஆடுகளத்துக்கு வருவது கடினமாக இருந்தது. எங்களைப் போன்ற சக்கர நாற்காலி வீரர்களுக்கு போக்குவரத்து வசதியில் இன்னும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம்" என்றார்.

"முதல் முறையாக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு அதிக பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இதற்காக IIT முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளைக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்" என்று மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் தலைமை ஏற்பாட்டாளருமான சஞ்சய் மகாதேவன் கூறினார். 17 வெற்றியாளர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேருக்கு மோட்டார் பொருத்திய சக்கர நாற்காலிகள் (ரூ.75,000 மதிப்புள்ளது) வழங்கப்பட்டன. இவற்றில் ஒன்று "திரைவ் மொபிலிடி" என்னும் நிறுவனம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

வெற்றிபெற்ற 17 வீரர்களுக்கும் கோப்பை, சான்றிதழ் மற்றும் ரூ.5,000 ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. இரண்டாவது இடத்தை பிடித்த, 17 பேருக்கு ரூ.3,000 பரிசுத்தொகை மற்றும் கோப்பை, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவை தவிர 34 பேருக்கு சிறப்பு பரிசாக தலா ரூ.1,500 வழங்கப்பட்டது.

சக்கரநாற்காலி அல்லாத வீரர்கள் ஒன்பது பேருக்கு சங்கத்தின் சார்பில் தலா ரூ.10,000 ரொக்கப்பரிசு வழங்கப் பட்டது. மூத்த டேபிள் டென்னிஸ் வீரரும், டேபிள் டென்னிஸ் பொருள்கள் விற்பனை நிலையம் வைத்திருக்கும் சரத் கமல், இந்த 9 பேருக்கும் தமது சார்பில் தலா ரூ.2,000 மதிப்புள்ள பரிசுக் கூப்பன்களை வழங்கினார்.

"இந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் குறைந்தது 6 வீரர்களுக்கு மாநில அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட உயர் செயல்திறன் மையத்தில் சரத் கமல் மூன்று நாள் சிறப்பு பயிற்சி அளிப்பார்" என்று மகாதேவன் கூறினார்.

ரோட்டரி நியூஸ் செய்திக் குழுவிடம் பேசிய மதராஸ் சென்ன பட்னா ரோட்டரி சங்கத்தின் தலைவர் அந்தோனி குமார், "நாங்கள் பல்வேறு முயற்சிகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுகிறோம். எங்களின் 10 ஆண்டுக்கால மைக்ரோ கடனுதவித் திட்டத்தின் மூலம் 80 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள். அவர்களுக்கு ரூ.50,000 முதல் ரூ.1 லட்சம் வரை வட்டியில்லா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

புகைப்படம்: V முத்துகுமரன்

# மக்கள் மனதைத் தொட்ட RAHAT மருத்துவ முகாம்

ஜெய்ஸ்ரீ

மத்தியப்பிரதேச மாநிலம், செஹோரில் உள்ள சந்திரசேகர் ஆசாத் அரசு முதுகலை கல்லூரியின் அமைதியான வளாகம் ஒரு பரபரப்பான முழுமையாகச் செயல்படும் மருத்துவமனையாக மாறியிருந்தது. போபால் ஹில்ஸ் மற்றும் செஹோர் ரோட்டரி சங்கங்கள் (RID 3040) இணைந்து ஏற்பாடு செய்திருந்த RAHAT (Rotary Hands Are Touching) மருத்துவ முகாமின் ஒரு பகுதியாக 5,000-த்துக்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு வகையான நோய்களுக்குக்காக (பலர் முதன்முறையாக) இங்கு இலவச சிகிச்சை பெற்றனர்.

முகாமின் நெகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொண்ட திட்டத் தலைவர் உமங் சக்சேனா, பிறந்ததிலிருந்தே உதட்டுப் பிளவுடன் வாழ்ந்து வரும் 12 வயது ராஜூவின் கதையை நினைவுகூர்ந்தார். “அவர் மிகவும் அமைதியானவர். மக்களை சந்திக்கக்கூட தயங்கினார். அவரது பெற்றோர் தினசரி கூலித் தொழிலாளர்கள். அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளலாம் என்றால் அதற்கு பண வசதி இல்லை. அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு அவர் மறுஆய்வுக்கு வந்த போது அவர் முதல் முறையாக சுதந்திரமாக சிரித்தார். அந்த புன்னகை எங்கள் அனைத்து முயற்சிகளையும் பயனுள்ளதாக்கியது”.

மருத்துவ ஆலோசனைகளுடன் பல நோயாளிகள் உதட்டுப் பிளவு, பித்தப்பையில் கல் மற்றும் இதர சிக்கலான பிரச்னைகளுக்கு அறுவைச் சிகிச்சையும் செய்து கொண்டனர். நோயியல் மற்றும் கதிரியக்கவியல் பிரிவுகள் உள்பட ஒரு மருத்துவமனயே முகாம் போல செயல்பட்டது. CT ஸ்கேன் கருவி தவிர இதர அனைத்து மருத்துவக் கருவிகளும் போபாலில் உள்ள மக்கள் மருத்துவமனையிலிருந்து கொண்டு செல்லப்பட்டன.

இருபதுக்கும் மேலான மருத்துவப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் “220 மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவ ஊழியர்கள் தங்கள் நேரத்தையும், நிபுணத் துவத்துவத் தையும் பயன்படுத்தி தன்னார்வ தொண்டு செய்தனர். அவர்கள் முற்றிலும் இலவசமாகவே இந்த சேவைகளைச் செய்தனர். மருத்துவர்கள் மற்றும் அவர்களது குழுவினருக்கு போக்குவரத்து, தங்குமிடம், உணவு வசதிகளுக்கு மட்டும் நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம்” என்று போபால் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஹர்ஷ் Y மிட்டல் கூறினார்.

செஹோரில் நடத்தப்பட்ட மிகப்பெரிய மருத்துவ முகாம் இதுவாகத்தான் இருக்கும் என்று கூறிய மிட்டல், அந்த இடத்தை தேர்வு செய்ததற்கான காரணத்தையும் விளக்கினார். “செஹோரைச் சுற்றி 100-க்கும் மேலான கிராமங்கள் உள்ளன. இங்கு மருத்துவ முகாம் நடத்துவதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் பலனடைய முடியும் என்பதாலேயே இங்கு நடத்தினோம், என்றார்.

இரண்டு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த தன்னார்வலர்களும் 162 கிராமங்களுக்கும் பயணம் செய்து ஒருவார காலம் வீடுவீடாகச் சென்று மருத்துவ முகாம் குறித்தும் உடல் ஆரோக்கியம் குறித்தும் பிராசாரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கண் அறுவைச்சிகிச்சை, இதய நோய் சிகிச்சை மற்றும் இதர கோளாறுகளுக்காக கிட்டத்தட்ட 180 பேர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப் பட்டனர். அவர்களுக்கு போபால் மக்கள் மருத்துவமனையில் இலவசமாக தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

போபால் ஹில்ஸ் ரோட்டரி சங்கம் கண் மருத்துவப் பரிசோதனை மற்றும் பல் மருத்துவப் பரிசோதனைக்காக இரண்டு நடமாடும் மருத்துவ வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தியது. இவை முன்னதாக இந்த ஆண்டு தொடக்கத்தில் சர்வதேச மானிய உதவியுடன் தொடங்கப்பட்டது. இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் புகையிலைப் பொருள்களை அதிகம் உபயோகிப்பதால், வாய் வழி புற்றுநோய் சிகிச்சைக்கான பரிசோதனைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகள் இலவசமாக மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

*RAHAT முகாமில் இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் DG சுஷில் மல்ஹோத்ரா.*



கடந்த 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜபுவாவில் இதேபோல RAHAT மருத்துவ முகாமை சண்டீகர் PGIMER ஆதரவுடன் நடத்திய அனுபவம் உமங் சக்சேனாவுக்கு உள்ளது. அந்த முகாமில் 1.5 லட்சம் பேர் பயனடைந்தனர். சக்சேனா, ஜபுவா ரோட்டரி சங்க உறுப்பினராக உள்ளார்.

போபால் ஹில்ஸ் ரோட்டரி, அதன் 27-வது ஆண்டில், அதாவது சமீபத்தில் மக்கள் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட டயாலிஸிஸ் சிகிச்சை மையத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஆறு நாற்காலிகள், எக்ஸ்ரே கருவி, CT ஸ்கேன் கருவி மற்றும் வாய்வழி புற்றுநோய் கண்டறியும் கருவிகளுடன் பல் மருத்துவ சிகிச்சை பிரிவை ஏற்படுத்தியுள்ளது. நடமாடு கண் மற்றும் பல் மருத்துவப்பரிசோதனை வசதிகள் அனைத்தும் சர்வதேச நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கிட்டத்தட்ட 40 சதவீத நிதியை சங்கமே வழங்கியுள்ளது என்று கூறினார்.

PDG விஜய் படேல் (UK) பெருமளவு ஆதரவு நல்கியதாக மிட்டல் ஒப்புக்கொண்டார். மேலும் மிச்சிகனைச் சேர்ந்த Dr ரீட்டா மற்றும் ரமேஷ் கர்க் ஆகியோர் பெருநன்கொடையாளர்களாக இருந்தனர். போபால் ஹில்ஸ் ரோட்டரி சங்கம் உள்ளிட்ட RID 3040-ன் 7 சர்வதேச திட்டங்களுக்கு நிதியுதவி கிடைக்க ஆதரவாக இருந்தனர். அவர்களின் மகன் ஆஷிஷ் கர்க் நினைவாக சுமார் 1,00,000 டாலர் நிதிப் பங்களிப்பு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.■



*முகாமில் ஒரு குழந்தைக்கு கேட்கும் திறன் பரிசோதனை செய்யப்படுகிறது.*

## எல்லை கடந்த சேவை

“சேவை எண்ணமானது சாதி, மதம், ஓர வஞ்சனை, நேரம், எல்லைகளையெல்லாம் தாண்டியது. ஏனெனில், அது ஓர் உயர்ந்த, புனிதமான செயல்” என்றார் RI இயக்குநர் M முருகானந்தம் மாற்றுத் திறனாளி உறுப்பினர்களை மட்டும் கொண்ட RC சேலம் டிவைன் ஹார்ட்ஸ் என்ற புதிய சங்கத்தின் தொடக்கக் கூட்டத்தில் அவர் இவ்வாறு பேசினார்.

ரோட்டரியில் இணைவதன்மூலம் இந்தப் பதிவு உறுப்பினர்கள் “எங்களாலும் சமூகத்துக்குத் தாக்கமுள்ள சேவையைச் செய்யமுடியும் என்று உலகுக்குக் காண்பித்துள்ளார்கள்” என்று அவர் குறிப்பிட்டார். RID 2982-ல் முதன்முதலாக இப்படி ஒரு சங்கத்தை அமைப்பதற்காகப் பணியாற்றிய AG K வசுமதி, ஆதரிக்கும் சங்கமான RC சேலம் ஜிம்கானா-வின் தலைவர் காமராஜ் பிள்ளை, செயலாளர் சுரேஷ் பாபு, உறுப்பினர்களின் முயற்சிகளை முருகானந்தம் பாராட்டினார்.

DG P சிவசுந்தரம் பேசுகையில், இந்தச் சங்கத்தின் பதிவு நிறுவல் நிகழ்வு ஊனத்தைக் கடந்த திறன் என்னும் கருப்பொருளைப் பிரதிபலிப்பதாகவும், குறிப்பிட்டார். P மணிகண்டன் பதிவுத் தலைவராக நிறுவப்பட்டார். ஜாகிர் ஹூசன் செயலாளராகவும் C விஜயகுமார் பொருளாளராகவும் நிறுவப்பட்டார்கள். புதிய சங்கத்தில் 16 பதிவு உறுப்பினர்கள் உள்ளார்கள்.■





*RI இயக்குநர் M முருகானந்தம், RC சேலம் டிவைன் ஹார்ட்ஸ் சாசனத் தலைவர் P மணிகண்டனுக்கு நினைவுப்பரிசை வழங்குகிறார்.*

Rotary PEOPLE OF ACTION

# பசுமை மருத்துவமனையில் சூரியசக்தி செறிவூட்டி

ரோட்டரி செய்திக்குழு




*வதோதராவில் உள்ள முனி சேவா ஆசிரமத்தில், பாம்பே பியர் சங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு மாபெரும் சூரிய ஒளி செறிவு கருவி.*

நிலையான சுகாதார பராமரிப்பை நோக்கிய, ஒரு குறிப்பிடத்தக்க முன்முயற்சியாக பாம்பே பையர் ரோட்டரி சங்கம், RID 3141, குஜராத் மாநிலம், வதோதரா அருகில் உள்ள கோரஜ் கிராமத்தில் கைலாஷ் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை அமைந்துள்ள முனிசேவா ஆசிரமத்தில் ஒரு மெகா சூரியசக்தி செறிவூட்டியை நிறுவ ஆதரவளித்துள்ளது.

இந்த திட்டம் கடந்த 2025 டிசம்பர் மாதம் அபார் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம் அளித்த CSR நிதியால் சாத்தியமானது. இது தொடர்பாக சங்கத்தின் செயலர் முர்துஸா சிதார்வாலா கூறுகையில், இந்த நிறுவல் இந்தியாவில் சுகாதாரத் துறையில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி பயன்பாட்டை பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று கூறினார்.

இங்கு நிறுவப்பட்டுள்ள கருவி மருத்துவமனையின் 600 டன் குளிர்சாதன வசதி கொண்ட பிரிவை இயக்குவதற்குத் தேவையான சூரியசக்தியை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 25 மீட்டர் சுற்றளவுடன் 7 மாடி கட்டட உயரம் விரிந்து பரந்துள்ள இந்த செறிவூட்டி வட்டிலில் நூற்றுக்கணக்கான துல்லிய கண்ணாடிகள் பதிக்கப் பட்டுள்ளன. இந்த கண்ணாடிகள்

*இங்கு நிறுவப்பட்டுள்ள கருவி மருத்துவமனையின் 600 டன் குளிர்சாதன வசதி கொண்ட பிரிவை இயக்குவதற்குத் தேவையான சூரியசக்தியை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.*



சூரிய சக்தி பாத்திரத்தின் முன் RC பாம்பே பியர் உறுப்பினர்கள்.

சூரிய ஒளியை ஒரு குவியப்புள்ளியில் செலுத்துகின்றன. சூரியசக்தியை மட்டுமே பயன்படுத்தி சுமார் 1,070 டிகிரி வெப்பநிலையை உருவாக்குகின்றன.

இந்த மையப்புள்ளியில் ஒரு குழாய் வழியாகச் செல்லும் நீர், உயர் அழுத்த நீராவியாக மாற்றப்படுகிறது. இந்த நீராவி, ஆவியாகி குளிர்பதன அமைப்பை இயக்க பயன்படுத்தப்படுகிறது. இது பெரிய அளவிலான சூரியசக்தியில் இயங்கும் குளிர்சாதன கருவியை இயக்கி செயல்படுத்துகிறது. சூரிய சக்தி வட்டானது சூரிய இயக்கத்தை கண்காணிக்கும் மென்பொருளைக் கொண்டுள்ளது. மேலும் நாள் முழுவதும் அதிகபட்ச செயல்திறனை உறுதிப்படுத்துகிறது.

ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட நிறுவனமான சன்ரைஸ் CSP மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள தேசிய பல்கலைக்கழகம் முதன் முதலாக இதை உருவாக்கியது. இந்த செறிவூட்டி இப்போது இந்தியாவில் ஆசிரமத்தின் உறுப்பினர் தீபக் கடியாவின் முன் முயற்சியால் நிறுவப் பட்டுள்ளது.

ஆமதாபாதிலிருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள பசுமைத் தொழில் நகரமான தோலேராவில் உப்புநீரை குடிநீராக்கும் தொழிற்சாலையை பார்வையிட வந்த ஆஸ்திரேலிய பிரதிநிதிகள், இந்தியாவில் சூரியசக்தி செறிவூட்டி தொழில்நுட்பத்தை கொண்டுவர விருப்பம் தெரிவித்தனர். இதையடுத்து இந்தியாவில் ஒரு துணை நிறுவனம் நிறுவப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஆசிரமத்தில் முதல்முறையாக சூரியசக்தி செறிவூட்டி வட்டு நிறுவப்பட்டது என்று விளக்கினார் சிதார்வாலா. இதிலிருந்து கிடைக்கும் நீராவி சமையல், சலவை மற்றும் இதர அன்றாட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த இரண்டு வசதிகளும் வழக்கமான மின்சார ஆதாரங்களைச் சார்ந்திருப்பதை வெகுவாக குறைத்துள்ளது. கார்பன் வெளியேற்ற உமிழ்வை குறைக்கவும் உதவுகிறது என்று அவர் கூறினார். பசுமை சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மிச்சமாகும் அல்லது சேமிக்கப்படும் பணத்தை நாங்கள் மருத்துவமனையில் உள்ள நோயாளிகளின் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்துவோம் என்று நிர்வாகத்தினர் உறுதியளித் துள்ளதாக அவர் மேலும் கூறினார். ■

# கர்பப்பை வாய் புற்றுநோயிலிருந்து பழங்குடியினப் பெண்களை பாதுகாத்தல்

ஜெய்ஸ்ரீ

தெற்கு கொல்கத்தாவில் ஜோகா அருகில் பைலானில் செயல்பட்டு வரும் உறைவிடப் பள்ளியான அதிகம் பூமி பள்ளியைச் சேர்ந்த சுமார் 550 சிறுமிகள் சமீபத்தில் கர்பப்பை வாய் புற்றுநோய் தடுப்புக்கான முதல் தவணை தடுப்பூசிகளை போட்டுக்கொண்டனர். இதற்கான முன்முயற்சியை மேற்கொண்ட கொல்கத்தா சால்ட் லேக் மெட்ரோபாலிடன் ரோட்டரி சங்கத்துக்குத்தான் (RID 3291) நாம் நன்றி சொல்ல வேண்டும். வளர் இளம் பெண்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் முதல் நடவடிக்கையான இத்திட்டம், பெங்கால் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் ஆதரவில் செயல்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் பெண்களிடையே புற்றுநோய் பாதிப்பு தொடர்பான இறப்புகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று கர்பப்பை வாய் புற்றுநோயாகும் என்று சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் அருணா டான்டியா விளக்கினார். பிறப்புறுப்பில் ஏற்படும் மனித பாப்பிலோமா வைரஸ் தொற்று காரணமாக இது ஏற்படுகிறது. எனவே HPV (Human Papillomavirus) தடுப்பூசியை 9 வயது முதல் 14 வயது வரையிலான சிறுமிகளுக்கு போடுவதன் மூலம் இந்த புற்றுநோய் வராமல் தடுக்கலாம். இது நீண்டகால பாதுகாப்பு அளிக்கிறது மற்றும் வாழ்க்கையின் பிற்பகுதியில் கர்பப்பை வாய் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது. இதை அங்கீகரிக்கும் வகையில், இந்த வயதினரை அடிப்படையாகக்கொண்டு பள்ளியில் இரண்டுநாள் தடுப்பூசி முகாமுக்கு சங்கம் ஏற்பாடு செய்தது.

இதுபோன்ற முயற்சிகளின் அவசியம் குறித்துப் பேசுகையில், ஜோகா, சுந்தரவனக்காடுகள், புரூலியா மற்றும் பங்குரா போன்ற பகுதிகளில் சுகாதார பராமரிப்பில் இடைவெளிகள் அதிகம் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். "இந்தப் பகுதிகளில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லை. குறிப்பாக அன்றாட வாழ்க்கையே போராட்டமாக இருப்பதால்



*RC சால்ட் லேக் மெட்ரோபொலிட்டன் கொல்கத்தா உறுப்பினர் Dr அருணா டான்டியா, HPV தடுப்பூசி போடப்பட்ட ஒரு மாணவருடன்.*




*கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அமர்வில் கலந்து கொண்ட பெற்றோர்கள்.*

பெண்கள், தங்களின் சுகாதாப் பிரச்னைகளை புறக்கணிக்கிறார்கள்” என்று அவர் கூறினார்.

அருகில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1,200 பழங்குடியின பெண்களுக்கு அதிகம் பூமி பள்ளிதான் தங்கும் இடம் மற்றும் கல்வி வசதியை அளித்து வருகிறது. பெரும்பாலான பெற்றோர்கள் தினக்கூலிகளாக இருப்பதால் அவர்களால் தங்கள் குழந்தைகளுக்கு முறையான கல்வியோ அல்லது சுகாதார மருத்துவ வசதியோ செய்துதர முடியவில்லை. எனவே குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகிறது.

பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு முன்னதாக, ரோட்டரி குழுவினர், அவர்களின் பெற்றோர்களை அழைத்து சிறப்பு அமர்வு நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதைப் புரிந்துகொண்ட பெற்றோர்கள், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஒப்புதல் அளித்தனர்” என்று அருணா விளக்கினார். சிறுமிகளுக்கு இரண்டு தவணைகளாக தடுப்பூசி போடப்படும். முதல் தவணை தடுப்பூசி போட்டபின் ஆறு மாதம் கழித்து இரண்டாவது தவணை தடுப்பூசி போடப்படும். இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து தடுப்பூசிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஒரு தவணை தடுப்பூசியின் சலுகை விலை ரூ.2,230. இந்த செலவை ரோட்டரி சங்கம் முழுமையாக ஏற்கிறது.

பெண்களின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி வரும் ரோட்டரி சங்கம் உலகளாவிய மானியத் திட்டமான “மாத்ரி ரக்ஷா” திட்டத்தின் கீழ் இந்த தடுப்பூசி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2021-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம் இரத்த சோகை மற்றும் மாதவிடாய் கோளாறுகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தி, மலிவு விலையில் உள்ளூரில் கிடைக்கும் ஊட்டச்சத்துக்கள் மூலம் சிகிச்சையை மேம்படுத்துகிறது. “நீண்டகால இரத்தப்போக்கு மற்றும் போதிய விழிப்புணர்வை இல்லாமை இரத்த சோகைக்கு வழிவகுக்கிறது. பெண்கள் பலரும் வெளியில் சொல்ல விரும்பாத காரணத்தால் சிகிச்சை பெறுவதற்கு தயங்குகிறார்கள்” என்று அவர் விளக்கினார்.

மாத்ரி ரக்ஷா திட்டத்தின் கீழ் சங்கம் தலசீமியாவால் (ஒரு வகை குருதி நோய்) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பரிசோதனை முகாம் மூலம் சிகிச்சை அளித்து வருகிறது. மேலும் மாதவிடாய் சுகாதாரம், ஆரோக்கியமான உணவு முறைகள் குறித்து சிறப்பு அமர்வுகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மூன்று மாதங்களுக்குத் தேவையான வைட்டமின் மாத்திரைகளும், இரும்புச் சத்து மாத்திரைகளும் விநியோகிக்கப்படுகின்றன. இதுவரை 87 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகாமிலும் 400 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

சுவிட்சர்லாந்தில் உள்ள மூன்று ரோட்டரி சங்கங்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள நான்கு சங்கங்களின் ஆதரவுடன் இத்திட்டம் 20,000 பெண்களைச் சென்றடைவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.■

# RID 3234-ன் ஒரு மில்லியன் டாலர் இரவு

கிரண் ஜெஹரா

கேட்ஸ் அறக்கட்டளை அதன் பொருந்தக்கூடிய நிதியை ரோட்டரி அறக்கட்டளைக்கு மாற்றியுள்ளது. ரோட்டரி திரட்டும் ஒவ்வொரு டாலருக்கும் கூடுதலாக இரண்டு டாலர்கள் வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை மதிக்கிறது. இந்த அறிவிப்பு RID 3234 ஏற்பாடு செய்திருந்த A Million Dollar Opportunity என்னும் பெயரில் ஒரு நாள் மாலை TRF பல மாவட்ட கூட்டத்தில் எதிரொலித்தது. இதை பகிர்ந்துகொண்ட TRF-ன் அறங்காவலர் ஹோல்கர் நாக், "உலகளாவிய சுகாதாரத்தில் ரோட்டரியின் நீடித்த நம்பகத்தன்மையை" எடுத்துக்கூறினார். கேட்ஸ் அறக்கட்டளையுடனான கூட்டாண்மை போலியோ ஒழிப்புக்காக ஆண்டுதோறும் $150 மில்லியன் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரோட்டரி ஒவ்வொரு ஆண்டும் $50 மில்லியன் பங்களிப்புச் செய்யும்.

இந்த ஆண்டு போலியோ ஒழிப்புக்காக 50 மில்லியன் டாலர் செலவிடப்பட்டதை குறிப்பிட்டு பேசிய நாக், "தங்கள் குழந்தை ஒருபோதும் முடங்கிவிடக்கூடாது என்பதற்காக அவர்களை தடுப்பூசி போட்டுக்கொள்ள தாய்மார்கள் அழைத்துவரும் நம்பிக்கைதான் இந்த பணியின் உண்மையான அளவுகோலாகும். அந்த நம்பிக்கை தான் நம் வெற்றி. அந்த நம்பிக்கைதான் ரோட்டரி. நம் கூட்டாளர்களும், பயனாளர்களும் நம்மை நம்பி இந்த பணியை ஒப்படைத்துள்ளார்கள்" என்றார்.

அறங்காவலர் பரத் பாண்டியா பேசுகையில், "TRF-தான் உலகில் நன்மை செய்வதற்கு சிறந்த வாகனம். அதன் மூலம்தான் ரோட்டரி உலகிற்கு பல நன்மைகளைச் செய்ய முடிகிறது" என்று சுட்டிக்காட்டினார். போலியோ ஒழிப்புக்கு எதிரான போராட்டம் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. இந்த போராட்டம் நோய்க்கு எதிரானது மட்டுமல்ல, மக்களின் மனநிலை மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டமாகும்" என்று குறிப்பிட்ட அவர், பாகிஸ்தானில் போலியோ ஒழிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த 200 பணியாளர்கள் கொல்லப்பட்டதை சுட்டிக்காட்டினார். போலியோ ஒழிப்பு நிதிக்கு ஆதரவு தருவது முக்கியமானது என்றும் வலியுறுத்தினார்.

PRID A S வெங்கடேஷ் கொடுப்பது குறித்த ஆழ்ந்த சிந்தனைப் பார்வையை வழங்கினார். "நான் உங்களிடம் கேட்கவோ அல்லது கொடுக்கவோ அறிவுறுத்தவோ மாட்டேன். கொடுப்பது அறக்கட்டளை என்ன செய்கிறது என்பதன் மூலம் வழிநடத்தப்பட வேண்டும். அறியாமையால் அல்ல. நீங்கள் கொடுக்கும்போது ஏன் கொடுக்கிறோம் என்பதை அறிந்திருக்க வேண்டும்". பள்ளித் திட்டத்தின்கீழ் பெஞ்சுகள் மற்றும் மேஜைகள் நன்கொடையாக வழங்கப்பட்டபோது சார்ஜென்டாக இருந்த அனுபவத்தை அவர் நினைவுகூர்ந்தார். வகுப்பறையில் மேஜைகள், பெஞ்சுகள் போடப்பட்ட பின் ஒரு சிறுமி வகுப்பறையில் இருப்பதை நான் கவனித்தேன். அந்த சிறுமியிடம் சிற்றுண்டிக்காக

*இடமிருந்து:* DG *வினோத் சரோகி,* PDG *அபிராமி ராமநாதன், அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக், நல்லம்மை ராமநாதன், சுசான் நாக்,* RI *இயக்குநர்* M *முருகானந்தம், அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும்* PRID A S *வெங்கடேஷ்.*



அனைவருடன் சேர்ந்துகொள்ளுமாறு வலியுறுத்தினேன். ஆனால், அந்த சிறுமி, “இப்போதுதான் நான் முதல் முறையாக பெஞ்சில் உட்காருகிறேன். எங்களுக்கு இந்த உரிமையை பெற்றுத் தந்த நீங்கள் கடவுள் போன்றவர். சிறிது நேரம் நான் இதை அனுபவிக்க விரும்புகிறேன்” என்று பதிலளித்தார். அந்த சமயத்தில் தனிப்பட்ட பங்களிப்பு இல்லாமல் பாராட்டுகளை ஏற்றுக்கொள்வது எனக்கு தர்மசங்கடமாக இருந்தது. அதன் பிறகு தான் நான் அறக்கட்டளையின் செயல்பாடுகளை படித்து தெரிந்து கொண்டேன். உலகளாவிய மானியம் பற்றியும் புரிந்துகொண்டேன். உடனடியாக அந்த ஆண்டே நான் $1,000 நன்கொடையாக வழங்கினேன். அறக்கட்டளை என்ன செய்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள். அது செயல்படுத்தும் திட்டங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உண்மையிலேயே புரிந்து கொள்ளும் போது மனது விசாலமாகும். பணத்தை அள்ளிக் கொடுக்கத் தோன்றும்,” என்றார்.

“இது ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான கனவை நனவாக்கும் வாய்ப்பாகும். எத்தனை நாள் நாம் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கிறோம் என்பதுதான் முக்கியம். இங்கு இன்று கூடியுள்ள நன்கொடையாளர்கள் கொடுப்பவர்கள் மட்டுமல்ல, மதிப்புடன் வாழ்பவர்கள்” என்று RI இயக்குநர் M முருகானந்தம் கூறினார்.



RID 3234 IPDRR *சசிகுமார் மற்றும்* DRR *சதீஷ் குமார் (வலது) அறங்காவலர் தலைவர் நாக் மற்றும்* DG *சரோகியுடன்.*

உறுப்பினர்கள் எண்ணிக்கை, விரிவாக்கம் மற்றும் திட்டத்துக்கான பங்களிப்பில் ஐந்தாவது மண்டலம் முதலிடத்தில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். TRF பங்களிப்பாக 15 முதல் 20 மில்லியன் டாலர் இலக்கு வைத்திருப்பதாகவும் அது விரைவில் எட்டப்படும் என்றும் அவர் கூறினார்.



2026–29 ஆம் ஆண்டுக்கான RRFC, PDG J ஸ்ரீதர், RID 3234 ரோட்ராக்ட் $66,784 பங்களிப்புச் செய்துள்ளதாக குறிப்பிட்டார். RID 3231 மற்றும் 3234 இணைந்து TRF-க்கு 1.2 மில்லியன் டாலர் பங்களிப்பு வழங்க இருப்பதாக PDG N சரவணன் அறிவித்தார். RID 3234-க்கு உட்பட்ட AKS உறுப்பினர்கள், பெரு நன்கொடை யாளர்கள், என்டௌவ்மென்ட் பங்களிப்பாளர்கள் மற்றும் CSR நன்கொடையாளர்கள் கௌரவிக்கப் பட்டனர். DG வினோத் சரோகி $1,26,000 பங்களிப்புச் செய்து AKS தலைமை வட்டத்தில் இணைந்தார். PDG ரவி ராமன், உலகளாவிய மானியங்களுக்காக $1,00,000 மதிப்புக் கான காசோலையை வழங்கினார்.

TRF கூட்டம் தொடர்பாக RID முருகானந்தத்திடம் இருந்து அழைப்பு பெற்ற ஒருநாளில் 30,000 டாலர் நிதி திரட்டியதற்காக சங்கங்களின் தலைவர்களுக்கு RID 3231, DG V சுரேஷ் நன்றி தெரிவித்தார்.■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா

## நோக்கத்துடன் ரோட்டரியை வளர்ப்பது

கோத்ரா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருந்த மறைந்த தனது தந்தை வீரேந்தர் மகோல் தூண்டுதலால் ஈர்க்கப்பட்டு 2000-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். 2011-ம் ஆண்டு மும்பைக்கு இடம்பெயர்ந்த ஹர்ஷ் மகோல், நவி மும்பை பாம் பீச் ரோட்டரி சங்கத்தின் பட்டய உறுப்பினரானார்.

போலியோவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சரிசெய்தல் முகாமில் நடந்த ரோட்டரி தருணத்தை அவர் நினைவுகூர்ந்தார். அறுவைச்சிகிச்சை முடிந்த ஒரு குழந்தையை வார்டுக்கு எடுத்துச் செல்ல ஸ்ட்ரெச்சர் பற்றாக்குறையால் சுமந்து சென்றதை நினைவுகூர்ந்தார். குழந்தையின் தாயார் காட்டிய நன்றியுணர்வு அவரை மிகவும் நெகிழச் செய்தது. மேலும் சேவைக்கான அவரது உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது.

காதலர் தின கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நன்மதிப்பை உயர்த்தும் வகையில் Fall in Love with Rotary என்னும் தலைப்பில் ரோட்டரி உறுப்பினர்களை அறிமுகம் செய்வதற்கான மாலை நேர நிகழ்ச்சி நடைபெற்றது. புதிதாக 400 உறுப்பினர்களைச் சேர்த்து, குறுகிய காலத்தில் 300 உறுப்பினர்களை இழந்த நிலையில், எண்ணிக்கையைவிட தரத்தை வலுப்படுத்துதல், சரியாக செயல்படாத சங்கங்களை மூடிவிடுதல் மற்றும் அர்த்தமுள்ள செயல்பாடுகளை வலுப்படுத்துதல் என உத்திகள் மாற்றியமைக்கப்பட்டன.

கார்ப்பொரேட் நிறுவனங்களின் CSR மூலம் மாவட்டத்தில் திருநங்கைகள் மற்றும் இளம் விதவைகளுக்கு இளஞ்சிவப்பு நிற ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சைக்கிள்களும் விநியோகிக்கப்பட்டன.

TRF-க்கு நிதிப்பங்களிப்பு செய்வதற்காக $1 மில்லியன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை $800,000 நிதி திரட்டப்பட்டுள்ளது. மாவட்ட மானியங்களை விட, உலகளாவிய மானியங் களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அவர் சங்கங்களை வலியுறுத்தியுள்ளார்.

மாவட்டம் 10 புதிய இன்டராக்ட் சங்கங்களையும் 7 ரோட்ராக்ட் சங்கங்களையும் தொடங்கியுள்ளது. ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 7 இந்திய மாணவர்கள் வெளிநாடு செல்லவுள்ளனர் மற்றும் 7 வெளிநாட்டு மாணவர்கள் இந்தியா வரவுள்ளனர் என்று தெரிவித்தார்.



**ஹர்ஷ் மகோல்**
கார்ப்பொரேட் ரியல் எஸ்டேட்
RC நவி மும்பை பாம் பீச், RID 3142

## கூட்டுறவை வலுப்படுத்துதல்



**அமித் ஜெயஸ்வால்**
ஏற்றுமதி மற்றும் இறக்குமதி
RC தமாத்ரி, RID 3261

நண்பரும் ரோட்டேரியனுமான திலிப் மேத்தாவின் அறிமுகத்தால் 2010–11-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். முன்னாள் இன்டராக்டர் மற்றும் ரோட்டராக்டர் மற்றும் ரோட்டேரியனின் மகனுமான அமித் ஜெயஸ்வால், சிறு வயதிலிருந்தே ரோட்டரியுடன் நெருங்கிய தொடர் கொண்டிருந்தவர். கூட்டுறவு மற்றும் அர்த்தமுள்ள சேவையே தன்னை இந்த இயக்கத்திற்கு மிகவும் ஈர்த்ததாக அவர் கூறுகிறார்.

ஒரு சேவைக்காக கிராமப்புற பள்ளிக்குச் சென்றதை அவர் நினைவு கூர்ந்தார். அந்த நிகழ்வில் ரோட்டேரியன்கள் பள்ளி மாணவர்களுக்கு காலணிகள், புத்தகங்கள், சீருடைகளை வழங்கினர். ரோட்டேரியன்கள் அந்த நிகழ்வு மிக எளிமையானதாக இருக்கும் என்று கருதினர். ஆனால், ரோட்டேரியன் களுக்கு அங்கு இசை நிகழ்ச்சிகளுடன் வரவேற்பு காத்திருந்தது. ரோட்டரி ஜெய்ப்பூர் செயற்கைக் கால்கள் பயனாளிகளில் ஒருவரான பள்ளி முதல்வர் சுமிதா சாஹூ, ரோட்டேரியன்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்க கிராமத்து மக்களை அணி திரட்டியிருந்தார். “இந்த அனுபவம் ரோட்டரேயின் சேவை உண்மையான மற்றும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிற எனது நம்பிக்கையை வலுப்படுத்தியது.”

மாவட்டத்தில் தற்போது மொத்தம் 3,474 உறுப்பினர்கள் உள்ளனர். 100 உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு நிர்ணயித்த நிலையில் இதுவரை 80 புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இந்த ஆண்டு 28 புதிய ரோட்ராக்ட் சங்கங்களும் 50 புதிய இன்டாராக்ட் சங்கங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இன்டராக்ட் மற்றும் ரோட்ராக்ட் பட்டய உறுப்பினராக இருந்த அவர், இளைஞர்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருகிறார்.”ரோட்டரியின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் உள்ளது” என்பது அவரது ஆழ்ந்த நம்பிக்கை.

50,000 மரக்கன்றுகள் நடுதல், 5,000 யூனிட் இரத்தம் சேகரித்தல், தனிப்பட்ட சங்கங்களுக்கான வாராந்திர சேவை இலக்குகளை செயல்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய இலக்காக கொண்டுள்ளார். விழிப்புணர்வை மேம்படுத்தவும், சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் மாவட்ட DEI குழு மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## வீட்டு வசதி முதல் சுகாதார வசதி வரை

1996 முதல் ரோட்டேரியனாகவும், புனே வெஸ்ட் ரோட்டரி சங்க பட்டய உறுப்பினரின் மகனாவும் இருக்கும் மராத்தே, சிறுவயதிலிருந்தே சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகநலத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

RID 3131 நிகர உறுப்பினர் வளர்ச்சியை 430-ஆக பதிவு செய்துள்ளது. வளர்ச்சிக்கு தக்கவைத்தல் மற்றும் நிலையான விரிவாக்கத்தை மராத்தே வலியுறுத்துகிறார். ஒரே நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு தரமான உறுப்பினர்களை சங்கத்தில் சேர்வதை ஊக்குவிக்கிறார். “மெதுவாக பயணித்தாலும் வலுவாக இருங்கள்” என்பதுதான் சங்கத்தின் தலைவர்களுக்கு அவர் சொல்லும் சேதி.

பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (DEI) கோட்பாட்டின்படி திருநங்கைகளுக்காக ஒரு சிறிய சங்கத்தை தொடங்கியிருக்கிறார். உள்ளடக்க கொள்களை செயல்படுத்தும் கார்ப்பொரேட் நிறுவனங்களை அங்கீகரிக்கும் வகையில் DEI விருதையும் அவர் ஏற்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டுக்கான மாவட்டத்தின் மொத்த நன்கொடை இலக்கு $4 மில்லியன். பிரதம மந்திரி ஆவாஸ் யோசனா திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வீட்டு வசதி திட்டத்துக்கு சிஎஸ்ஆர் முன்முயற்சி மூலம் ஆஷியானா திட்டத்துக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அரசின் திட்டத்தின்கீழ் பயனாளிகள் ரூ.1.25 லட்சம் பெறுகிறார்கள் எனில், ரோட்டேரியன்கள் மற்றும் CSR கூட்டாளர்கள் கூடுதலாக ரூ.1.5 லட்சம் பங்களிப்புச் செய்கிறார்கள். வீடு கட்டி முடிப்பதற்கு உதவுகிறார்கள்.

மாவட்டத்தில் உள்ள இன்டராக்ட் சங்கங்கள் துடிப்புடன் செயல்பட்டு அர்த்தமுள்ள திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றன. நகர்ப்புறத்தில் ரோட்ராக்ட் சங்கங்கள் ஓரளவு நன்றாக செயல்பட்டு வந்தாலும், ஊரகப் பகுதிகளில் உள்ள ரோட்ராக்ட் சங்கங்கள் உறுப்பினர்கள் சேர்க்கை கட்டணத்தில் பாக்கி வைத்துள்ளதால் சவால்களை எதிர்கொள்கின்றன. இதனால் கிராமப்புறங்களில் பிரதிநிதித்துவம் குறைந்து வருகிறது. இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண கிராமப் புறங்களில் ரோட்டரி சமூகப் படைகளை வலுப்படுத்தில் மாவட்டம் கவனம் செலுத்தி வருகிறது.



**சந்தோஷ் மராத்தே**
IT ஆலோசனை நிறுவனம்
RC புனே வெஸ்ட்
RID 3131

## உறுப்பினர் சேர்க்கை மீது கவனம்



**அமர்சிங் புனெட்**
எலெக்ட்ரானிக்ஸ் ஆட்டோமேஷன்
RC பரூச், RID 3060

அமர்சிங் புனெட், தனது சார்ந்திருக்கும் பரூச் ரோட்டரி சங்கத்தின் சேவைகளால் ஈர்க்கப்பட்டு 2006-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். M I படேல் ரோட்டரி இளைஞர் மையத்திற்கு வழக்கமாக வந்து சென்றதாலும், சங்கத்தின் முன்னோடி திட்டம் சமூக தாக்கத்தை வெளிப்படுத்தியதால் உந்துதல் ஏற்பட்டு அவர் ரோட்டரிக்கு ஈர்க்கப்பட்டார்.


உறுப்பினர்கள் சேர்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் அவர், சங்கங்கள் 30 உறுப்பினர்களுக்கு குறையாமல் இருப்பதை உறுதி செய்யவும் வலியுறுத்துகிறார். மேலும் ரோட்டரி அமைப்பில் புதிய உறுப்பினர்களை உரிய நேரத்தில் பதிவு செய்வதையும் ஊக்குவிக்கிறார். ஆண்டுக்கு 10 முதல் 15 சதவீத உறுப்பினர் வளர்ச்சியை எதிர்பார்க்கிறார். சங்கத்தலைவர்கள் அதிக அளவில் பெண்கள் மற்றும் இளைஞர்களைச் சேர்க்கவும், புதிய சங்கங்களை ஆதரிக்கவும் வலியுறுத்துகிறார்.


புனெட் அதிகாரபூர்வ வருகைகளின் போது தனிப்பட்ட ஈடுபாட்டை வலியுறுத்துகிறார். “உறுப்பினர்களின் குறைகளை காது கொடுத்து கேட்கவும், பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காண்பதும் உறவுகளை வலுப்படுத்தும், நம்பிக்கையை ஏற்படுத்தும்” என்பது அவரது கருத்து. பன்முகத்தன்மை சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தின் அடிப்படையில் பாலினம், வயது மற்றும் தொழில் முழுவதும் சமநிலையான தலைமைத்துவ வாய்ப்புகளை வழங்க மாவட்டம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த ஆண்டின் முதன்மைத் திட்டங்களில் துக்கத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு கண்ணியத்தை உறுதி செய்வதற்காக இறந்தவர்களின் உடலை இறுதிச்சடங்கு வரை பதப்படுத்தி வைத்திருப்பதற்கான பெட்டியை (ஃபீரிஸர் பெட்டி) இலவசமாக வழங்குதல் மற்றும் நோயாளிகள் குறைந்த கட்டணத்தில் சிசிக்சை பெற சில குறிப்பிட்ட மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சை இயந்திரங்களை நிறுவுதல் ஆகியவை அடங்கும். கூட்டுத் திட்டங்கள், வழிகாட்டுதல், தலைமைத்துவ மேம்பாட்டு திட்டங்கள் மூலம் ரோட்ராக்ட் மற்றும் இன்டாரக்ட் சங்கங்களை வலுப்படுத்துவது மற்றும் இளைஞர் படையை கட்டமைப்பது ஆகிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

வருடாந்திர நன்கொடைக்கான வசூல்கள் சீரான முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு திட்டங்களும் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. சிறு சிறு சவால்கள் இருந்தபோதிலும், TRF பற்றிய தொடர் விழிப்புணர்வு உறுப்பினர்கள் நன்கொடை இலக்குகளை அடைவதில் தூண்டுதலாகவும் உறுதிப்பாட்டுடனும் வைத்திருக்கிறது. ■

# Membership & TRF contribution summary






*Membership figures as on February 1, 2026.
*TRF contribution figures as on January 31, 2026.

## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs : | 36,472 | Rotary members | : 1,157,397 |
| Rotaract clubs : | 9,378 | Rotaract members : | 144,104 |
| Interact clubs : | 19,130 | Interact members : | 440,151 |
| RCCs : | 14,309 | | As on February 20, 2026 |

# வளர்ந்து வரும் குப்பை அச்சுறுத்தல்: தீர்வின் ஒரு பகுதியாக இருங்கள்

Go Green

ப்ரீதி மெஹ்ரா

*நாட்டில் அதிகப்படியான கழிவுகள் சேகரிக்கப்படுவதையும், அதன் சுத்திகரிப்பு தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுவதையும் உறுதி செய்ய அரசாங்கத்தால் சமீபத்தில் புதிய விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மொத்தமாக கழிவுகளை உருவாக்குபவர்களும், குடிமக்களும் இனி பொறுப்புடன் செயல்பட வேண்டும்.*

நாட்டை பசுமையாகவும் குப்பையற்றதாகவும் மாற்றும் நோக்கில், கழிவு மேலாண்மைக்கான புதிய மற்றும் கடுமையான விதிகளை மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. ஏப்ரல் 1 முதல் அமல்படுத்தப்பட உள்ள திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள், 2026 என அறிவிக்கப் பட்டுள்ள இந்த விதிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுமையைக் குறைப்பதோடு, கழிவு களை உருவாக்கும் இடத்திலேயே மேலாண்மை செய்வதை ஊக்கு விக்கும். இதற்கான பொறுப்பு ஒவ்வொரு மொத்த கழிவு உருவாக்கு பவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

மொத்த கழிவு உருவாக்குபவர் என்பவர் யார்? எளிமையாகச் சொன்னால், நமது குடியிருப்புப் பகுதி, சமூகம், பணியிடம், பல்கலைக்கழகம், பள்ளிகள், நிறுவனங்கள், அரசு கட்டிடங்கள், தனியார் அலுவலகங்கள் அல்லது நமது பஞ்சாயத்து ஆகியவற்றை அரசாங்கம் இந்த வரையறையில் சேர்த்துள்ளது.

மொத்த கழிவு உருவாக்குபவரின் குப்பைக்கு பங்களிக்கும் ஒவ்வொரு தனிநபரின் மீதும் இப்பொறுப்பு இருக்கும். எனவே, உங்கள் அலுவலகக் குப்பைத் தொட்டியில் சிப்ஸ் பாக்கெட் அல்லது பிளாஸ்டிக் பாட்டிலைப் போடாத அளவுக்கு நீங்கள் அலட்சியமாக இருந்தாலோ, அல்லது வீட்டில் குப்பைகளைப் பிரிக்கத் தவறினாலோ, உங்கள் நடத்தைக்கு உங்கள் அலுவலக நிர்வாகம் அல்லது உங்கள் வீட்டு வசதி சங்கம் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். இதையொட்டி, உங்கள் “பசுமையற்ற” அணுகுமுறைக்காக அவர்கள் உங்களைக் கண்டிக்க நேரிடும், மேலும் விதிகளைப் பின்பற்றாத குடியிருப்பாளர்களைக் கூர்ந்து கவனிக்க நேரிடும்.

இருப்பினும், நல்ல செய்தி என்னவென்றால், இந்த வழிகாட்டுதல் களைப் பின்பற்றுவது தோன்றுவது போல கடினமானது அல்ல. இது மிகவும் எளிமையானது மற்றும் ஒரு ஒழுக்கமான பார்வை மட்டுமே இதற்குத் தேவை. நினைவில் கொள்ளுங்கள், இனிமேல் கழிவுகளை உருவாக்கும் இடத்திலேயே பிரிக்க தற்போதுள்ள இரண்டு வகைகளுக்குப் பதிலாக நான்கு கட்டாய வகைகள் இருக்கும். உங்கள் வீட்டில் ஏற்கனவே உள்ள பச்சை மற்றும் சிவப்பு நிறத் தொட்டிகளுடன் மேலும் இரண்டு கழிவுத் தொட்டிகளைச் சேர்க்கத் தயாராகுங்கள். மேலும், எந்தக் குப்பை எங்குச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் கற்பியுங்கள்.

பிரித்தெடுப்பதற்கான நான்கு வகைகள் பின்வருமாறு வரையறுக்கப் பட்டுள்ளன:

**ஈரக்கழிவு:** இது பழக்கமான பச்சை நிறத்தொட்டி, பொதுவாக மக்கும் கழிவுகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது. இதில் காய்கறி மற்றும் பழத் தோல்கள், பயன்படுத்திய தேயிலை மற்றும் காபி தூள், உணவுத்துண்டுகள் மற்றும் தோட்டக் கழிவுகள் என அனைத்து வகையான சமையலறை கழிவுகளும் அடங்கும்.

**உலர் கழிவு:** இது காகிதம், பிளாஸ்டிக், உலோகம், கண்ணாடி, மரம், ரப்பர் மற்றும் மறுசுழற்சி



செய்யக்கூடிய அனைத்துப் பொருட்களையும் உள்ளடக்கியது. இவை நீல நிறத் தொட்டியில் போடப்பட வேண்டும்.

**சுகாதாரக் கழிவு:** இது டயப்பர்கள், நாப்கின்கள் மற்றும் ஆணுறைகள் போன்ற சுகாதாரக் கழிவுகளுக்கான சிவப்பு நிறத் தொட்டியாகும்.

**சிறப்பு கவனிப்புக் கழிவு:** இது அபாயகரமான அனைத்து வீட்டுக் கழிவுகளுக்கான கருப்பு நிறத் தொட்டியாகும். இதில் பெயிண்ட் டப்பாக்கள், பல்புகள், டியூப் லைட்டுகள், ஒயர்கள், மருந்துகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பேட்டரிகள் அடங்கும்.

ஏப்ரல் மாதத்தில் புதிய விதிகள் அமலுக்கு வரும்போது, மொத்த கழிவு உருவாக்குபவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கும், நடைமுறையைச் சீரமைக்க அவர்கள் அதைத் தனிப்பட்ட குடிமக்களுக்குக் கைமாற்றுவார்கள்.

இனிமேல் மொத்த கழிவு உருவாக்குபவர்கள் கழிவுகளைச் சேகரிப்பதற்கும், அவற்றைக் கொண்டு செல்வதற்கும், அவை நிலையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மறுசுழற்சி செய்யப்படுவதை அல்லது சுத்திகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் பொறுப்பாவார்கள். அவர்கள் தங்கள் ஈரக்கழிவுகளைச் சேகரிக்கும் இடத்திலேயே சுத்திகரிக்க வேண்டும் அல்லது அவ்வாறு செய்ய இயலாதபோது மொத்த கழிவு உருவாக்குபவர் பொறுப்புச் சான்றிதழைப் பெற வேண்டும். விதிகள் மீறப்பட்டால், 'மாசுபடுத்துபவரே செலுத்துவார்' (polluter pays) என்ற கொள்கையின் அடிப்படையில் அபராத வடிவில் சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படும்.

விதிகள் கடுமையாக்கப்படுவதால், நீங்கள் சுற்றுப்பயணம் செல்லும்போது கூடுதல் செலவை ஏற்க வேண்டி யிருக்கும். சுற்றுச்சூழல் ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய இடங்களான மலைப்பிரதேசங்கள் அல்லது தீவுகளுக்கு நீங்கள் விடுமுறைக்குச் சென்றால், திடக்கழிவு மேலாண் மைக்காக உள்ளூர் அதிகாரிகளுக்கு நீங்கள் ஒரு வரியைச் செலுத்த வேண்டியிருக்கும். சுற்றுலாப் பயணிகள் குப்பைகளை விட்டுச் சென்று சுற்றுச்சூழலைச் சீரழிக்காமல் இருப்பதை உறுதி செய்யவும், நெரிசலைக் கட்டுப்படுத்தவும், சுற்றுலாப்பருவத்தில் ஒரு நாளைக்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக் கையையும் அவர்கள் கட்டுப் படுத்தலாம்.

நமது மலைகளும் கடற்கரைகளும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பைகளால் நிறைந்துள்ள நிலையில், இந்தச் சட்டம் மிகுந்த தீவிரத்துடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக, புதிய விதிகளின் கவனம் கழிவுகளைத் தடுப்பதிலும் குறைப்பதிலும் உள்ளது, அதைத் தொடர்ந்து மீண்டும் பயன்படுத்துதல், மறுசுழற்சி செய்தல், மீட்டெடுத்தல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகியவற்றில் உள்ளது.

எதிர்காலத்தில் நிலப்பரப்புக் கிடங்குகளில் மறுசுழற்சி செய்ய முடியாத, எரிசக்தி மீட்டெடுக்க முடியாத கழிவுகள் மட்டுமே கொட்டப் படும் என்பதுதான் நம்பிக்கை. மொத்த கழிவு உருவாக்குபவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய விஷயம் இதுதான் —பிரிக்கப்படாத கழிவுகளை நிலப்பரப்பிற்கு அனுப்புவதற்கு அவர்களிடம் மிக அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும்.

பிரிக்கப்படாத கழிவுகளுக்கான கட்டணம், கழிவுகளைப் பிரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் சுத்திகரிப்பதற்கான செலவை விட அதிகமாக இருக்கும். எனவே, ஒரு குடியிருப்போர் நலச் சங்கம் விதிகளைப் பின்பற்றாவிட்டால், அதன் நிதிச் செலவு மிகவும் அதிகமாக இருக்கும், இது இறுதியில் நம் ஒவ்வொருவரின் பராமரிப்புக் கட்டணத்தையும் அதிகரிக்கும்.

நமது குப்பைகளின் எதிர்காலம் பசுமையாக இருப்பதை உறுதி செய்யக் கூடுதலாகக் கடுமையான விதிமுறைகள் இருக்கலாம். நிகழ் நேரக் கண்காணிப்புக்காகவும், வலுவான தரவு உருவாக்கம் மற்றும் கண்காணிப்பை உறுதி செய்வதற்காகவும் ஒரு புதிய மத்திய போர்டல் அமைக்கப்பட உள்ளது. இருப்பினும், நாம் விதிகளைப் பின்பற்றி, மொத்தமாக கழிவுகளை உருவாக்குபவர்கள் தங்கள் பொறுப்பைத் தீவிரமாக எடுத்துக் கொண்டால், இந்தப் பிரச்சினையை நம்மால் குறைக்க முடியும்.

நாம் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை மிகைப் படுத்திக் கூற முடியாது. அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளின்படி, இந்தியா ஒரு நாளைக்குச் சுமார் 1,70,000 டன் நகராட்சி திடக் கழிவுகளை உருவாக்கு கிறது. இது ஆண்டுக்குச் சுமார் 62 மில்லியன் டன்களாக மாறுகிறது. இதில் தோராயமாகப் பாதி மட்டுமே அறிவியல் ரீதியாகச் சுத்திகரிக்கப் படுகிறது. 2030-ம் ஆண்டிற்குள் நகர்ப்புற இந்தியா மட்டும் ஆண்டுக்கு 165 மில்லியன் டன் கழிவுகளையும், 2050-ம் ஆண்டிற்குள் 436 மில்லியன் டன் கழிவுகளையும் உருவாக்கக்கூடும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

நகராட்சி திடக்கழிவுகளைப் பிரித்தல், மறுசுழற்சி செய்தல், சுத்திகரிப்பு, எரிசக்தி மீட்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அப்புறப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஒரு சட்டரீதியான கட்டமைப்பை வழங்குவது நீண்ட காலத் தேவையாக இருந்தது. எனவே, உலகைப் பசுமை யாகவும் தூய்மையாகவும் மாற்ற உங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்யுங்கள்!

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பறி எழுதி வருகிறார்.






## RID 3000

### RC சின்னமனூர்

சங்க உறுப்பினர்கள் நடத்திவரும் உணவு வழங்கல் திட்டத்தின்கீழ், தென் தமிழ்நாட்டிலுள்ள தேனி மாவட்டத்திலிருக்கும் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் TB நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு வழங்கப்பட்டது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3053

### RC பிவாடி

இந்த ஆண்டு 50 மாமோகிராஃபி முகாம்களைத் திட்டமிட்டுள்ள இந்தச் சங்கம் 22 புற்றுநோய்ப் பரிசோதனை முகாம்களை நடத்தியுள்ளது. இதுவரையிலான முகாம்களில் 7% கண்டறிதல் விகிதம் காணப்பட்டுள்ளது. இது முன்கூட்டியே பரிசோதித்தால் நேரத்துக்குச் சிகிச்சை அளிக்கலாம் என்று உணர்த்துகிறது.

## RID 3056

### RC ஸ்ரீ மாதோபூர் சன்ரைஸ்

75வது கண் புரைப் பரிசோதனை முகாமில் 86 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள், இதில் 40 பேர் ஜெய்ப்பூர் சங்கரா கண் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உணவு, உறைவிடம், போக்குவரத்தை இந்தச் சங்கம் வழங்கியது. மாவட்டப் பார்வையிழப்பைத் தடுத்தல் குழுவின் நிதி ஆதரவில் இந்தச் சங்கம் இதுவரை 2,249 அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளது.





## RID 3090

**RC சமனா**

ஷாயிஜ்பூர் குர்த் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு நாற்காலிகள், பாய்கள், மெத்தைகள் வழங்கும் விழாவில் தொகுதிக் கல்வி அலுவலர் குர்ப்ரீத் கோல்டி தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். சுமித் கோயல் ஆதரவளித்த இந்த முன்னெடுப்பைச் சங்கத்தலைவர் அருண் பன்சால் வழிநடத்தினார்.

## RID 3012

**RC டெல்லி ஷாஹ்தாரா**

ஜனக்புரி சர்வோதய கன்யா வித்யாலயா-வில் தில்லியின் கல்வி அமைச்சர் ஆஷிஷ் சூட் ஒரு நிபுண் சாலா-வைத் தொடங்கிவைத்தார். இந்த மையம் இந்த அமைச்சகத்தின் நிபுண் சங்கல்ப் யோஜனாத் திட்டத்தின்கீழ் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவை வளர்க்கும்.





## RID 3132

**ரோட்டரி ஈ-கிளப் எம்பவரிங் யூத்**

DG சுதீர் லடுரே சகாராம் மெஹ்த்ரெ பிராத்மிக் வித்யாலயா, கேசவ்ராவ் கடில்கர் உயர்நிலைப் பள்ளியில் ஃபோர்காஸ் இம்பெக்ஸின் CSR நிதியின் வழியாக இரண்டு புதிய வகுப்பறைகளைத் (ரூ 7 லட்சம்) தொடங்கிவைத்தார். இந்தச் சங்கம் இந்தப் பள்ளிகளில் இன்டராக்ட் சங்கங்களையும் தொடங்கியுள்ளது.

## RID 3120

**RC அலகாபாத் சவுத்**

உலக மாற்றுத் திறனாளிகள் நாளில் (டிசம்பர் 3) மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கான விளையாட்டு, ஓவியப் போட்டிகள் போன்றவை நடத்தப்பட்டன. பங்கேற்பாளர்களுக்குப் பரிசுகள், உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

# எங்களுக்குப் பிடித்த தாய்பெய் நினைவுச்சின்னங்கள்

*இந்த நினைவுச்சின்னங்கள் உங்கள் பெட்டிகளில் இடம் பிடிக்கட்டும்.*



Photographs: Courtesy of Getty images, Monica Eng, Rawpixel

Photo illustration by Madison Wisse

ஜூன் மாதம் ரோட்டரி இன்டர் நேஷனல் மாநாட்டுக்காக நீங்கள் தாய்பெய்க்கு வரும்போது, இந்த நகரத்தின் துடிப்பான "பழைய தெரு"க்களை ஆராயலாம், ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் சீனக் கலை மற்றும் பொருட்களைப் பார்க்கலாம், இரவுச் சந்தைகளில் நன்றாகச் சாப்பிடலாம். ஆனால், இவற்றை உங்கள் வீட்டுக்குக் கொண்டுசெல்ல இயலாது. நல்ல வேளையாக, இந்தத் தீவில் நீங்கள் தங்கியதை நினைவூட்டும் பல சிறந்த நினைவுச்சின்னங்களும் இங்கு உருவாக்கப்படுகின்றன. நீங்கள் இதுவரை பதிவு செய்ய வில்லை என்றால், மார்ச் 31 வரை முன்பதிவுத் தள்ளுபடியைப் பெறலாம். அதன்பிறகு, உங்கள் தைவான் நினைவுச்சின்ன வியூகத்தைத் திட்டமிடுவதற்கு எங்கள் வாங்குதல் கையேட்டைப் பாருங்கள்.

— மோனிகா என்ங்

### 1 தேநீர்

தாய்பெய்யில் நூற்றுக்கணக்கான தேநீர் நிலையங்கள், தேநீர்க் கடைகள், சந்தை விற்பனையாளர்கள் லைட், கிரீமி ஹை மவுன்டைன் அல்லது ஹனி-டோன்ட் ஓரியன்டல் பியூட்டி உள்ளிட்ட உள்ளூரில் விளைந்த ஊலாங் வகைகளை விற்கிறார்கள். அவ்வப்போது சில உரிமையாளர்கள் மகிழ்ச்சியளிக்கும் தேநீர்த் திருவிழாக் களையும் நடத்துகிறார்கள். இவற்றில் நீங்கள் இந்தத் தேநீர்களை முயன்று பார்த்துவிட்டு வாங்கலாம்.

### 2 அன்னாசிக் கேக்குகள்

எங்கும் காணப்படும் இந்தப் பேஸ்ட்ரிகள் இனிப்பான, புளிப்பான அன்னாசி ஜெல்லியால் நிரப்பப்பட்டு, ஷார்ட்ப்ரெட் போன்ற மாவால் மூடப்பட்டிருக்கின்றன. இவை உங்கள் ஊரிலுள்ள நண்பர்கள், உறவினர்களிடம் பகிர்ந்துகொள்ள ஏற்ற நினைவுச்சின்னங்கள். பல ஆசியப் பரிசுகளைப்போலவே, இந்தக் கேக்குகள் வெற்றி, நல்ல நேரத்தைப் பிரதிபலிக்கின்றன.

### 3 குவாய் குவாய் நொறுக்குத் தீனிகள்

இந்த மொறுமொறுவென்ற, தேங்காய்ச் சுவை கொண்ட பஃப்ஸ் மிதமான சுவையைக் கொண்டுள்ளது குவாய் குவாய் என்பது "நல்லவராக இரு" அல்லது "ஒழுங்காக நடந்துகொள்" எனப்தைப்போல் ஒலிக்கிறது.

### 4 புதிய தொழில்நுட்பம்

தொலைபேசிகளுக்கான துணைப் பொருட்கள், ஒலி, ஒளி உருவாக்கக் கருவிகள் எனப் பல புதிய, போக்கில் உள்ள தொழில்நுட்பப் பொருட்களை நீங்கள் இங்கு காணலாம். இவற்றை வாங்குவதற்கு ஏற்ற ஓர் இடம்: குவாங்ஹூவா டிஜிட்டல் பிளாசா.

### 5 பச்சைக்கல்

தைவானில் எல்லா இடங்களிலும் இந்த விலைமதிப்பு மிக்க கனிமத்தைக் கொண்டு செய்யப்பட்ட கலைப் பொருட்கள், நகைகளைக் காணலாம், தேசிய அரண்மனை

அருங்காட்சியகத்திலும்தான். இந்த அருங்காட்சியகத்தில் கிட்டத்தட்ட 700,000 பொருட்கள் உள்ளன. இங்கு வரும் பார்வையாளர்கள் பச்சை மற்றும் வெள்ளை ஜேடெய்ட் கொண்டு செதுக்கப்பட்ட சீன முட்டைக் கோஸைப் பார்க்கிறார்கள். இந்தக் கல்லுக்குக் குணப்படுத்துகின்ற, பாதுகாக்கின்ற பண்புகள் இருப்பதாகவும் சிலர் நம்புகிறார்கள்.

### 6 உலர்ந்த மூலிகைகள், பழங்கள், மிட்டாய்கள்

தாய்பெய்யில் மூலிகை மருந்துக் கலவைகள், உலர் பழங்கள், கொட்டைகளை விற்கும் கடைகள் நிறைந்துள்ளன. இவற்றை டடாவ்செங் பகுதியில் உள்ள தாய்பெய்யின் பழைய தெருக்களில் ஒன்றான டிஹுவாத் தெருவில் நடந்து பாருங்கள்.

### 7 காஜி பைகள்

இந்தப் புகழ் பெற்ற வலை வடிவப் பைகள் பல அளவுகளில் வருகின்றன.

### 8 டம்ப்ளிங் கருப்பொருளிலான பரிசுகள்

ஜியோ லாங் பௌ (சூப் டம்ப்ளிங்குகள்) சீனாவில் அறிமுகமானவை. தைவானைச் சேர்ந்த டின் டாய் ஃபங் என்ற சங்கிலி உணவகங்கள் இவற்றை உலகப் புகழ் பெறச்செய்தன. நீங்கள் வீட்டுக்குத் திரும்பிய பிறகும் இந்தச் சுவையான உணவுப்பொருளை நினைவுகூரலாம்.

### 9 அனிமெ பொம்மைகள்

மங்கா அல்லது அனிமெ பாத்திரங்களின் அடிப்படையிலான உருவங்களும் பொம்மைகளும் தாய்பெய் முழுவதும் கச்சபானிலும் (பொம்மை விற்கும் இயந்திரங்கள்), கடைகள், வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன. இவற்றின் சிறந்த தொகுப்பைத் தரைக்கு அடியில் அரை மைலுக்கு நீள்கிற தாய்பெய் நகர வணிக வளாகத்தில் காணலாம்.

தள்ளுபடிக் கட்டணத்துக்கு, மார்ச் 31-க்குள் பதிவு செய்யுங்கள். QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள், அல்லது *convention.rotary.org*-க்கு வாருங்கள்

©Rotary

---

# இந்தியா தலைமையிலான மண்டலத்தில் ரஷ்யா

RI இயக்குநர்கள் குழு, அதன் ஜனவரி 2026 கூட்டத்தில், ஆசியா, ஐரோப்பா/ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா விற்கான புதிய மண்டல அமைப்பை அங்கீகரித்துள்ளது. RI துணைத் தலைவர் அலைன் வான் டீ போயல் தலைமை யிலான மண்டல மதிப்பாய்வு வழிகாட்டுதல் குழுவால் இவை பரிந்துரைக்கப்பட்டது.

புதிய மறுசீரமைப்பின் கீழ், ரஷ்யா (RI மாவட்டம் 2223) இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு மாவட்டங்களுடன் மண்டலம் 8-ன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

**ஆசியாவிற்கான புதிய மண்டல அமைப்பு இங்கே.**

**Zone 4:** India (western): 3030, 3040, 3060, 3131, 3132, 3141, 3142, 3172

**Zone 5:** India (southern), Maldives, Sri Lanka: 2981, 2982, 3000, 3203, 3206, 3212, 3220, 3231, 3233, 3234

**Zone 6:** Bhutan, India (eastern and northeastern), Nepal: 3100, 3110, 3120, 3240, 3250, 3261, 3262, 3291, 3292

**Zone 7:** India (southern): 3020, 3150, 3160, 3171, 3181, 3182, 3191, 3192, 3204, 3205, 3211

**Zone 8:** India (north and northwest): 3011, 3012, 3053, 3055, 3056, 3070, 3080, 3090; Russia: 2223

ஒவ்வொரு ஆண்டும் RI இயக்குநர்கள் குழு புதிய மாவட்டங்களை உருவாக்குவது அல்லது மாவட்டங்களை இணைப்பது அல்லது மாவட்டங்களின் கோரிக்கைகளை ஏற்று மண்டலங்களை மாற்றுவது தொடர்பான முடிவுகளை எடுக்கும். மேலும் மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் தோராயமாக சம எண்ணிக்கையிலான ரோட்டேரியன்களைக் கொண்ட 34 மண்டலங்களாக பிரிக்கப்பட வேண்டும் என்கிற RI துணை விதிகளுக்கு இணங்க வாரியம் குறைந்தது எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு விரிவான மதிப்பீட்டை நடத்துகிறது. ரோட்டரியின் இயக்குநர்கள் குழு நமது பன்முகத்தன்மை மற்றும் உலகளாவிய உறுப்பினர்கள் சேர்க்கையை துல்லியமாக பிரதிபலிக்கிறது என்பதை உறுதிசெய்வதற்காக இது செய்யப்படுகிறது.

2025-ம் ஆண்டில், வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பிராந்திய பணிக்குழுக்கள் ஆசியா, ஐரோப்பா/ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவுக்கான மறுசீரமைப்பு திட்டங்களை தயாரித்தன. RI துணைத் தலைவர் அலைன் வான் டீ போயல் தலைமையிலான மண்டலங்கள் மறுஆய்வு வழிகாட்டுதல் குழு , அவற்றை ஒரு உலகளாவிய திட்டமாக ஒருங்கிணைத்தது. இந்த திட்டத்துக்கு வாரியம் ஏகமனதாக ஒப்புதல் அளித்தது.

வாரியம் 2026 ஏப்ரல் மாதம் நடைபெறும் கூட்டத்தில் பிரித்தல், இணைத்தல் மற்றும் சுழற்சி முறையிலான இயக்குநர் தேர்தல் உள்ளிட்ட விவகாரங்களைப் பரிசீலிக்கும். புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் இன்னும் வரவில்லை. ஆனால், ஏதேனும் கேள்விகள் இருந்தால் உறுப்பினர்கள் மண்டலங்கள் பட்டியலை பார்க்கவும் அல்லது *Zones@rotary.org; mailto:Zones@rotary.org* என்னும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும். புதிய மண்டலங்கள் பட்டியலைப் பார்க்க *https://my.rotary.org/en/my-rotary/rotary-international-zones* மின்னஞ்சலை அணுகவும்.

Rotary International

# நெஞ்சுவலி: பயம் என்ன, எப்படித் தடுக்கலாம்?

**கீதா மத்தாய்**

நெஞ்சுவலி என்பது பயமுறுத்தும், குறிப்பாக இடது பகுதியில் வலி வந்தால் அதிக பயமுறுத்தல் இருக்கும். குழந்தைகள் உள்பட நம் அனைவருக்கும் தெரியும் இதயம் அங்குதான் அமைந்திருக்கிறது என்று. இந்த பயம் குறிப்பாக நடுத்தர வயதினர் மற்றும் முதியவர்களிடத்தில் கிராஃபிக்ஸ் வரைபடங்கள் மூலம் வலுப்படுத்தப்படுகிறது. ஒரு நபர் கெட்ட செய்தியை கேள்விப்பட்டதும் நெஞ்சை பிடித்துக்கொள்வது, பக்கவாட்டில் சாய்வது, காற்றுக்காக மூச்சு விடுவது மற்றும் கீழே விழுந்து இறப்பது போன்றவற்றை நாம் ஊடகங்களில் பார்த்திருக்கலாம். ஒரு திரைப்படத்தில் இது பரவாயில்லை. ஆனால், நிஜவாழ்க்கையில் உங்களுக்கோ அல்லது உங்களது அன்புக்குரியவர்க்கோ இது நடக்கும்போது பயமாக இருக்கிறது.

மாரடைப்பு என்பது எந்த வயதிலும் ஏற்படலாம். ஆண்களில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களிடமும், பெண்களிடம் 55 வயதுக்கு மேற்பட்டவர்களிடமும் (மாதவிடாய் நின்ற பிறகு) மாரடைப்பு வரலாம். எனினும் இப்போது அவை இளைஞர்களிடமும் அதிகரித்து காணப்படுகிறது. மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் பாதிக்கும் மேலானவர்கள் 40 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் என்பது அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

நெஞ்சுவலி அல்லது மாரடைப்பு ஏற்பட்டால் அப்போது வலி அதிகமாகவும், நம்மை அழுத்துவது போலவும் இருக்கும். இதயத்தின் இடது பகுதியில்தான் அது வரவேண்டும் என்பது இல்லை. இது மார்பக எலும்பின் பின்னால் உணரப்படலாம் மற்றும் இடது கை , கழுத்து மற்றும் முதுகில் பரவக்கூடும். மேலும் சிலருக்கு வியர்வை மற்றும் தலைச்சுற்றல் இருக்கலாம். இது திடீரென உடற்பயிற்சி செய்தல், அல்லது அதிக வேலைச்சுமை அல்லது அதிக உணவை உட்கொள்வதன் மூலம் கூட ஏற்படலாம். பெண்களுக்கு எந்த வலியும் இருக்காது. ஆனால், அதற்கு பதிலாக விவரிக்க முடியாத சோர்வு, பதற்றம், குமட்டல் அல்லது தாடை, இடது கை அல்லது வலது பக்க கையில் வலி இருக்கலாம்.

இதய தசையின் ஒரு பகுதிக்கு இரத்தம் செல்வது குறைந்தால்



அல்லது தடுக்கப்பட்டால் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பை ஏற்படுத்தலாம். பல ஆண்டுகளாக கொழுப்புகள் படிந்து இதயத் தமனிக்கு இரத்தம் செல்வதை தடுக்கலாம். கொழுப்புகள் தகடுகள் போல் படிந்து இரத்தக் குழாயை தடுக்கலாம். இதனால் பாதிக்கப்பட்ட இதய தமனி பகுதியில் திசுக்கள் உருவாகி பயமுறுத்தலாம். இதயத்தில் உள்ள மின் சமிக்ஞைகள் அதன் திறமையான செயல்பாட்டுக்கு அவசியமானவை. ஆனால், செயல்பாடு தடைபட்டால், இதயத் துடிப்பு ஒழுங்கற்றதாக மாறலாம் அல்லது முற்றிலும் நின்றுவிடலாம்.

உடல் பருமன் உள்ளவர்கள் (அவர்கள் இளம் வயதினராக இருந்தாலும்) மற்றும் செயலற்று இருப்பவர்கள் (பெரும்பாலும் இவர்கள் விடியோ கேம் விளையாடுவதையே பொழுதுபோக்காக கொண்டிருப் பவர்கள்), புகையிலையை பயன்படுத்துவோர், நீரிழிவு நோயாளிகள் அல்லது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அல்லது மாரடைப்பை குடும்ப வரலாற்றில் கொண்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

வாரத்திற்கு 150 நிமிடங்கள் உடம்பை வளைத்து உடற்பயிற்சி செய்பவர்கள், சுறுசுறுப்பாக இருப்பவர்கள் இதயத்தில் திறமையான இணை சுழற்சியை உருவாக்குகிறார்கள். இது தமனியில் (இரத்த நாளங்களில்) பெரிய அடைப்பு ஏற்படாமல் தவிர்க்கும்.

நெஞ்சுவலியை நாம் சாதாரணமாக கருதிவிடக்கூடாது. நெஞ்சுவலி ஏற்பட்டால் உடனே, 375 மில்லி கிராம் திறன் கொண்ட ஒரு ஆஸ்பிரின் மாத்திரை அல்லது 75 மில்லி கிராம் மாத்திரைகள் நான்கு எடுத்துக் கொண்டு அதை தண்ணீர் கரைத்து விழுங்க வேண்டும். அதன் பின்னர் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். இந்த அவசர சிகிச்சை மூலம் நீங்கள் ஒரு உயிரை காப்பாற்றலாம்.

நெஞ்சில் அல்லது மார்பில் ஏற்படும் வலியை மதிப்பிடுதற்கு ECG (எலெக்ட்ரோகார்டியோகிராம்), மார்பு பகுதி எக்ஸ்ரே மற்றும் இதய தசைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பை அளவிட ட்ரோபோனின், கிரியாட்டின் கைனெஸ், மற்றும் சீரம் மையோகுளோபின் உள்ளிட்ட பரிசோதனைகள் தேவைப்படுகின்றன. காலப் போக்கில் ஏற்படும் மாற்றங்களை சரிபார்க்கவும் இந்த பரிசோதனைகள் மீண்டும் நடத்தப்படலாம். இதைத் தொடர்ந்து ஒருவருக்கு மாரடைப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள CT மற்றும் MRI ஸ்கேன் பரிசோதனைகளும் தேவைப்படலாம். ஆஞ்சியோகிராம் பரிசோதனை மூலம் அடைப்பு இருக்கும் இடத்தை கண்டறிய முடியும். அதே நேரத்தில் அடைப்பை தவிர்க்க “ஸ்டென்ட்” பொருத்தப்படலாம்.

நெஞ்சில் வலி ஏற்படும் போதெல்லாம் அது மாரடைப்பாக இருக்குமோ என நினைக்க வேண்டாம். கிட்டத்தட்ட அவசர சிகிச்சைக்கு வருபவர்களில் 30 சதவீதம் பேருக்கு இதயநோய் வருவதில்லை. இதயத் தசைகளில் உள்ள சுவர்களில் திடீர் மாற்றம், சில உள்கட்டமைப்புகளில் மோசமான அசைவுகள் காரணமாக வலி ஏற்பட்டு மாரடைப்பை பிரதி பலிக்கலாம். நெஞ்சக சுவரின் மூட்டுகள், மற்றும் விலா எலும்புகள் மற்றும் குருத்தெலும்புகள் சந்திக்கும் இடங்களில் இந்த வலி உருவாகலாம். ஹெர்பஸ் வைரல் தொற்றும் நெஞ்சுவலிக்கு காரணமாகலாம். இது சில சமயங்களில் இதயத்தின் சுவர் பகுதியில் அக்கி போல் உருவாகி கடும் வலியை ஏற்படுத்தும். மேலும் நிமோனியா மற்றும் இதர நுரையீரல் தொற்றுகள், நுரையீரலை பாதிக்கும் நோய்கள் அல்லது நுரையீரல் கட்டிகள்கூட நெஞ்சுவலியை ஏற்படுத்தலாம். மார்பு எலும்புக்குப் பின்னால் அமைந்துள்ள உணவுக்குழாய் சரிவர செயல்படாமல் இதயம் தொடர்பில்லாத ஒருவித வலியை ஏற்படுத்தும்.

வலி சாதாரணமாக இல்லாமல், நமது செயல்பாடு காரணமாக அழுத்தம் அல்லது இறுக்கம் காரணமாகவும், மூச்சுத் திணறல், தலைச்சுற்றல், வியர்வை, குமட்டல் ஆகியவையும் இருந்தால் அது மாரடைப்பாக கருதப்பட்டு அவசர மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

அதேநேரத்தில் மார்புச் சுவரில் அழுத்தம் காரணமாக மீண்டும் மீண்டும் வலியை ஏற்படுத்தினால், அது இதயம் சாராத மார்பு வலியாக இருக்க வாய்ப்புள்ளது. அப்படியிருந்தாலும் ஆஸ்பிரின் மாத்திரை போட்டுக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்வது பாதுகாப்பானது. இதனால் பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள் நோயாளியை மதிப்பீடு செய்து நோய் கண்டறிய முடியும்.

இதயம் தொடர்பில்லாத மார்பு வலிக்கு முக்கிய காரணம் மன அழுத்தம் மற்றும் பதற்றம்தான். இந்தப் பிரச்னை கவனிக்கப்படாவிட்டால், அந்த நபர் திருப்தியற்ற நிலையில் மீண்டும் மீண்டும் மருத்துவமனைக்கு வர நேரிடலாம்.

**நீங்கள் ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க:**

- வாரத்திற்கு 150 நிமிடங்கள் உடலை வளைத்து உடற்பயிற்சி செய்யுங்கள் மற்றும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
- உடல் எடையை சீராக வைத்திருங்கள் (எடையை உயரத்தால் சதுர மீட்டரில் வகுத்து அதை 23-ல் பெருக்குங்கள்).
- புகையிலை பயன்பாட்டை தவிர்க்கவும். புகைப்பிடிக்காதீர்கள், புகையை உள்ளிழுக்காதீர்கள்.
- செயற்கையான கொழுப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளை தவிர்த்து விடுங்கள்.
- நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் கொழுப்பின் அளவுகளை கட்டுக்குள் வைத்திருங்கள்.
- மருந்து, மாத்திரைகளை வேளை தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள். பண்டிகை நாட்கள் அல்லது விருந்து நிகழ்ச்சிகளின்போதும் அல்லது ஆரோக்கியமாக இருப்பதாக கருதி மருந்து, மாத்திரை சாப்பிடுவதை தவிர்த்து விடாதீர்கள்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## பறவைகளின் நலனுக்காக ஒரு மாரத்தான்

பறவைகளைப் பாதுகாக்கவேண்டிய தேவையைப்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக RC மேட்டூர் டேம் சிட்டி, RID 2982, நடத்திய மாரத்தானில் சுமார் 3,600 பேர் ஓடினார்கள். இந்த நிகழ்வு 200-க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் வாழ்கிற, தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டத்திலிருக்கும் பண்ணவாடி பகுதிகளில் கவனம் செலுத்தியது.

DG P சிவசுந்தரம் பண்ணைப் பறவைகளின் சுற்றுச்சூழலைப்பற்றிக் கற்றல் என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டார். சின்னப்பள்ளம் கிராமத்திலுள்ள சகாய அன்னை இல்லம் என்ற ஆதரவற்றோர் இல்லத்தில் மேட்டூர் இந்தியப் பல் மருத்துவ அமைப்பின் ஆதரவுடன் வாய்த் தூய்மை முகாம் நடத்தப்பட்டது. குழந்தைகளுக்குப் பற்பசைகள், பல் தேய்க்கும் பிரஷ்கள், எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.




## ஜாம்நகரில் கை, கால் பொருத்தல் முகாம்

RC ஜாம்நகர், RID 3060, நடத்திய செயற்கைக்கால் பொறுத்தும் முகாமில் சுமார் 40 பேர் பயன் பெற்றார்கள். பாவ் நகரிலுள்ள, காது கேளாதோருக்கான K L அமைப்பு, அலங்க் ஆட்டோ அன்ட் எஞ்சினியரிங், ராஜ்ஹன்ஸ் மெட்டல்ஸ் மற்றும் ஆல்ஃபா ஆட்டோமேஷன் இந்த முகாமை ஆதரித்தனர்.

மருத்துவர் ஒருவர் பலன் பெறுவோரின் நலத்தையும், அவருடைய மீதமுள்ள உடற்பகுதியில் செயற்கை உறுப்பைப் பொருத்தலாமா என்பதையும் பரிசோதித்தார். செயற்கை உறுப்பு வல்லுனர் ஒருவர் உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் அவருக்கு உதவினார்கள்.



*ஒரு மாற்றுத்திறனாளிக்கு செயற்கைக்கால் பொருத்தப்படுகிறது.*

## வேலூர் பள்ளியில் நடனச்சாதனை

1,105 குழந்தைகளைத் தொடர்ந்து 15 நிமிடங்களுக்குப் பரதநாட்டியம் ஆடச் செய்ததன் மூலம் ஆஸ்கர்ஸ் சாதனைகள் புத்தகத்தில் நுழைந்தது RI மாவட்டம் 3231.

இந்த நிகழ்ச்சி UNDPன் வளங்குன்றா வளர்ச்சி இலக்கு-3ஐ முன்னிறுத்துவதற்காக வேலூர் VVNKM உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பேசிய DG V சுரேஷ் "இந்தச் சாதனை இளைஞர் வளர்ச்சி, பண்பாட்டைப் பாதுகாத்தலுக்காக ரோட்டரி தன்னை ஒப்படைத்துக்கொண்டிருப்பதன் ஆற்றலைக் காண்பிக்கிறது" என்றார்.

இந்த நடன நிகழ்ச்சியை ஆஸ்கார்ஸ் விருதுகள் புத்தகத்தின் ஒருங்கிணைப்பாளரான R புவனேஷ்வரி, RID 3231-ன் முன்னாள் ஆளுநர்கள், அலுவல் பொறுப்பாளர்கள் பார்த்தனர்.



## புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வெள்ள உதவிப்பொதிகள்




RID 3234 DG *வினோத் சரோகி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரேஷன் கிட்களை விநியோகிக்கிறார், அவருக்கு வலதுபுறம்* RC *நங்கநல்லூர் எலைட் தலைவர்* V S *கோபாலகிருஷ்ணன் இருக்கிறார்.*

ஃப்யூச்சர் இந்தியா அறக்கட்டளையுடன் இணைந்து, சென்னையிலுள்ள பெருங்குடியில், டிட்வாப் புயல் உதவிப் பணிகளின்கீழ் 120 குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்களை வழங்கியது RC நங்கநல்லூர் எலைட், RID 3234.

ஒவ்வொரு பொதியிலும் 5 கிலோ அரிசு, 500 கிராம் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், சீரகம், கடுகு, கோதுமை மாவுப் பொட்டலங்கள், துவரம்பருப்பு, உப்புப் பொட்டலம் ஆகியவை இருந்தன. இவற்றின் மதிப்பு ரூ.600. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.75,000. இந்தப் பொதிகள் பெருங்குடியிலுள்ள அன்புச்சோலை மூத்த குடிமக்கள் பகல்நேரப் பராமரிப்பு மையத்திலும், சைதாப்பேட்டையிலுள்ள அரசு மாதிரிப் பள்ளியிலும் வழங்கப்பட்டன. ■


# உண்மையில் ஜின்னாக்கள் யார்?

*வரலாற்றுப் பாடப்புத்தகங்களின் பிம்பங்களுக்குப் பின்னால் மறைந்துபோன மனிதர்களை நமக்கு அறிமுகப்படுத்தும் இரண்டு புத்தகங்களில் அவர்களைப் பற்றிப் படியுங்கள். வாழ்ந்த, நேசித்த, சுவாசித்த, போராடிய மனிதர்கள் அவர்கள்...*



சந்தியா ராவ்


பாகிஸ்தானை உருவாக்கிய முகமது அலி ஜின்னாவைத் திருமணம் செய்து கொண்டபோது, ரத்தன்பாய் ருட்டி பெட்டிட்டிற்கு 18 வயதுதான் ஆகியிருந்தது; ஜின்னா அவரை விட 24 வயது மூத்தவர். தீவிர பிரம்மச்சாரி என்று அறியப்பட்ட (அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே திருமணமாகி, இளம் மனைவி ஆரம்பத்திலேயே இறந்துவிட்டார்), வெற்றிகரமான வழக்கறிஞரும், நேர்மையான தேசியவாதியுமான ஜின்னா, பம்பாயின் பார்சி சமூகத்தின் முக்கிய புள்ளியான சர் தின்ஷா பெட்டிட்டின் அழகான, துடிப்பான, காதலில் பித்தாகியிருந்த ஒரே மகளுடன் திடீரென ஓடிப்போய் மணம் முடித்தபோது பெரும் குழப்பம் வெடித்தது. ஒரு பார்சி பெண் ஒரு முகமதியரை மணப்பதா, அதுவும் தனது சமூகத்திற்கு வெளியே? இது கேள்விப்படாத ஒன்று; முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆனால் ருட்டி எந்த மிரட்டலுக்கும் பணிய மறுத்தபோது, தின்ஷா பெட்டிட், ஜின்னா தனது மகளின் சொத்தின் மீது ஆசைப்பட்டு அவளைக் கடத்திச் சென்றுவிட்டதாக வழக்குப்பதிவு செய்தார். ருட்டி என்ன செய்தார்? நீதிபதியின் முன் நின்று, தனது தந்தையை அவர் ஓடிப்போனதை விடவும் அதிகமாகக் காயப்படுத்தும் ஒரு துணிச்சலான மீறலுடன், ஜின்னாவைப் பாதுகாக்க முன்வந்தார். தனது ஜே மீது அவர் கொண்டிருந்த தீவிரப் பாதுகாப்பு உணர்வுடன், “ஐயா, மிஸ்டர் ஜின்னா என்னைக் கடத்தவில்லை; உண்மையில், நான் தான் அவரைக் கடத்தினேன்,” என்று கூறினார். இவ்வளவு நாடகத்துடன் தொடங்கிய இந்தத் தம்பதியரின் வாழ்க்கை, வெறும் 11 ஆண்டுகளுக்குப் பிறகு, ருட்டி தனது 29-வது பிறந்தநாளில் மருந்தின் அதிகப்படியான அளவு காரணமாக உயிரிழந்தபோது சோகத்தில் முடிந்தது. அவர்களின் திருமண வாழ்க்கையில் பல பதற்றங்கள் இருந்தபோதிலும், ஜின்னா இதனால் மனமுடைந்து போனார். வெளிப்படையாக அமைதியாக தெரிந்தாலும், உள்ளுக்குள் வருந்திய அவர், பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நண்பரின் மனைவியிடம், “அவள் ஒரு குழந்தை, நான் அவளைத் திருமணம் செய்திருக்கக் கூடாது. தவறு என்னுடையதுதான்.” என ஒப்புக் கொண்டார்.




பிரபல பத்திரிகையாளர் ஷீலா ரெட்டி இவர்களது கதையை “மிஸ்டர் அண்ட் மிஸஸ் ஜின்னா: தி மேரேஜ் தட் ஷூக் இந்தியா” என்ற புத்தகத்தில் கூறுகிறார். சாம் டால்ரிம்பிள் ஒரு நேர்காணலில் இதைக் குறிப்பிட்டிருக்காவிட்டால் நான் இந்தப் புத்தகத்தைத் தவற விட்டிருப்பேன். வாசகர்களுக்குப் புரியும்படிச் சொல்வதானால், இவர்களது மகள் தீனா (பெற்றோர்கள் வேறு காரியங்களில் மூழ்கியிருந்ததால் நீண்ட காலம் பெயரிடப்படாமல் இருந்து, ஒன்பது வயதில் தனது பாட்டியின் பெயரைத் தனக்குத்தானே சூட்டிக்கொண்டவர்) நெவில் வாடியா என்ற தொழிலதிபரை மணந்தார். ஜவுளி, விமான போக்குவரத்து எனப் பல துறைகளில் தடம் பதித்துள்ள வாடியா குழுமத்தின் நிறுவனரான இவரது குடும்பம், இன்றும் இந்தியாவின் வணிக உலகில் வலுவாக நிலைபெற்றுள்ளது.

ருட்டி, சரோஜினி நாயுடு மற்றும் அவரது மகள் பத்மஜா நாயுடு ஆகியோர் எழுதிய தனிப்பட்ட கடிதங்களை அடிப்படையாகக் கொண்டும், பல்வேறு ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டும், ஷீலா ரெட்டி இந்தியாவையே உலுக்கிய திருமணத்தை பற்றி மட்டுமல்லாமல், அன்றைய சமூக புரளி (ஜின்னாவின் வார்த்தை) மற்றும் அரசியல் சூழலையும் ஒரு நெருக்கமான சித்திரமாகத் தீட்டியுள்ளார். ஜின்னா எழுதிய கடிதங்கள் எதுவும் இதுவரை வெளிச்சத்திற்கு வரவில்லை என்பது ஒரு பெரிய குறையாக இருந்தாலும், புத்தகத்தின் எழுத்து நடை மிகவும் தடையற்றதாகவும் தெளிவாகவும் இருப்பதால் அந்த இடைவெளி உணரப்படவில்லை. இந்தப் புத்தகம் அடிப்படையில் ஒரு காதல் கதை; அதே சமயம், காலனித்துவ ஆட்சியில் சிக்கியிருந்த மக்களிடையே சுதந்திரம் மற்றும் தேசியம் பற்றிய கருத்துக்கள் எழத் தொடங்கிய காலத்தின் கதையும் கூட. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒளியும் மங்கத் தொடங்கியிருந்தது. எனவே, மோதிலால் நேரு, மகாத்மா காந்தி, அலி சகோதரர்கள் போன்ற பல ஆளுமைகளின் சுவாரஸ்யமான

பக்கங்களையும் இதில் காண்கிறோம். சரோஜினி நாயுடுவும் அவரது குழந்தைகளும் இந்தக் கதையில் முக்கிய இடம் பெறுகின்றனர். சரோஜினி நாயுடு ஜின்னாவின் மீது பெரும் மதிப்புக் கொண்டவர் மற்றும் ருட்டிக்கு நெருக்கமான ஆலோசகராக இருந்தார்; அவரது மகள்கள் ருட்டியுடன் நெருக்கமாக இருந்து, ஒருவருக்கொருவர் அடிக்கடி கடிதங்கள் எழுதிக் கொண்டனர்.



ஏப்ரல் 1, 2017 தேதியிட்ட தி ஹிந்து நாளிதழில் கிரண் தோஷி தனது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளபடி, சரோஜினி நாயுடுவின் மகள்களான பத்மஜா மற்றும் லீலாமணி நாயுடு ஆகியோரால் பாதுகாக்கப்பட்ட தனிப்பட்ட கடிதங்களை ஆசிரியர் தற்செயலாகக் கண்டெடுத்ததே இந்தப் புத்தகம் உருவானதற்குக் காரணம். அந்தக் கடிதங்களே ஒரு சுவாரஸ்யமான சிறு புத்தகமாக அமைந்திருக்கக் கூடும், ஆனால் ஆசிரியர் அவற்றை அன்றைய காலத்தின் அரசியல் மற்றும் சமூகச் சூழல்களுடனும், கடிதங்கள் குறித்த தனது சொந்த விளக்கங்களுடனும் இணைத்து ஒரு முழுமையான புத்தகமாக மாற்றியுள்ளார் என்று அவர் கூறுகிறார். இதன் முடிவு, ஒரு பழைய மதுவாக இருந்தாலும், கடைசித் துளி வரை குடித்து முடிக்கும் வரை கீழே வைக்க முடியாத ஒரு போதை தரும் கலவையாக உள்ளது.

கிரண் தோஷி இதைக் கூறுவதில் ஆச்சரியமில்லை, ஏனென்றால் அவரே 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவைப் பின்னணியாகக் கொண்டு, அதே ஆளுமைகளையும் நிஜ வாழ்க்கையால் ஈர்க்கப்பட்ட சில கற்பனைக் கதாபாத்திரங்களையும் உள்ளடக்கிய ஒரு அற்புதமான வரலாற்றுப் புனைவை எழுதியுள்ளார். "மிஸ்டர் அண்ட் மிஸஸ் ஜின்னா" புத்தகத்தின் சில பக்கங்களைப் படித்த போதுதான் எனக்குள் ஒன்று உதித்தது: எனது அலமாரியில் ஜின்னாவைப் பற்றிய ஒரு புத்தகம் இல்லையா? ஆம், கிரண் தோஷி எழுதிய "ஜின்னா ஆபன் கேம் டு அவர் ஹவுஸ்"! அந்தப் புத்தகம் 2016-ல் தி ஹிந்து லிட் ஃபார் லைஃப் விருதை வென்றது என்பதைப் பின்னர் தான் கண்டறிந்தேன். இந்த அற்புதமான புத்தகம் 10 ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் எனது அலமாரியில் இருந்தது! நான் எவ்வளவு பெரிய முட்டாள்.

"ஜின்னா ஆபன் கேம் டு அவர் ஹவுஸ்" நாவல் 1904-ல் தொடங்கி 1948-ல் முடிகிறது. இது மற்றொரு திருமணத்தின் கதையைச் சொல்கிறது – லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பி, வசதியான குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் சுல்தான் குவைஷி மற்றும் அழகும் அறிவும் கலந்த ரேஹானா ஆகியோரின் கதை. சுல்தான், சட்ட வட்டாரங்களில் பிரபலமானவரும், இந்திய தேசிய காங்கிரஸின் வளர்ந்து வரும் நட்சத்திரமுமான முகமது அலி ஜின்னாவைச் சந்தித்து நண்பராகிறார். அவர்களது கதையும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியிலேயே விரிகிறது. சுல்தான், சட்டப் போட்டியில் ஜின்னாவை வெல்வது மற்றும் தனது செல்வத்தைப் பெருக்குவது தவிர மற்றவற்றில் அக்கறையற்றவராக இருக்கிறார். ஆனால் ரேஹானா சுதந்திரப் போராட்டம், பெண் விடுதலை மற்றும் கல்வி போன்ற விஷயங்களில் ஈர்க்கப்பட்டு, காந்தியடிகளின் தீவிரப் பின்பற்றாளராக மாறுகிறார்.

இதற்கிடையில், வாழ்க்கை அதன் போக்கில் நகர்கிறது. கிலாபத் இயக்கம், ஜாலியன்வாலா பாக் படுகொலை, அரசியல் சூழ்ச்சிகள் போன்ற முக்கிய நிகழ்வுகள் நடக்கின்றன; அதே நேரத்தில் மக்களின் வாழ்வில் காதல் மற்றும் துரோகங்களும் நிகழ்கின்றன. வரலாற்றில் எதுவும் நடக்காதது போன்ற நீண்ட கால இடைவெளிகளும் உண்டு; வரலாற்றுப் புத்தகங்கள் நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக உடனுக்குடன் நடப்பது போன்ற பிம்பத்தைத் தந்தாலும், காலம் இப்படித்தான் நிதானமாக ஓடுகிறது என்பதை நாம் உணர்கிறோம். ஜின்னா இந்தக் கதையில் ஒரு முக்கியமான பாத்திரம், சுல்தான் மற்றும் ரேஹானாவின் நண்பராகவும், ரேஹானாவின் கல்விப்பணிகளுக்கு ஆதரவாளராகவும் இருக்கிறார். இறுதியில் சுதந்திரம் கிடைக்கிறது; பாகிஸ்தான் பிறக்கிறது.

இந்தப் புத்தகமும் மிகவும் உருக்கமாக முடிகிறது: "தொலைதூர நிலத்தில் ஒரு பள்ளியின் முன்னாள் அறங்காவலரான ஜின்னா காலமான போது, அந்தப்பள்ளி சிறுமிகள் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள். ஒரு வெப்பமான செப்டம்பர் நாளில், பாலைவனச் சாலையில் நின்றுபோன ஒரு ஆம்புலன்சில், முகத்தில் மொய்க்கும் ஈக்களை ஒரு காகிதத்தால் விரட்டப் போராடிய தனது சகோதரி பாத்திமாவைத் தவிர யாரும் அருகில் இல்லாத நிலையில் அவர் உயிர் பிரிந்ததாகச் செய்திகள் கூறின. பாட்டி, உங்களுக்கு இந்த ஜின்னாவைத் தெரியுமா? என்று இரவு உணவின் போது மீரா ரேஹானாவிடம் கேட்டாள். ஆமாம் கண்ணே, மிக நீண்ட காலத்திற்கு முன்பு, அவர் அடிக்கடி நமது வீட்டிற்கு வருவார்," என்றாள் ரேஹானா.

ஏப்ரல் 2, 2017 நாளிதழில் வெளியான ஒரு நேர்காணலில் ஷீலா ரெட்டி ஒரு முக்கியமான கருத்தைப் பகிர்ந்துள்ளார்: "மற்ற தம்பதியினரும் தங்கள் கடமைகளில் கவனக்குறைவாகவே இருந்தனர், அவர்களின் திருமண வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. ஆனால் ஜின்னா தம்பதியினரைப் போல அது அவர்களை அழித்துவிடவில்லை. காந்தியின் இயக்கம் மற்றவர்களின் வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும் அர்த்தத்தையும் கொடுத்தது, அது அவர்களின் தனிப்பட்ட தியாகங்களை ஈடுகட்டியது என்று நான் நினைக்கிறேன்." நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கையை அன்புடன் மீண்டும் திரும்பிப் பார்க்கும் போது, இது நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

*கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.*



## RID 3141

### RC மும்பை டாஹிசர்

81 ஏழை மாணவர்களுடைய வகுப்பறைக் கற்றலை மேம்படுத்த மடிக்கணினிகள் கொடையளிக்கப்பட்டன. RC-கள் மிரா ரோட், வசாய் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு ராஜேந்திரன் உன்னிகிருஷ்ணன் தலைமையிலான திட்டக் குழு பணியாற்றியது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3182

### RC சிமோகா ஜூபிளீ

ஜில்லா ஆயுஷ் துறையுடன் இணைந்து நடத்திய நலப் பராமரிப்பு நிகழ்வில் 75 பங்கேற்பாளர்களுக்கு நலப் பொதிகள் வழங்கப்பட்டன. மருத்துவ அலுவலர் டாக்டர் S சுந்தரேஷ், பேரிடர் மேலாண்மைப் பயிற்சியாளர் டாக்டர் V L S குமார் வழக்கமான உடற்பயிற்சி, நேர்ச் சிந்தனை, தடுப்புப் பராமரிப்பு, நலமான உணவைப்பற்றிப் பேசினார்கள்.

## RID 3203

### RC அவினாசி நெக்ஸ்ட் ஜெனரேஷன்

இந்தச் சங்கத்தின் முதல் GG திட்டத்தின் ($46,000) வழியாக, மாதேஸ்வரி டயாலிசிஸ் மையத்தில் DG B தனசேகர், IPDG சுரேஷ் பாபு 5 இயந்திரங்களைத் தொடங்கிவைத்தார்கள். இதன் பன்னாட்டுக் கூட்டாளர், RC வ்யாங் டுக்கெராஹ், RID 9685, ஆஸ்திரேலியா.





## RID 3205

**RC திருப்பனித்துரா ராயல்**

MP ஹீபி ஈடென், DG G N ரமேஷ் தொடங்கிவைத்த விஸ்மய் ரன் என்ற 5 கிமீ மாரத்தானில் வகை 1 நீரிழிவு கொண்ட சுமார் 1,500 பெண்கள், 250க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர். உலகைச் சுற்றிவந்த Lt Col தில்னா, ரூபா பெருமைப்படுத்தப்பட்டார்கள்.

## RID 3170

**RC கர்கோரெம்-சன்வர்டெம்**

பல நிகழ்ச்சிகளுடன் பண்பாடு, இசை, உடற்தகுதி, சேவையைக் காட்சிப்படுத்திய ரோட்டரி ஃபியஸ்டா 2025 என்ற இரண்டு வாரத் திருவிழா எல்லா வயது, பின்னணி மக்களையும் ஈர்த்தது.



## RID 3240

**RC பர்ட்வான் சவுத்**

பர்ட்வான் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற HLA தட்டச்சிடல் முகாமில் 120 தலசீமியா நோயாளிகள் உள்படச் சுமார் 500 பேர் பலன் பெற்றார்கள். மும்பை கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனையைச் சேர்ந்த இரத்த மச்சை மாற்று வல்லுனர்கள் நோயாளிகளைப் பரிசோதித்தார்கள், மும்பை தலசீமியா அலகு அறக்கட்டளையின் பெற்றோர் சங்கம் இவர்களுக்கு உதவியது.




## RID 3231

**RC பள்ளிகொண்டா**

கிராமப்புற, ஏழைச் சமூகங்களுக்கான கண் பரிசோதனை முகாமில் 400 பேருக்குப் பார்வைக் குறைபாட்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. கிராமத்து மக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், பள்ளி ஆசிரியர்கள் ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்





# நினைவுக்குறிப்புகள் பிரசுரிக்கப்பட்டவை மற்றும் பிரசுரிக்கப்படாதவை

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

கடந்த டிசம்பர் மாதம், வீட்டில் உள்ள பல்வேறு பொருட்களை ஆண்டுதோறும் சுத்தம் செய்யும் ஒரு பகுதியாக தரை முழுவதும் குவிந்து கிடக்கும் புத்தகங்களில் சிலவற்றை யாருக்காவது கொடுத்துவிடுமாறு என் மனைவி எனக்கு உத்தரவிட்டார். “எத்தனை புத்தகங்கள்?” என்று நான் கேட்டேன். “நினைவுக் குறிப்பு புத்தகங்களில் இருந்து தொடங்குங்கள்,” என்றார் அவர்.

அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்று எனக்குத் தெரியும். 25 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கட்டுரையில், முன்னாள் அரசு உயர் அதிகாரிகள் போதுமான அளவு தங்கள் நினைவுக் குறிப்புகளை எழுதுவதில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம் என்று எழுதியிருந்தேன். ஏனெனில், அவர்கள் சில முக்கியமான நிகழ்வுகளுக்கு சாட்சிகளாகவும், அதில் பங்கேற்றவர்களாகவும் இருந்தவர்கள். ஆனால், அது ஒரு பழைய பழமொழியை மீண்டும் நிரூபித்தது: நாம் எதை விரும்புகிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். அன்றிலிருந்து இன்று வரை, அதிகாரிகளின் நினைவுக் குறிப்புகள் வெள்ளமெனப் பெருகிவிட்டன.

இது குறித்து ஒருமுறை வெளியீட்டாளர் நண்பர் ஒருவரிடம் கேட்டேன்; அவர் “அதிகமான முன் பணம்,” என்றார். நிச்சயமாக, எல்லா அதிகாரிகளுக்கும் கைநிறைய முன்பணம் கிடைப்பதில்லை. அதற்கு அவர்கள் பிரபலங்களாக இருக்க வேண்டும். அதாவது, ஓய்வு பெறுவதற்கு முன்பு அவர்கள் வகித்த கடைசி பதவி ஊடகங்களால் அதிகம் பேசப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, முதலில் நிதிச் செயலாளர் பின்னர் ரிசர்வ் வங்கி ஆளுநர், அல்லது முதலில் உள்துறைச் செயலாளர் பின்னர் அமைச்சரவைச் செயலாளர், அல்லது முதலில் தூதர் பின்னர் வெளியுறவுச் செயலாளர் என இரண்டு பதவிகளை வகித்திருந்தால், அவர்களுக்குக் கிடைக்கும் முன்பணம் தாராளமாக இருக்கும். ஒரு புத்தகம் பெஸ்ட் செல்லர் ஆகிவிடும் என்ற நம்பிக்கையில், விரைவாகப் பணம் சம்பாதிக்க வெளியீட்டாளர்களிடையே ஏற்படும் போட்டியால் இது நிகழ்கிறது.

சரி, அது எப்படியோ போகட்டும், அதிகாரிகளின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தோ அல்லது அவர்களின் கர்வத்தைப் பார்த்தோ நாம் புகார் சொல்லக்கூடாது; சிலருக்கு இவை இரண்டுமே அதிகமாக இருந்தாலும் கூட. இதில் ஒரு ஆறுதலான விஷயம் என்னவென்றால், முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வரலாறும் உண்மைகளை ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது. ஆனால் வெளியீட்டாளர்களின் நிலை என்ன? இங்கேதான் கதையில் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. ஒரு அதிகாரியை அதிகார வர்க்கத்திலிருந்து வெளியே கொண்டு வந்துவிடலாம், ஆனால் அவரிடமிருந்து அந்த அதிகார வர்க்க புத்தியை வெளியே எடுக்க முடியாது. அவர்களின் இயல்பான எச்சரிக்கை உணர்வு அல்லது மிகச் சாதாரணமான தரம் (பெரும்பாலும் இரண்டுமே) வெளியீட்டாளரின் கனவில் மண்ணை அள்ளிப் போட்டுவிடும்.

நான் அனைத்து வகையான நினைவுக் குறிப்புகளையும் ஆர்வத்துடன் படிப்பவன், 100-க்கும் மேற்பட்ட புத்தகங்களைப் படித்திருக்கிறேன். பிரசுரிக்கப்படாத சிலவற்றைக் கூட வாசித்திருக்கிறேன். என்னால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும், இந்த புத்தகங்களில் 99 சதவீதம் முற்றிலும் ஏமாற்றத்தையே தருகின்றன. இத்தகைய புத்தகங்களில் ஓடும் எனக்குப் பின் பிரளயம் என்ற அதீத மனப்பாங்கைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தாலும், பெரும்பாலானவை வாசகரின் நேரத்தையும் பணத்தையும் வீணடிப்பவை. இதற்காக வெளியீட்டாளர்களை நினைத்து என் மனம் வருந்துகிறது. நான் தொழிலதிபர்கள், காவல் அதிகாரிகள், ராணுவத்தினர், மருத்துவர்கள் மற்றும் இதர நிபுணர்களின் சுயசரிதைகளையே அதிகம் விரும்புகிறேன். அவர்கள் சுயநலம் குறைந்தவர்களாகவும் அதிக நேர்மையுடனும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அரிதாகவே நினைவுக் குறிப்புகளை எழுதுகிறார்கள்; ஏனெனில் வெளியீட்டாளர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்பு முக்கியமான பதவிகளில் இருந்த கவர்ச்சிகரமான நபர்களிடம் மட்டுமே ஆர்வம் காட்டுகிறார்கள். நிச்சயமாக சில விதிவிலக்குகள் உள்ளன, ஆனால் பொதுவாக இதுவே நிலைமை.


பத்திரிகையாளர்கள் தங்கள் நினைவுக் குறிப்புகளை எழுதுவதில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது. அவர்களிடமும் சொல்வதற்குப் ஏராளமான கதைகள் உள்ளன, குறிப்பாகத் தொலைக்காட்சி செய்தியாளர்களிடம். 2020 வரை நான் பட்ஜெட் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தேன், ஒரு ஓரமாக இருந்து கவனித்ததில் அவர்களின் வேலை எவ்வளவு கடினமானது என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பல விஷயங்களைக் காண்கிறார்கள்; அவற்றைப் படிக்க நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன். ஒரு ஒளிப்பதிவாளர் சொன்ன ஒரு சுவாரசியமான கதை இது: ஒரு புதிய நிருபர் மற்றும் மிகவும் பிரபலமான ஒரு நிதி அமைச்சர் பற்றிய கதை. பதின்பருவத்தைச் சற்றே தாண்டிய அந்த நிருபர், அமைச்சரிடம் ஒரு கருத்து வாங்குவதற்காக அனுப்பப்பட்டார். நிருபர் அமைச்சரைச் சில வார்த்தைகள் பேச வைத்துவிட்டு, பிறகு மிகவும் அப்பாவித்தனமாகக் கேட்டார், “ஐயா, உங்கள் பெயர் என்ன? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நான் நேயர்களுக்குச் சொல்ல வேண்டும்.” ■


RJ MANTRA ENGLISH SCHOOL
(Affiliated to CISCE-TN 082)
CISCE
ADMISSIONS
OPEN
NURTURING CHAMPIONS IN
CLASSROOMS AND ON FIELDS
Every child deserves a chance to shine
ENROLL NOW
Contact Us
9489067789
www.rjmantra.com

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27


ADVT.

UNITE FOR GOOD





Rotary Club of VIRUDHUNAGAR



kauvery hospital Tirunelveli

# ROTARY KARMAVEERAR KAMARAJAR HEART CARE BUS



**GG- 2341081 - Heart care bus is a Clinic on wheels.**

It goes to multiple locations throughout the Rotary International District 3212.

Rotary International District 3212 shares the vision of 'Karmaveerar Bharat Ratna K.Kamarajar' in uplifting the quality of life in rural Tamilnadu. Rotary Heart Care bus takes the privilege to serve the underprivileged villages and towns to take Heart Check-ups and save their lives by availing due medical treatment for heart problems.

## HEART CARE BUS FEATURES

- Digitalized BMI Vital Screening
- Electro Cardiogram (ECG)
- Echo Cardiogram
- Defibrillator
- Physician Consultation
- Telemedicine Consultation

## HEART CAMP DETAILS As on 10.02.2026

| | |
|---|---|
| Total No.of Camps | 96 |
| No.of Beneficiaries | 11,220 |

| No.of ECG Done | No.of ECHO Done | No.of Patients Referred to Hospital |
|---|---|---|
| 4706 | 2519 | 943 |



**Rotary International Partner : RID 5300**
**Rotary Club of LAS VEGAS WON**

Primary Contact :
Rtn.A.S.P.Arumugaa Selvan

International Partner
PDG.Rtn.Chehab El Awar



LEKHA ads/March 26/BW

Clubs to Contact for Heart Care Camp **Rtn. T. SUDALAIVEL** - +91 97509 55445 Rotary club of Virudhunagar Idhayam